# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

மூன்றாம் காலாண்டு, 2025

# யாத்திராகமம்


**1** ஒடுக்குதல்: மோசேயின் பின்னணியும் பிறப்பும் (ஜூன் 28–ஜூலை 4) .......................**5**

**2** எரிகிற முட்செடி (ஜூலை 5–11) .......................................................................**13**

**3** சிக்கலான துவக்கம் (ஜூலை 12–18) ...................................................................**21**

**4** வாதைகள் (ஜூலை 19–25) ...............................................................................**29**

**5** பஸ்கா (ஜூலை 26–ஆகஸ்ட் 1) ..........................................................................**37**

**6** சிவந்த சமுத்திரத்தின் வழியாய் (ஆகஸ்ட் 2–8) ........................................................**45**

**7** ஜீவ அப்பமும் ஜீவத் தண்ணீரும் (ஆகஸ்ட் 9–15) ......................................................**53**

**8** சீனாயில் உடன்படிக்கை (ஆகஸ்ட் 16–22) ............................................................**61**

**9** கற்பனையின்படி வாழுதல் (ஆகஸ்ட் 23–29) ..........................................................**69**

**10** உடன்படிக்கையும் அதன் செயல்படமும் (ஆகஸ்ட் 30 – செப்டம்பர் 5) ...................**77**

**11** விசுவாசத்துரோகமும் பரிந்துபேசுதலும் (செப்டம்பர் 6–12) ........................................**85**

**12** உம் மகிமையை எனக்குக் காண்பித்தருளும் (செப்டம்பர் 13–19) ...............................**93**

**13** ஆசரிப்புக்கூடாரம் (செப்டம்பர் 20–26) .................................................................**101**



பாட ஆசிரியர்

**ஜிரி மோஸ்கலா**

தமிழாக்கம்: மார்சல் ஐசக், எஸ்றா டேவிட்




**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

**சென்னை – 600 048**

# யாத்திராகமம்: வாக்குத்தத்த தேசத்திற்குப் பயணம்



யாத்திராகமப் புத்தகத்தின் தேவன் அன்புள்ளவர்; நியமிக்கப்பட்ட காலத்தில், தம் மகத்தவமான செயல்களால் தம் மக்களை இரட்சித்து, விடுவித்தார். (ஆதி 15:12–16). எகிப்திலிருந்து புறப்பட்டது, சிவந்த சமுத்திரத்தின்வழியாக நடந்துசென்றது ஆகியவை தனித்துவமான முக்கிய நிகழ்வுகள்; தேவனுடைய அற்புதமான, ஆச்சரியமான செயல்கள். சிலுவை நிகழ்வுக்குமுன் இஸ்ரவேலில் அவ்வளவு மகத்துவமான, மகிமையான நிகழ்வுகள் ஏதும் நிகழ்ந்ததில்லை. அந்தப் புத்தகமானது மோசே எழுதின சுவிசேஷம்.

எபிரெய மக்கள் அடிக்கடி பின்வாங்கிப் போனாலும்கூட, அவர்கள்மீது அக்கறை காட்டவும், பாதுகாக்கவும் தாம் விரும்பியதை எடுத்துக்காட்ட தேவன் மீண்டும்மீண்டும், அற்புதமாகச் செயல்பட்டார். அவர்கள் தங்கள் அறிவாலும் உணர்ச்சியாலும் அவரது இரக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. தேவன் தம் ஓங்கிய புயத்தால் தம் மக்களை விடுதலைக்கு வழிநடத்தினார். அது இதற்கு முன் நடந்திராத நிகழ்வு. தேவன் தலையிட்டுச் செய்த இந்த அற்புதங்களே அவர்கள் எகிப்திலிருந்து கானானைநோக்கி தேவனோடுகூட சென்ற புதிய பயணத்தின் துவக்கமாக இருந்தது.

யாத்திராகமத்தில் மோசே முக்கியப் பங்காற்றினாலும், இந்தப் புத்தகம் மோசையைப் பற்றினதல்ல, தேவனைப் பற்றியது; அன்பும், சத்தியமும், நியாயமும், விடுதலையும், மன்னிப்பும் உடைய, நமக்காக இறுதியில் சிலுவைக்குச் சென்ற தேவனைப் பற்றியது. யாத்திராகமப் புத்தகத்தை ஆராய்வதன்மூலம், நம் தேவன் உண்மையில் எப்படிப்பட்டவர் என்கிற ஒரு தனித்துவமான காட்சியைப் பெறமுடிகிறது.

அவர் உண்மையில் எப்படிப்பட்டவர்? தம் மக்கள் உண்மையற்றவர்களாக இருந்தபோதிலும், தாம் உண்மையாக இருந்த தேவன். அவர்கள் அவருக்கு எதிராக இருந்தபோதிலும், அவர் அவர்களுக்கு உதவியாக இருந்தார். மீண்டும்மீண்டும் அவர்கள்மீது இரக்கம்காட்டினார், அவர்களை ஊக்கப்படுத்தினார், சீர்திருத்தினார், அறிவுறுத்தினார். அவர்களை அற்புதமான வகையில் வழிநடத்தினார்; அவர்கள் தம்மையும் தம் குணத்தையும் அறிந்து, தம்மீது அன்புவைத்து, தங்களது நலனை முன்னிட்டு தாங்களாகவே தம்மைத் தொழவும், தமக்குக் கீழ்ப்படியவும் ஆசைப்பட்டார்.

மோசேயின் தேவன் உறவுகளின் தேவன். தேவனுடைய முக்கிய நோக்கம் எதையும் சாதிப்பதோ ஏதாவது திட்டத்தை நிறைவேற்றுவதோ அல்ல; மாறாக,

*தாம் தெரிந்துகொண்ட மக்களான இஸ்ரவேலருடன் அர்த்தமிக்க ஒரு உறவை உருவாக்குவதே அவரது முக்கிய நோக்கம். இந்த ஆழமான ஐக்கியத்தை உரு வாக்கவே அவர்களை சீனாய்க்கு வழிநடத்தினார்.*

*முற்காலத்தில் தேவமக்களுக்கு நிகழ்ந்த சம்பவங்கள் நமக்கு ஒரு விளக் கப்பாடம் என்றும், அவர்களது தவறுகளிலிருந்து நாம் அறிவடைந்து, ஆண்ட வரை உண்மையோடு பின்பற்ற இன்று உதவுவதாகவும் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்: 'இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்ப வித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழு தப்பட்டும் இருக்கிறது'. 1கொரி 10:11. இந்தக் கடந்தகால நிகழ்வுகள் நமக்கு ஒரு எச்சரிப்பாகவும், மறக்கக்கூடாத அறிவுரை ஆதாரமாகவும் இருக்கவேண்டும். அவற்றை வாசிக்கவேண்டும், ஆராயவேண்டும், அவற்றிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும், ஏனென்றால் சூழ்நிலைகள் வேறுபட்டாலும்கூட, அவற்றின் பின்னாலுள்ள ஆவிக்குரிய நியதிகள் மாறாதவை.*

*இந்த 13 வாரங்களில் யாத்திராகமப் புத்தகத்தை திட்டமிட்டு ஆராயப் போகிறோம். இந்தப் புத்தகம் வாராந்திர வாசிப்புகளாக, பல்வேறு அளவுகளில், கருத்துரீதியாக ஆராய்வதற்கு வசதியாகப் பிரிக்கப்பட்டுள்ளன: (1) எகிப்தில் அடிமைத்தனம், மோசேயின் பிறப்பு, மோசேயின் முதல் 40 வருடங்கள். (யாத் 1;2). (2) மோசேக்குக் கொடுக்கப்பட்ட வேலை (யாத் 3; 4). (3) சிக்கல்கள்: வாழ்க்கை மோசமாகும்போது (யாத் 5; 6). (4) முதல் ஒன்பது வாதைகள் (யாத் 7-10). (5) பத் தாவது வாதையும் பஸ்கா கொண்டாட்டமும் (யாத் 11;12). (6) எகிப்திலிருந்து விடுவிக்கப்படுதலும், சிவந்த சமுத்திர அனுபவமும் (யாத் 13-15). (7) சீனாய் மலை நோக்கிப் பயணம் (யாத் 16-18). (8) தேவனுடைய உடன்படிக்கை எனும் பரிசும் பத்துக்கட்டளையும் (யாத் 19, 20). (9) தேவ பிரமாணம் செயல்படுத்தப் படுத்தப்பட்டது (யாத் 21-23). (10) உறுதியாக்கப்பட்ட உடன்படிக்கையும் ஆசரிப் புக்கூடார வரைபடமும் (யாத் 24-31). (11) பொன்கன்றுக்குட்டி விசுவாசத்துரோக மும் மோசேயின் பரிந்துபேசுதலும் (யாத் 32). (12) தேவனுடைய சுயவெளிப்பாடும் மோசேயின் பிரகாசிக்கிற முகமும் (யாத் 33, 34). (13) ஆசரிப்புக்கூடாரம் கட்டப் பட்டு, பிரதிஷ்டைபண்ணப் படுதல் (யாத் 35-40). ஒவ் வொரு வாரமும் குறிப்பிடப் பட்ட அதிகாரங்களிலிருந்து முக்கியப்பகுதிகளையும் நிகழ்ச்சிகளையும் ஆராய்வோம்.*

**எகிப்திலிருந்து புறப்பட்டது, சிவந்த சமுத் திரத்தின் வழியாக நடந்துசென்றது ஆகியவை தனித்துவமான முக்கிய நிகழ்வுகள்; தேவனுடைய அற்புதமான, ஆச்சரியமான செயல்கள்.**

*தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கும், மரணத்திலிருந்து ஜீவனுக்கும், வனாந்தரத்திலிருந்து புதிய எருசலேமுக்கும் வழிநடத்த தேவன் விரும்பினதை நமக்கு நினைவூட்டுகிற இந்த முக்கியமான புத்தகத்தை நாம் ஆராயும்போது கிருபையுள்ள நம் தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. எபிரெயர் 12:22.*

**ஜிரி மோஸ்கலா அவர்கள் பழைய ஏற்பாட்டு விளக்கவுரை மற்றும் இறையியல் பேராசிரியராகவும், ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் செவந்த்-டே அட்வெண்ட் டிஸ்ட் இறையியல் கல்லூரி பேராசிரியராகவும் இருக்கிறார்.**

# மனன வசனங்கள்

1 இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் தாம் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக் கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார். யாத் 2:23-25.

2 அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட் டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன் என்றார். யாத் 3:7,8.

3 பின்பு, மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் போய்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிடவேண்டும் என்று சொல்லுகிறார் என்றார்கள். அதற்குப் பார்வோன்: நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போக விடுவதில்லை என்றான். யாத்திராகமம் 5:1,2.

4 கர்த்தர் மோசேயைக் கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் கடினப்பட்டது; அவன் இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடவில்லை. யாத் 9:35.

5 அப்பொழுது உங்கள் பிள்ளைகள்: இந்த ஆராதனையின் கருத்து என்ன என்று உங்களைக் கேட்டால், இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்து போனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். யாத் 12:26,27.

6 அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான். யாத் 14:13,14.

7 அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்? பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினபடியால், அவர் உங்களுக்கு ஆறாம் நாளில் இரண்டுநாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார்; ஏழாம்நாளில் உங்களில் ஒருவனும் தன்தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன் தன் ஸ்தானத்திலே இருக்கவேண்டும் என்றார். அப்படியே ஜனங்கள் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்கள். யாத் 16:28-30.

8 நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள். யாத் 19:4-6.

9 அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன் என்று கண்டீர்கள். நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம் என்றார். யாத் 20:22,23.

10 மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவை யும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். யாத் 24:3.

11 அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான். யாத் 32:31, 32.

12 கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார். யாத் 34:6,7.

13 அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாப் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது. யாத் 40:34,38.

## பாடம் 1

ஜூன் 28-ஜூலை 4



# ஒடுக்குதல்: மோசேயின் பின்னணியும் பிறப்பும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 1:1–22; ஆதி 37:26–28; ஆதி 39:2, 21; அப் 7:6; கலா 3:16, 17; யாத் 2:1–25.

**மனன வசனம்:** இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் தாம் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார். யாத் 2:23–25.

இன்று ஒடுக்குதல், புறக்கணிப்பு, உபத்திரவம், அடிமைத்தனம், சீர்கேடு ஆகியவற்றிற்கு ஆளாகிறவர்கள் தங்கள் அனுபவத்திற்கு ஒத்த அனுபவங்களை யாத்திராகமப் புத்தகத்தில் காணலாம். கைவிடப்பட்டதாகவும், மறக்கப்பட்டதாகவும், அடிமைப்பட்டதாகவும் இன்று உணருகிறவர்கள் யாத்திராகமப் புத்தகத்தின்மூலம் நம்பிக்கைபெறலாம், ஏனென்றால் அந்த எபிரெயர்களை இரட்சித்த அதே தேவனால் இவர்களையும் இரட்சிக்கமுடியும்.

வாழ்க்கையில் காணப்படுகிற போராட்டங்கள், அநியாயங்கள், சோதனைகள்பற்றி யாத்திராகமப் புத்தகம் பேசுகிறது. உபத்திரவத்திலிருந்த தம் மக்களுக்காக தேவன் தலையிட்ட நிகழ்வுகள் அனைவருக்கும் ஊக்கமளிக்கமுடியும். தேவன் ஒடுக்கப்பட்டவர்களின் கூக்குரலைக் கேட்கிறார், அவர்களது போராட்டங்களைப் பார்க்கிறார்; அவர்களது கண்ணீரைக் காண்கிறார்; அவர்கள் வேதனையில் இருக்கும்போது உதவிசெய்கிறார்.

தம்மை நம்புகிறவர்களை விடுவிப்பதற்கு தேவனே முதலடி எடுத்து வைக்கிறார். அவர் கொடுப்பதை விசுவாசத்தால் ஏற்றுக்கொள்வதுமட்டுமே நம் வேலை. அதை அறிந்துகொள்ளவே யாத்திராகமப் புத்தகத்தை ஆராய வேண்டும், ஏனென்றால் இயேசு நம் எல்லாருக்காகவும் செய்திருப்பதை அது சுட்டிக்காட்டுகிறது. அது மீட்பையும் விடுதலையையும் இறுதி இரட்சிப்பையும்பற்றிய புத்தகம் - இவை அனைத்தையும் இயேசு கிறிஸ்துவையும் அவர் நமக்காகச் செய்தவற்றையும் விசுவாசித்து, நாம் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தடிக்கும் அந்தகாரத்திற்கும்மத்தியில், நாம் தேவனை நோக்கிப்பார்த்தால், நம்மை நித்திய வாக்குத்தத்த தேசத்திற்குள் வழிநடத்திச் செல்லும்போது, அவரது பிரசன்னத்தையும் அக்கறையையும் உதவியையும் உணரலாம்.

*2025 ஜூலை 5 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# எகிப்தில் தேவமக்கள்

யாத்திராகமப் புத்தகம் எபிரெய மொழியில் ஷிமாட் என்று அழைக்கப்படுகிறது; அதற்கு ‘‘நாமங்கள்’’ என்று அர்த்தம், அந்தப் பழங்கால ஆவணத்தின் முதல்வசனத்தில் ‘நாமங்களாவன’ எனும் வார்த்தை வருகிறது. கோத்திரப் பிதாவான யாக்கோபின் குடும்பத்தாரின் பெயர்கள் அங்கே பட்டியலிடப்படுகின்றன.

**யாத் 1:1-7இல் காணப்படும் முக்கிய சத்தியம் என்ன?**

தேவன் ஆசீர்வதித்ததை ஞாபகப்படுத்தி யாத்திராகமப் புத்தகம் துவங்குகிறது. கோத்திரப்பிதாவாகிய யாக்கோபும் அவரது குடும்பத்ினரும் எகிப்தில் குடியேறின சமயத்தில், அவர்களின் எண்ணிக்கை 70 மட்டுமே (ஆதி 46:27, யாத் 1:5); ஆனால் இஸ்ரவேலர்கள் ‘மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள்; தேசம் அவர்களால் நிறைந்தது.’ யாத் 1:7. ஆனால் அவர்கள் அங்கிருந்து யாத்திரையாகக் கிளம்பின சமயத்தில் அவர்களது எண்ணிக்கை ‘பிள்ளைகள்தவிர ஆறுலட்சம் புருஷராயிருந்தார்கள்’. யாத் 12:37.

**இஸ்ரவேலர்கள் யாத்திரையாகப் புறப்படவிருந்த சமயத்தில் அவர்களது நிலை என்ன? யாத் 1:8-11.**

எகிப்தில் இஸ்ரவேல் புத்திரர் இக்கட்டான ஒரு நிலையில் இருந்ததாக வேதாகமம் சித்திரிக்கிறது. எகிப்திய ஆளோட்டிகள் எபிரெயர்களை அடிமைகள்போல நடத்தியதாகவும், அவர்களை ஒடுக்கி வேலைவாங்கியதாகவும் யாத்திராகமப் புத்தகம் துவங்குகிறது. ஆனால் அப்புத்தகம் முடியும்போது, இஸ்ரவேலருடைய பாளயத்தின் நடுவே, ஆசரிப்புக்கூடாரத்தில், தேவனுடைய சமாதானமான, ஆறுதலான பிரசன்னம் காணப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. யாத் 40. இந்த இரண்டு முனைகளுக்கும் இடையே, தேவனுடைய வெற்றி விவரிக்கப்படுகிறது. தேவன் தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டது, சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்தது, அன்றைய வலிமைமிக்க இராணுவத்தைத் தோற்கடித்தது ஆகிய சம்பவங்களில் தீமையின் வல்லமைகளுக்கு எதிராக தேவன் அற்புதமாக வெற்றிபெற்றதைக் காணலாம்.

ஒடுக்கினவர்கள் எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் ஒடுக்கப்பட்டவர்கள் பலுகிப் பெருகினார்கள் என்கிற முரணையும் அந்தச் சம்பவம் வலியுறுத்துகிறது. யாத் 1:12. அதாவது, மனித செயல்பாடுகள் எப்படி இருந்தாலும், ஆட்சிசெய்கிறவர் தேவன்; மனிதபார்வைக்கு சூழ்நிலைகள் நம்பிக்கையற்று தோன்றினாலும் தேவன் தம் மக்களை இரட்சிப்பார்.

**யோசேப்பை அறியாத ஒரு புதிய ராஜன் தோன்றினான். சூழ்நிலைகள் சாதகமாக இருந்தாலும்கூட, அவற்றை நாம் சாதகமாகக் கருதக்கூடாது என்பதுபற்றி இந்தச் சம்பவம் சொல்வது என்ன?**

# வரலாற்றுப் பின்னணி

கானானில் பஞ்சம் உண்டான சமயத்தில், யாக்கோபின் குடும்பத்தார் எகிப்திற்குச் சென்றபோது, எகிப்தின் ராஜா யோசேப்பின்நிமித்தமும் அவர் எகிப்தியர்களுக்குச் செய்த எல்லா நன்மைகளின்நிமித்தமும் அவர்களிடம் நட்புபாராட்டினான்.

'பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்' ஆதி 41:41-43.

**எகிப்தில் யோசேப்பின் நிலைமை துவக்கத்தில் மோசமாக இருந்தாலும், பின்னர் வெற்றிகரமாக மாறியதற்கு முக்கியக் காரணம் என்ன? ஆதி 37:26–28; 39:2, 21.**

யோசேப்பு வாழ்வின் வரலாற்றுப் பின்னணி பின்வருமாறு இருக்கலாம்: 'யோசேப்பை அறியாத' புதிய ராஜன் அஹ்மோஸ் என்பவர். (கிமு 1580-1546). அவருக்கு அடுத்து வந்த அமென்ஹோடெப் (கிமு 1549-1532) என்பவர்தான் இஸ்ரவேலருக்குப் பயந்து, அவர்களை ஒடுக்கினார். பிறகு வந்த தட்மோஸ் (கிமு 1532-1514) என்பவர் எபிரெய ஆண்பிள்ளைகளை எல்லாம் கொல்லுவதற்குக் கட்டளைபோட்டார். அவரது மகளான ஹட்ஷப்சட் (கிமு 1504-1482) என்கிற இளவரசிதான், மோசேயை தன் மகனாகத் தத்தெடுத்தவர். ஹட்ஷப்சட்டுடன் சிலகாலம் இணை ஆட்சியாளராக இருந்த பார்வோனாகிய மூன்றாம் தட்மோஸ் (கிமு 1504-1450) என்பவர்தான், இஸ்ரவேலர் புறப்பட்ட சமயத்தில் பார்வோனாக இருந்தவர்.

மிகச்சரியாகக் கணக்கிட்டால், யாத்திரை அனுபவம் கிமு 1450இல், மார்ச் மாதத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும். யாத்திரை அனுபவத்தின் காலக்கட்டம் பற்றிப் புரிந்துகொள்ள பின்வரும் வேத வசனங்களை வாசியுங்கள்: ஆதி 15:13-16; யாத் 12:40,41; நியா 11:26; 1இராஜா 6:1; அப் 7:6; கலா 3:16,17.

யாத்திராகமத்தின் முதல் அதிகாரம் ஒரு நீண்ட காலக்கட்டத்தை உள்ளடக்கியது; யோசேப்பின் தகப்பனாகிய யாக்கோபு தன் குடும்பத்துடன் எகிப்திற்குச் சென்ற காலம்முதல், பார்வோன் அவர்களைக் கொல்ல கட்டளையிட்ட காலம் வரையிலான நிகழ்வுகளைப் பேசுகிறது. அந்தக் காலக்கட்டம் எத்தனை வருடங்கள் என்பதுபற்றி சில விவாதங்கள் உள்ளன; ஆனால், ஒரு அந்நிய தேசத்தில் தம் மக்கள் அடிமைப்பட்டு இருந்தாலும், தேவன் அவர்களை மறந்துவிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அதாவது, எகிப்தில் எபிரெயர்கள் எப்படி இருந்தார்கள் என்பதுகுறித்த பல விபரங்கள் மறைபொருளாக இருந்தாலும், அந்தப் புத்தகத்தின் பக்கங்களில் தேவ வெளிப்பாட்டை தொடர்ச்சியாகக் காணமுடிகிறது. 1கொரி 13:12. சூழ்நிலைகள் எவ்வளவு மோசமாகத் தெரிந்தாலும், தேவன் எப்போதும் நம்மோடு இருக்கிறார்; எனவே, நாம் எவ்வளவு மோசமான நிலையில் இருந்தாலும், தேவனை நம்பலாம்.

# எபிரெய மருத்துவச்சிகள்

ஆதியாகமத்தின் போதனைகளை ஏற்றுக்கொள்ளாமல் யாத்திராகமத்தைப் புரிந்துகொள்ளவே முடியாது. யூதர்கள் எகிப்தில் குடியேறினார்கள், மிகுந்த செழிப்பையும் சமாதானத்தையும் பெற்றிருந்த நாட்கள் போய், அடிமைப்படுத்தப்பட்டார்கள்.

தேவன் தம் மக்களை அவர்களுடைய பிரச்சினைகளிலேயே விட்டுவிட்டதுபோலத் தெரிந்தாலும், அவர் அப்படிச் செய்யவில்லை. எபிரெய மக்களில் பலர் தங்கள் இக்கட்டான நிலையால் நம்பிக்கை இழந்தது உண்மைதான். ஆனாலும் அந்த இக்கட்டான காலத்திலும், தேவன் தம் மகத்துவ கரத்தால் அவர்களுக்கு உதவ முன்வந்தார். நம் ஆண்டவர் தம்மைப் பின்பற்றுகிறவர்களை பின்வருமாறு ஊக்குவிக்கிறார்: 'ஆபத்துக்காலத்தில் என்னைநோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்'. சங் 50:15.

**உண்மையுள்ள மருத்துவச்சிகள் ஆற்றின முக்கியப் பங்கு என்ன? அவர்கள் ஏன் வரலாற்றில் நினைவுகூரப்படுகிறார்கள்? யாத் 1:9-21.**

எந்தப் பார்வோனுடைய பெயரும் யாத்திராகமப் புத்தகத்தில் சொல்லப்படவில்லை. 'பார்வோன்' என்பது ஒரு பட்டம்; அதற்கு 'ராஜா' என்று அர்த்தம். பார்வோனை எகிப்தியர்கள் பூமியிலுள்ள தேவன் என்றும், ரா கடவுள் (அல்லது ஒசிரிஸ் அல்லது ஹோரஸ் கடவுளின்) குமாரன் என்றும் கருதினார்கள். ரா கடவுள் எகிப்தின் மிகமுக்கிய கடவுளாக, சூரியக் கடவுளாகக் கருதப்பட்டது.

இந்தக் 'கடவுள்' மிகுந்த வல்லமைபடைத்ததாகக் கருதப்பட்டாலும், அந்த எபிரெய மருத்துவச்சிகளின் மனச்சாட்சிகளை மாற்றமுடியவில்லை. எந்தப் பார்வோனின் பெயரும் சொல்லப்படாத நிலையில், இந்த இரண்டு மருத்துவச்சிகளான சிப்பிராள், பூவாள் ஆகியோரின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. யாத் 1:15. அவர்கள் கர்த்தருக்குப் பயந்ததால் மிக உயர்வாகக் கருதப்பட்டார்கள். பார்வோனின் கேடான கட்டளைக்கு அவர்கள் இணங்கவில்லை, ஏனென்றால் பூலோக அரசன் ஒருவனுடைய கட்டளைகளைவிட தேவனை அதிகமாக மதித்தார்கள். அப் 5:29. அதனால், தேவன் அவர்களுடைய குடும்ங்களைத் தழைக்கச்செய்து, அவர்களை ஆசீர்வதித்தார். உண்மைத்தன்மைக்கு எவ்வளவு வல்லமையான சாட்சி இது! இந்தப் பெண்களுக்கு எவ்வளவு தூரம் இறையியல் தெரியுமோ தெரியவில்லை; ஆனால் சரியானதைச் செய்யத் தீர்மானித்தார்கள்.

தன் சதித்திட்டம் தோற்றுப்போனதை பார்வோன் கண்டபோது, எபிரெயர்களுக்குப் பிறக்கிற ஆண்பிள்ளைகளை எல்லாம் கொல்லும்படி கட்டளையிட்டான். ஒருவேளை ஹபி கடவுளுக்கு காணிக்கையாக அவர்களை நைல் நதிக்குள் வீசும்படி சொல்லியிருக்கலாம்; அந்தக்கடவுள் நைல் நதியின் கடவுளாகவும், இனப்பெருக்கத்தின் கடவுளாகவும் கருதப்பட்டது. யூதர்களைக் கொல்ல கட்டளை போடப்பட்டதாக இங்குதான் முதல்முறை வருகிறது. எபிரெயர்களை அடக்கவும், ஆண் வாரிசுகளை எல்லாம் வேரோடு அழிக்கவும், பெண்களை எகிப்திய தேசத்தில் சேர்க்கவும், அதன்மூலம் எபிரெயர்களால் தங்களுக்கு நேரிட்டதாகக் கருதின அச்சுறுத்தலுக்கு முடிவுகட்டவும் மரணக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

---

**அந்த மருத்துவச்சிகள் சரியான செயலை அறிந்திருந்தது மட்டுமல்லாமல், அதன்படி நடக்கவும் தீர்மானித்தார்கள். இதில் நமக்குள்ள செய்தி என்ன?**

# மோசே பிறக்கிறார்

**மோசேயின் பிறப்பு அனுபவத்தில் தேவனுடைய ஏற்பாட்டையும் பாதுகாப்பையும் எவ்வாறு காணமுடிகிறது? யாத் 2:1-10.**

மோசேயின் பிறப்பும் வரலாற்றுப் பின்னணியும் பரபரப்பு மிகுந்தது; ஏனென்றால், அவர் புகழ்பெற்ற எகிப்திய பதினெட்டாம் வம்சத்தின் காலத்தில் வாழ்ந்தார். அந்த வம்சத்தின் காலத்திலிருந்த ஒரு ராஜா மூன்றாம் தட்மோஸ், இவர் 'எகிப்தின் நெப்போலியன்' என்று அழைக்கப்பட்டார் - பண்டைய எகிப்தின் மிகவும் பிரபலமான பார்வோன்களில் ஒருவராகப் பார்க்கப்பட்டார்.

கொலைச் சட்டம் அமுலில் இருந்தபோது பிறந்தாலும்கூட (யாத் 1:22), மோசே ஒரு 'அழகுள்ள' பிள்ளையாகப் பிறந்தார். யாத் 2:2. இதற்கான எபிரெய வார்த்தை ட்டோப், இதற்கு 'நல்லது' என்று அர்த்தம். இந்த எபிரெயச் சொல் வெறும் வெளிப்புற அழகைக் குறிக்கிற வார்த்தை அல்ல. உதாரணமாக, சிருஷ்டிப்பு வாரத்தில் தேவனுடைய கிரியைபற்றிக் குறிப்பிட இந்த வார்த்தைதான் வருகிறது, அங்கு தேவன் எல்லாம் 'நல்லது', 'மிகவும் நன்றாயிருந்தது' என்று சொன்னார். ஆதி 1:4,10,31.

ஒரு புதுச் சிருஷ்டியாகப் பிறந்த அந்த 'நல்ல' குழந்தை, தேவனுடைய திட்டத்தின்படி, வளர்ந்து பெரியவனானபிறகு, எபிரெயர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அழைத்துச் செல்லவிருந்தது. மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் பிறந்த அந்தக் குழந்தையின் எதிர்காலத்தை அப்போது யாராவது யோசித்துப் பார்த்திருக்க முடியுமா? ஆனாலும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு தாம் சொன்ன வார்த்தைகளை தேவன் நிறைவேற்றவிருந்தார். அவர்களுடைய சந்ததியாருக்கு வாக்குத்தத்த தேசத்தைக் கொடுப்பதாக அவர்களோடு உடன்படிக்கைபண்ணினார். யாத் 2:24,25. ஆம்; பல வருடங்கள் கழித்து, அதைச் செய்வதற்காக அந்த நல்ல குழந்தையை தேவன் பயன்படுத்தவிருந்தார்.

அதுவரையிலும், எகிப்திய இளவரசியான ஹட்ஷப்சட் மோசேயை தன் மகனாகத் தத்தெடுத்தாள். மோசே என்பது எகிப்தியப் பெயர்; அதற்கு 'இன்னாரின் மகன்' அல்லது 'இதிலிருந்து பிறந்தவர்' என்று அர்த்தம்; ஆஹ்-மோஸ் என்றால் ஆஹ்ஹின் மகன்; தட்-மோஸ் என்றால் தோத்தின் மகன். இவை சில உதாரணங்கள். அதனால்தான் எபிரெய மொழியில் அவரது பெயர் மோஷெஹ் எனப்படுகிறது, அதற்கு 'வெளியே எடுக்கப்பட்டவர்' என்று அர்த்தம். நதியிலிருந்து 'வெளியே எடுக்கப்பட்டு', அற்புதவிதமாக உயிர் காப்பாற்றப்பட்டவர்.

அவரது ஆரம்பக்கால வாழ்க்கைபற்றி அதிக விபரங்கள் இல்லை. அற்புதமாகக் காப்பாற்றப்பட்டு, ஹட்ஷப்சட்டால் தத்தெடுக்கப்பட்ட பிறகும், 12 வருடங்கள் தன் உண்மையான குடும்பத்தினருடன்தான் மோசே வாழ்ந்தார். யாத் 2:7-9. அவரை எகிப்தின் அடுத்த பார்வோனாக நியமிப்பதற்கான ஆயத்தமாக மிகச் சிறந்த எகிப்தியக் கல்வியைப் பெற்றார். ஆனால் தேவனையும் அவரது சத்தியத்தையும்பற்றின அறிவுதான் முக்கியம் என்பதால், இந்தக் கல்வி எவ்வளவு தூரத்திற்கு பயனற்றதாக, ஏன் அதற்கு எதிராகச் செயல்பட்டது என்பதை யோசியுங்கள்!

---

**உண்மையிலேயே முக்கியத்துவம் இல்லாத, இறுதியில் பயனற்ற எத்தனைக் காரியங்களைக் கற்றுக்கொண்டு வருகிறீர்கள்?**

# திட்டங்களில் மாற்றம்

**மோசேயின் வாழ்க்கை முற்றிலும் வேறொரு திசையில் செல்லும்படி நிகழ்ந்த காரியங்கள் என்ன? யாத் 2:11-25. இந்தச் சம்பவத்திலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?**

மோசே என்ன செய்யவிருந்தார்? எகிப்தின் மருட்சிகளுக்கும், அரசவையின் இன்பங்களுக்கும் மயங்கவிருந்தாரா? அல்லது பெரும்பாடுகளிலிருந்த தம் மக்களுடன் பாடுகளை அனுபவிக்கவிருந்தாரா? சீக்கிரமே இதில் ஒரு தீர்மானத்திற்கு வரும்படி சம்பவங்கள் நிகழ்ந்தன.

'பார்வோன் அந்தக் காரியத்தைக் கேள்விப்பட்டபோது, மோசேயைக் கொலைசெய்ய வகைதேடினான். மோசே பார்வோனிடத்தினின்று தப்பியோடி, மீதியான் தேசத்தில் போய்த் தங்கி, ஒரு துரவண்டையிலே உட்கார்ந்திருந்தான்.' யாத் 2:15. எகிப்தியனைக் கொன்றபிறகு, எகிப்தில் இருக்கமுடியாத ஒரு நிலைக்கு மோசே தள்ளப்பட்டார். எனவே அவரை எகிப்தின் சிங்காசனத்திற்கு உயர்த்தவும், ஒரு 'கடவுளாக்கவும்' திட்டங்கள் இருந்தாலும்கூட, அந்தத் திட்டங்கள் சீக்கிரமே முடிவுக்கு வந்தன. ஒரு பொய்க்கடவுளாக மாறுவதைவிட, மெய்யான தேவனைச் சேவிக்க மோசே தீர்மானித்தார். அவர் தப்பியோடிய சமயத்தில் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை நிச்சயமாகவே அறிந்திருக்கமாட்டார்.

'எகிப்தியனை மோசே கொன்றது சம்பந்தப்பட்ட அந்த முழு விவரமும் எகிப்தியர்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது, அது அதிகமாகப் பெரிதுபடுத்தப்பட்டு, பார்வோனின் காதுகளுக்கும் எட்டியது. அது காரணத்தோடு செய்யப்பட்ட ஒரு செயலாக ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது; அதாவது, எகிப்தியர்களுக்கு எதிராக மோசே தன் மக்களை வழிநடத்தி, அரசாங்கத்தைக் கவிழ்க்கவும், சிங்காசனத்தில் தன்னை அமர்த்த விரும்புவதாகவும், அவர் உயிரோடிருக்கிற வரையிலும் ராஜ்யத்திற்கு எந்தப் பாதுகாப்பும் இல்லையென்றும் காரணம் கற்பிக்கப்பட்டது. அவர் உடனடியாகக் கொல்லப்படவேண்டுமென ராஜா தீர்மானித்தான்; ஆனால் தனக்கு ஆபத்து நேரிட்டதை மோசே உணர்ந்து, அங்கிருந்து தப்பி, அரேபியா நோக்கி ஓடினார்'.

மோசே 120 வருடங்கள் வாழ்ந்தார். உபா 34:7, அவரது வாழ்க்கையை மூன்று 40 வருடங்களாகப் பிரிக்கலாம். முதல் 40 வருடங்கள் எகிப்தில், பெரும்பாலும் அரச அரண்மனையில் கழித்தார். இரண்டாவது 40 வருடங்களை மீதியான் தேசத்தில், எத்திரோவின் வீட்டில் கழித்தார். ஆனாலும் கடைசி 40 வருட அனுபவங்கள்தாம் மோசேயின் முதல் ஐந்து புத்தகங்களில் (இந்தக் காலாண்டு பாடத்திலும்) அதிகம் இடம்பிடித்துள்ளன, விக்கிரகாராதனையில் மூழ்கியிருந்த ஒரு உலகத்திற்கு, மெய் தேவனுடைய இயல்பையும் குணத்தையும் வெளிப்படுத்தி, அவர்களுக்குச் சாட்சிபகரும்படியான மோசேயின் ஆரம்பக்கால அழைப்பின் சம்பவத்தை அவை சொல்கின்றன. உபா 4:6-8.

---

**அந்த எகிப்தியனை மோசே கொல்லவேண்டும் என்பது தேவனுடைய திட்டமா? இல்லையென்றால், எந்தச் சூழ்நிலையையும் மாற்றி, அதை தம் நோக்கத்தை நிறைவேற்றுகிற ஒன்றாக தேவன் மாற்றமுடியும் என்பதை இந்தச் சம்பவம் கற்பிக்கிறதா? இந்த முக்கியச் சத்தியத்தைப் புரிந்துகொள்ள ரோமர் 8:28 எவ்வாறு உதவுகிறது?**

# மேலும் படிக்க:

எலன் ஒய்ட்டின் கோத்திரப்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் எனும் புத்தகத்தில், 241–251ம் பக்கங்களில், “மோசே” எனும் தலைப்பின் கீழுள்ள பகுதிகளை வாசியுங்கள், இந்த வாரம் ஆராய்ந்த வேத வசனங்கள்குறித்து முக்கியக் கருத்துகளை அறிந்துகொள்ளலாம்.

‘மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்’ என்று வேதவசனம் சொல்கிறது. யாத் 1:17. இந்த மருத்துவச்சிகளின் உண்மைத்தன்மையையும், மேசியாகுறித்த எதிர்பார்ப்புபற்றியும் எலன் ஒய்ட் மிகச்சரியாக விளக்கமளித்திருக்கிறார்: ‘பிறக்கும்போதே எபிரெயக் குழந்தைகளைக் கொல்லவேண்டும் என்கிற சட்டத்தை நிறைவேற்றுகிற வாய்ப்புள்ள வேலையைச் செய்துவந்த அந்தப் பெண்களிடம் இந்தக் கட்டளைகள் கொடுக்கப்பட்டன. இந்தக் காரியத்தில் மூலகாரணன் சாத்தான். இஸ்ரவேலரிலிருந்து அவர்களை விடுவிக்கிற ஒருவர் எழும்பவிருந்ததை அறிந்திருந்தான்; அவர்களுடைய பிள்ளைகளை அழிக்கும்படிக்கு ராஜாவை ஏவியதன்மூலம், அந்தத் தெய்வீக நோக்கத்தைத் தோற்கடித்துவிடலாமென நினைத்தான். ஆனால் அந்தப் பெண்கள் தேவனுக்குப் பயந்தார்கள்; அந்தக் கொடுமையான கட்டளையை நிறைவேற்ற துணியவில்லை. அவர்களுடைய தீர்மானத்தை தேவன் அங்கீகரித்து, அவர்களைச் செழிக்கச்செய்தார்’.

இவை அனைத்திலும் நற்செய்தி என்னவென்றால், சாத்தான் திட்டங்கள் தீட்டினாலும், தேவனே வெற்றிபெற்றார், அந்த எதிரியை நொறுக்குவதற்கு உண்மையுள்ள மனிதர்களைப் பயன்படுத்தினார். நம் சத்துருவின் தேசத்தில்தான் நாம் வாழ்கிறோம், அவனை ‘பிரபு’ அல்லது ‘இந்த உலகத்தின் அதிபதி’ என்று இயேசுவே அழைத்தார். எபே 2:2; யோவான் 14:30. இந்தப் பதவியை ஆதாமிடமிருந்து நயவஞ்சகமாக சாத்தான் பறித்திருந்தான், ஆனால் இயேசு அவனை தம் வாழ்வாலும், சிலுவை மரணத்தாலும் தோற்கடித்தார். மத் 4:1–11; யோவான் 19:30; எபி 2:14. சாத்தான் இன்றும் உயிரோடு இருந்து, மும்முரமாகச் செயல்பட்டு வருகிறான், அந்தப் பிள்ளைகளைக் கொல்லுவதற்கு முயன்றதில் அது வெளிப்படுகிறது, ஆனாலும் அவன் அழிக்கப்படுவான். யோவான் 12:31; 16:11; வெளி 20:9,10,14. நற்செய்தி என்னவென்றால், வாழ்க்கையின் இக்கட்டுகளை தேவகிருபையால் மேற்கொள்ளமுடியும். பிலி 4:13. அந்தக் கிருபைதான் நம் ஒரே நம்பிக்கை.

---

## கலந்துரையாடக் கேள்விகள்

**1** *எபிரெயர்கள் எகிப்தில் வாழவும், ஒடுக்கப்படவும் தேவன் ஏன் அனுமதித்தார்? அவர்களுக்காக தேவன் தலையிடுவதற்கு ஏன் அதிககாலம் ஆனது? ஆனால் ஒவ்வொரு நபரும் அவர் வாழ்ந்த காலம் வரைக்கும்தான் ஒடுக்கப்பட்டார் என்பதையும் மறக்கக்கூடாது. அதாவது அந்த ஒட்டுமொத்த தேசமும் ஒடுக்கப்பட்ட காலம் அதிகமாக இருந்தாலும், ஒவ்வொரு நபரும் தான் வாழ்ந்த காலம் வரைக்கும்தான் ஒடுக்கப்பட்டார். பொதுவாக மனிதர்களின் உபத்திரவம்பற்றிப் புரிந்துகொள்வதற்கு இந்த வித்தியாசத்தை அறிந்திருப்பது ஏன் முக்கியம்?*

**2** *கடுங்கோபத்தால் ஒரு எகிப்தியனை மோசே கொன்றதையும்கூட தேவனால் பயன்படுத்த முடிந்ததுபற்றி அதிகமாக தியானியுங்கள். அவர் கொல்லாமல் இருந்திருந்தால் என்னவாகியிருக்கும்? எபிரெயர்கள் எகிப்தியர்களிடமிருந்து விடுவிக்கப்பட வழியில்லாமல் போயிருக்குமா? உங்கள் பதிலுக்கு காரணம் கூறுங்கள்.*



# எரிகிற முட்செடி

ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 18:3,4; யாத் 3:1–22; ஆதி 22:11,15–18; யாத் 6:3; யோவேல் 2:32; யாத் 4:1–31; ஆதி 17:10,11.

**மனன வசனம்:** அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன் என்றார். யாத் 3:7,8.

தேவ அழைப்பு நம் வாழ்க்கையின் போக்கையே மாற்றக்கூடியது. ஆனாலும், அந்த அழைப்பின்படி நடந்தால், தேவனுடைய பாதையே நாம் செல்ல வேண்டிய மிகச்சிறந்த வழி என்பதைக் கண்டுகொள்கிறோம். ஆனாலும் சிலசமயங்களில், தேவ அழைப்பை உடனே ஏற்றுக்கொள்வது எளிதாக இருப்பதில்லை.

அதற்கு ஓர் உதாரணம் மோசேக்கு தேவன் கொடுத்த அழைப்பு, எரிகிற முட்செடியில் தேவனைச் சந்தித்தபோது அந்த அனுபவம் துவங்கியது. எரிப்பு விதிகள்பற்றி மோசேக்கு எவ்வளவு தெரியுமோ நமக்குத் தெரியவில்லை, ஆனால் தான் காண்பது நிச்சயமாகவே ஓர் அற்புதமென உணர்ந்ததால்தான், அவருடைய கவனம் அங்கு ஈர்க்கப்பட்டது. ஒரு விசேஷித்த பணிக்காக தேவன் அவரை அழைத்தார். அந்த அழைப்பின்படி நடந்தால், அவரது வாழ்க்கையே மாறிப்போகும் என்கிற நிலையில், அந்த அழைப்புக்கு அவர் செவிகொடுப்பாரா என்பதுதான் கேள்வியாக இருந்தது. ஆரம்பத்தில், அந்த அளவுக்கு அதற்கு இணங்க அவர் விரும்பவில்லை.

உங்கள் வாழ்க்கையிலும் சில இலட்சியங்களுடன் இருந்திருப்பீர்கள், ஆனால் தேவன் அத்திட்டங்களை மாற்றியிருப்பார். நாம் பல வழிகளில் தேவனுக்கு பயனுள்ளவர்களாக இருக்கலாம் என்பது உண்மை என்றாலும், நம் வாழ்க்கையில் தேவ அழைப்பைப் பின்பற்றுவதும், அவரது வழிநடத்துதலின்படி செயல்படுவதும்தான் மிகவும் மனநிறைவான வாழ்க்கைக்கான பாதை. அவ்வாறு செய்வது எப்போதுமே எளிதல்ல, மோசேக்கும் அது எளிதாக இருக்கவில்லை, ஆனாலும் தேவன் நம்மை ஒரு திசையில் செல்லச் சொல்லும்போது நாம் எதிர்த்திசையில் செல்வது எவ்வளவு மூடத்தனம்!

*2025 ஜுலை 12 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# எரிகிற முட்செடி

மோசே மீதியான் தேசத்திற்குத் தப்பியோடின பிறகு, வாழ்க்கை ஓரளவுக்கு எளிதாக இருந்தது. அவருக்குத் திருமணமாகி, கெர்சோம் மற்றும் எலியேசர் என்று இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். யாத் 18:3,4. தன் மாமனும் மீதியான் தேசத்தின் ஆசாரியனுமாகிய எத்திரோவின் மிகப்பெரிய குடும்பத்தில் அங்கத்தினரானார். தாவீதைப்போல ஒரு மேய்ப்பனாக (2சாமு 7:8) 40 வருடங்களை ஆசுவாசமாகக் கழித்தார், அப்போது தேவ பிரசன்னத்தை குறிப்பாக இயற்கையில் வெளிப்பட்ட தேவ பிரசன்னத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

ஆனாலும் அந்தக் காலக்கட்டம் அவர் பூக்களையும், பாலைவனப் புதர்களையும் ரசிக்கிற காலமாகமட்டும் இருக்கவில்லை. தேவனோடு செலவிட்ட அந்த வருடங்கள் அவரை தலைமைத்துவப் பதவிக்கு ஆயத்தமாக்கின. அந்த அமைதியான பாலைவனப் பகுதியில், தேவனுடைய ஏவுதலின்கீழ் யோபு புத்தகத்தையும், ஆதியாகமத்தையும் எழுதுவதற்கு தேவன் அவரைப் பயன்படுத்தினார். மேலும் மாபெரும் போராட்டம், சிருஷ்டிப்பு, விழுகை, ஜலப்பிரளயம், கோத்திரப்பிதாக்கள், மிகமுக்கியமாக இரட்சிப்பின் திட்டம்பற்றின முக்கிய உட்கருத்துகளையும் தேவனிடமிருந்து மோசே பெற்றார். இவ்வாறு நம் சிருஷ்டிகரும் நம்மைத் தாங்கி நடத்துகிறவருமான தேவனைப்பற்றின மெய்யான அறிவையும், இந்த உலகத்தில் பேரழிவை உண்டாக்கின பாவத்தை தேவன் கையாளுகிற விதம்பற்றின அறிவையும் எல்லா மனிதர்களுக்கும் தெரிவிப்பதில் மோசே ஒரு கருவியாகச் செயல்பட்டார். தேவனுடைய ஏவுதலின்கீழ், மோசே நமக்கு அடிப்படையான விஷயங்களை ஆதியாகமப் புத்தகத்தில் சொல்லியிருக்காவிட்டால், வேதாகம வரலாறோ இரட்சிப்பின் வரலாறோ அர்த்தமிக்கதாகத் தெரியாது.

**'ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனும்' என்று மோசேயிடம் தம்மை தேவன் அறிமுகப்படுத்தினதிலுள்ள முக்கியத்துவம் என்ன? யாத் 3:1-6.**

---

அந்த முட்செடி எரிந்தும்கூட அது கருகாமல் இருந்ததை மோசே கண்டார். அதனால் அது ஓர் அற்புதம் என்றும், மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வு தனக்கு முன் நிகழ்கிறது என்றும் உணர்ந்தார். அதனருகே நெருங்கிச் சென்றபோது, தம்மைக் கனப்படுத்துகிற வகையில் பாதரட்சைகளைக் கழற்றும்படி தேவன் சொன்னார், ஏனென்றால் தேவபிரசன்னம் அந்த இடத்தை பரிசுத்தமாக்கியிருந்தது.

தேவன் தம்மை மோசேயிடம், 'ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனும்' என்று அறிமுகப்படுத்தினார். யாத் 3:6. தேவன் இந்தக் கோத்திரப்பிதாக்களிடம், அவர்களுடைய சந்ததியார் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பார்களெனச் சொல்லியிருந்தார், அந்த வாக்குறுதியை மோசே நிச்சயமாகவே அறிந்திருப்பார். எனவே, அதைச் சொல்வதற்கு முன்னரே, இனி சம்பவிக்கப்போவதையும், அதில் தன்னுடைய முக்கியப் பங்கையும் மோசே அறிந்துகொள்ளும்படியான வழியை தேவன் திறந்தார்.

---

**மோசே தன் பணியைச் செய்ய ஆயத்தமானதாக தேவன் தீர்மானிக்குமுன், மோசேக்கு 80 வருடங்கள் தேவைப்பட்டன. பொறுமைபற்றி இந்தச் சத்தியம் என்ன போதிக்கலாம்?**

# கர்த்தருடைய தூதனானவர்

'கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று' மோசேக்குத் தரிசனமானார். யாத் 3:2. ஆண்டவராகிய இயேசுதாமே 'முட்செடியின் நடுவிலிருந்து' மோசேயுடன் பேசினார். யாத் 3:4.

'கர்த்தருடைய தூதன்' என்கிற பட்டம் இயேசு கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுவது குறித்துக் குழம்ப வேண்டாம். தூதன் என்றாலே 'தூது கொண்டுசெல்பவர்' என்றுதான் அர்த்தம். அதற்கான எபிரெய வார்த்தை மலாக். சொல்லப்படுகிற பின்னணியை வைத்து அது மனித தூதுவனா அல்லது தேவ தூதுவனா என்று புரிந்துகொள்ள வேண்டும். மல் 3:1. வேதாகமத்தில் பல இடங்களில் 'கர்த்தருடைய தூதன்' என்பது தெய்வீக நபரைச் சுட்டிக்காட்டுகிறது. உதாரணத்திற்கு, ஆதி 22:11,15-18; ஆதி 31:3,11,13; நியா 2:1,2; நியா 6:11-22; சக 3:1,2. இந்தக் கர்த்தருடைய தூதன் கர்த்தருடைய நாமத்தில் பேசுகிறார், அதுமட்டுமல்லாமல், அவரே கர்த்தராகவும் இருக்கிறார். இயேசுதாம் பிதாவின் வார்த்தையை நமக்குத் தெரிவிக்கிற தேவ தூதுவர்.

**எகிப்தில் சிறைப்பட்டிருந்த இஸ்ரவேலர்நிமித்தம் தாம் ஏன் தலையிட விரும்பினதாக மோசேயிடம் தேவன் சொன்னார்? யாத் 3:7-12.**

எகிப்தில் தேவமக்கள் அடைந்த உபத்திரவம்பற்றி அவர்கள் துக்கத்தால் முனகி, உதவிக்காக கூக்குரலிட்டதாக விவரிக்கப்படுகிறது. தேவன் அவர்களது கூக்குரலைக் கேட்டு, இரங்கினார். யாத் 2:23-25. அவர்களை 'என் ஜனம்' என்று சொன்னார். யாத் 3:7. அதாவது, சீனாயில் உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதற்கு முன்னரே அவர்கள் அவரது மக்கள்தாம், அவர்களுடைய பிதாக்களுக்கு அவர் வாக்குரைத்திருந்தபடி, அவர்கள் கீழ்ப்படிந்தால், கானான் தேசத்தில் அவர்கள் செழித்துவாழ வகைசெய்ய விரும்பினார்.

குறிப்பிட்ட ஒரு பணிக்காக பார்வோனிடம் மோசேயை அனுப்புவதாக அவரிடம் தேவன் சொன்னார்: 'நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன்; வா'. யாத் 3:10. இங்கும்கூட 'என் ஜனம்' என்றே அழைக்கிறார்.

எவ்வளவு அருமையான ஒரு பணியை தேவன் தம் தாசனுக்குக் கொடுத்தார்! உடனே மோசே 'நான் எம்மாத்திரம்?' என்று கேள்வி எழுப்புகிறார். அதாவது, அந்தச் சம்பவத்தின் முக்கியத்துவத்தையும், அதில் தன் பங்கையும் உணர்ந்ததும், தன்னைப் போன்ற ஒருவரை தேவன் எதற்காகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று மோசே யோசிக்கிறார். இங்கும்கூட அவரது குணத்தை நாம் உணரமுடிகிறது; அதாவது, அழைக்கப்பட்ட பணியைச் செய்வதற்கு தான் அபாத்திரன் என்கிற தாழ்மையான உணர்வு அவரிடம் இருந்தது.

**கர்த்தரைப் பின்பற்றவும், அவருக்காக எதையாவது செய்யவும் விரும்புகிற ஒருவரிடம், தாழ்மையும், 'அபாத்திரன்' என்கிற உணர்வும் காணப்படவேண்டியது ஏன் முக்கியம்?**

# கர்த்தருடைய நாமம்

**தேவனுடைய நாமம்பற்றி மோசே அறியவிரும்பினது ஏன்? அவருடைய நாமத்தி லுள்ள முக்கியத்துவம் என்ன? யாத் 3:13-22.**

மோசேயிடம் தேவன் தம்மை 'இருக்கப்போகிறவராகவே இருப்பேன்' அல்லது 'இருக்கிறவராகவே இருக்கிறேன்' என்றார். யாத் 3:14இல் பயன்படுத் துகிற அதே வினைச்சொல்லைத்தான் 'நான் (உன்னோடு) இருப்பேன்' என்று 12ம் வசனத்தில் சொல்லும்போதும் தேவன் பயன்படுத்துகிறார். அதாவது, தேவன் நித்தியமானவர்; அவர் எல்லாவற்றிற்கும் மேலானவர்; எல்லா இடங்களிலும் இருப்பவர்; மேலும் 'நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில்' வாசம் பண்ணுகிறவர். ஏசா 57:15. தேவனை 'யாவே' என்கிற பெயரில்தான் ஆரம்பம் முதலே மக்கள் அறிந் திருந்தார்கள்; ஒருவேளை அதன் ஆழமான அர்த்தம் புரி யாமல் இருந்திருக்கலாம். வேதாகமத்தில் இந்தப் பெயர் 'யேகோவா' என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. மோசேக்கும் யாவே என்கிற பெயர் தெரியும், ஆனால் அதன் ஆழமான அர்த்தம் தெரியாது. 'உம்முடைய நாமம் என்ன?' என்று அதன் ஆழமான அர்த்தத்தை அறிந்துகொள்ளவே மோசே கேட்டார்.

யாத் 6:3இல் உள்ள ஒரு குறிப்பு இதைப் புரிந்துகொள்ள உதவுகிறது; அங்கு தேவன், 'சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக் கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என் னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை' என்று சொன் னார். அதனால் ஆதாம், நோவா, ஆபிரகாம், கோத்திரப்பிதாக்கள் ஆகியோர் 'யாவே' என்கிற பெயரை அறிந்திருக்கவில்லை என்று அர்த்தமல்ல. ஆதி 2:4,9; ஆதி 4:1,26; ஆதி 7:5; ஆதி 15:6-8. மாறாக, அதன் ஆழமான அர்த்தத்தை அவர் கள் அறியவில்லை என்று அர்த்தம்.

யாவே என்கிற பெயர் சுட்டிக்காட்டுகிற உண்மை இதுதான்: அவர் ஒவ் வொருவரின் தனிப்பட்ட தேவன்; தம் மக்களுக்கான தேவன், உடன்படிக்கையின் தேவன். அவர் மனித விவகாரங்களில் தலையிடுகிற மிகவும் நெருக்கமான தேவன். சர்வ வல்லமையுள்ள தேவனாக தம் வல்லமையால் அற்புதவிதமாகத் தலையிட்டார். ஆதி 17:1. யாவே தேவனாக தம் அன்பாலும் அக்கறையாலும் தம் வல்லமையை விளங்கச்செய்கிறார். அதே தேவன்தாம் எலோஹிம் என்றும் அழைக்கப்படுகிறார். அதற்கு பராக்கிரமர், மகத்துவர், எல்லாவற்றிற்கும் மேலானவர், 'எல்லா மக்களின் தேவன்', 'பிரபஞ்சத்தை அரசாளுகிறவர்', 'சக லத்தையும் சிருஷ்டித்தவர்' என்று அர்த்தம்; மனிதர்களோடு அவருக்குள்ள உறவின் வேறு அம்சங்களை யாவே என்கிற பெயர் வெளிப்படுத்துகிறது.

தேவனுடைய நாமத்தை அறிந்திருப்பதிலும், அதைச் சொல்லுவதிலும் எந்த மந்திரச்சக்தியும் இல்லை. அவரது நாமத்தை அறிவிப்பதென்றால், அந்தத் தேவனையும், விசுவாசத்தோடு வருகிற அனைவருக்கும் அவர் அருளுகிற இரட்சிப்பையும்பற்றிய சத்தியத்தை மற்றவர்களுக்குப் போதிப்பதும் ஆகும். யோவேல் சொல்கிறார்: 'கர்த்தருடைய நாமத்தை கூப்பிடுகிற எவரும் இரட்சிக் கப்படுவார்கள்' யோவேல் 2:32. (எளிய மொழிபெயர்ப்பு)

---

**தம்மிடம் அர்ப்பணிக்கிற யாவரோடும் நெருக்கமான உறவு வைக்கவிரும்புகிற யாவேயுடன் உங்கள் வாழ்க்கையில் எந்தெந்த வழிகளில் அந்த நெருக்கத்தை அனுபவித்திருக்கிறீர்கள்?**

# நான்கு சாக்குப்போக்குகள்

**தான் தேவனுடைய தூதுவன் என்கிற நம்பிக்கை மோசேக்கு வலுக்கும்படி, என்னென்ன அடையாளங்களை மோசேக்கு தேவன் கொடுத்தார்? யாத் 4:1-17.**

தேவன் செய்யச் சொன்ன வேலையைச் செய்யாமல், மோசே மீண்டும் சாக்குப்போக்குச் சொல்கிறார். யாத் 3:11. எகிப்திற்குச் சென்று, பார்வோனைச் சந்திக்க விரும்பவில்லை. இதற்குமுன் ஒரு சமயம், எபிரெயர்களுக்கு உதவ தன் சொந்தப் பெலத்தால் முயன்று தோற்றிருக்கிறார். மேலும், அவரது சொந்த மக்களே அவரை தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை; அல்லது நம்பவில்லை. அதனால்தான் மூன்றாவதாக ஒரு ஆட்சேபனையை முன்வைக்கிறார்: 'அவர்கள் என்னை நம்பாமலும், நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், நான் என்ன செய்வேன்?' என்று கேட்கிறார். யாத் 4:1. அதற்கு ஒரு வழிசொல்லுமாறு தேவனிடம் கேட்கவில்லை, மாறாக தேவன் சொன்ன பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்காக அவ்வாறு சொல்கிறார்.

இஸ்ரவேலின் மூப்பர்களுக்கு முன்பாகவும், பார்வோனுக்கு முன்பாகவும் செய்துகாட்டும்படி இரண்டு அற்புதமான அடையாளங்கள் மோசேக்குக் கொடுக்கப்படுகின்றன: 1) அவரது கோல் பாம்பாக மாறுகிறது; பிறகு மீண்டும் கோலாக மாறுகிறது 2) அவரது கை குஷ்டரோகமாக மாறி, மீண்டும் குணமாகிறது. தேவன் தங்களுக்காகச் செயல்படுவதை மூப்பர்கள் நம்புவதற்கு அந்த இரண்டு அற்புதங்களும் உதவியாக இருக்கும். அப்படியும் நம்பாவிட்டால், தண்ணீரை இரத்தமாக மாற்றுகிற மூன்றாவது அற்புதம் கொடுக்கப்பட்டது. யாத் 4:8,9.

இந்த மகத்துவமான அற்புதங்களை மோசேக்கு தேவன் கொடுத்தபோதிலும், நான்காவது ஒரு சாக்குப்போக்குச் சொல்கிறார்: 'நான் வாக்குவல்லவன் அல்ல' என்கிறார்.

**மோசேக்கு தேவன் சொன்ன பதில் என்ன? தேவன் நம்மை எப்படிப்பட்ட சூழ்நிலைக்குள் அழைத்தாலும், நாம் என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி என்ன பாடங்களை அதிலிருந்து கற்றுக்கொள்ளலாம்? யாத் 4:10-18.**

இந்த நான்கு சாக்குப்போக்குகளும் தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள மோசே தயங்கினதைக் காட்டுகின்றன. அவருக்கு அங்கே செல்வதற்கு விருப்பமில்லை, அதை வெளிகாட்டாமல் 'நியாயமான' இந்த ஆட்சேபனைகளை முன்வைக்கிறார். முதல் மூன்று சாக்குப்போக்குகளும் கேள்விகளாக உள்ளன: 1) நான் எம்மாத்திரம்? 2) நீர் யார்? 3) அவர்கள் என்னை நம்பாவிட்டால் நான் என்ன செய்வது? நான்காவது ஆட்சேபனை ஒரு அறிக்கையாக உள்ளது: 'நான் வாக்குவல்லவன் அல்ல'. இவை அனைத்திற்குமே தேவன் பதிலளித்தார், அற்புதமான தீர்வைச் சொன்னார். இந்தச் சாக்குப்போக்குகளுக்கு பதிலளிக்கும் விதமாக அநேக அற்புதமான வாக்குறுதிகளைக் கொடுக்கிறார்.

பிறகு மோசே ஐந்தாவதும் இறுதியானதுமான வேண்டுகோளாக நேரடியாகவே ஒன்றைக் கேட்கிறார்: 'ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்'. யாத் 4:13. உடனே தேவன், அவருக்கு துணையாக அவரது சகோதரனாகிய ஆரோனை தாம் ஏற்கனவே அனுப்பிவிட்டதாகச் சொல்கிறார். இறுதியாக மோசே அதற்குச் சம்மதித்து, எத்திரோவிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு, எகிப்திற்குக் கிளம்புகிறார்.

# விருத்தசேதனம்

**யாத் 4:18-31இல் சொல்லப்படுகிற விநோதமான சம்பவத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம், அதிலுள்ள பாடம் என்ன?**

மோசே தேவனுக்குக்கீழ்ப்படிந்து, மீண்டும் எகிப்திற்குப் புறப்பட்ட நிலையில், கர்த்தர் 'அவனைக் கொல்லப்பார்த்தார்' என்பது வேதாகமத்தை வாசிப்பவர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். யாத் 4:24. இங்கே விருத்தசேதனம்தான் பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆபிரகாமின் உடன்படிக்கை கோரியபடி, அவரது இளையமகன் விருத்தசேதனம் பண்ணப்படவில்லை. ஆதி 17:10,11.

மோசே தேவ மக்களின் தலைவராக இருந்ததால், மற்றவர்களைக கீழ்ப்படிதலுக்குள் வழிநடத்தும்படி தேவனுக்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்து, அவருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டவேண்டியிருந்தது. தேவனிடம் முற்றிலும் சரணடைவதற்கு முன்மாதிரியாக இருக்கவேண்டியிருந்தது. அவரது மனைவி சிப்போராள் செயல்படுகிற ஸ்திரீயாக இருந்தாள், தன் கணவனின் உயிரைக் காப்பாற்ற உடனடியாக தன் மகனுக்கு விருத்தசேதனம் பண்ணினாள். இரத்தத்தோடிருந்த 'நுனித்தோலால்' மோசேயைத் தொட்டாள், அந்த இரத்தம் பாவநிவாரணத்தை,ஜீவனை,உடன்படிக்கையைமுத்திரிப்பதைச்சுட்டிக்காட்டுகிறது. அது எவ்வளவு வேகமாகச் செய்யப்பட்டது என்பது அந்தச் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்தச் சம்பவம் சொல்கிற முக்கியமான பாடம் என்னவென்றால், சரியானதென அறிந்திருப்பதைச் செய்யாமல் இருக்க கூடாது.

'மீதியானிலிருந்து வருகிறபோது தேவன் தன்மீது அதிருப்தியாக இருந்தது குறித்து மிகப்பயங்கரமான, திகைப்பான ஓர் எச்சரிப்பை மோசே பெற்றார். அவரை உடனடியாக அழித்துவிடுவதுபோல ஒரு தூதன் அவருக்குத் தரிசனமானார். அதற்கு விளக்கமே கொடுக்கவில்லை; ஆனால் தேவனுடைய நிபந்தனைகளில் ஒன்றை தான் நிறைவேற்றவில்லை என்பதை மோசே உணர்ந்தார். அதாவது, தங்களின் இளைய மகனுக்கு விருத்தசேதன சடங்கைச் செய்யாமல் இருந்திருந்தார். அவரது குழந்தை இஸ்ரவேலோடு தேவன் செய்திருந்த உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களில் பங்கேற்பதற்கான நிபந்தனைக்கு ஒத்துப்போகத் தவறியிருந்தார்; தெரிந்துகொள்ளப்பட்ட தங்கள் தலைவரே அதைப் புறக்கணிப்பது தேவ நியமங்களின் ஆற்றலை மக்களுக்குக் குறைத்துக் காட்டிவிடும். தன் கணவர் கொல்லப்படுவாரென அஞ்சிய சிப்போராள், தானே அந்தச் சடங்கைச் செய்தாள், அதனால் மோசே தொடர்ந்து தன் பயணத்தைத் தொடர அந்தத் தூதன் அனுமதித்தார். பார்வோனிடம் செல்லவிருந்ததால், மோசே தன் உயிரை மிகுந்த ஆபத்திற்கு ஆளாக்கியிருந்தார்; பரிசுத்த தூதர்களுடைய பாதுகாப்பினால் மட்டுமே அவரது உயிர் பாதுகாக்கப்படமுடியும். ஆனால் கடமையென அறிந்த ஒன்றைச் செய்யாமல் அவர் பாதுகாப்பாக இருக்கமுடியாது; ஏனென்றால் தேவ தூதர்களாக அவரைப் பாதுகாக்கமுடியாது.'

**செய்யவேண்டியதை அறிந்திருந்தும் செய்யாமல் இருப்பீர்களானால் இந்தச் சம்பவத்திலிருந்து என்ன அறிந்துகொள்ளலாம்? இப்போதே நீங்கள் என்ன மாற்றங்களைச் செய்யலாம்?**

# மேலும் படிக்க:

எரிகிற முட்செடி அனுபவம்தான் மோசேயின் வாழ்க்கையை மாற்றுகிற அனுபவமாக இருந்தது. அவரது வாழ்க்கையின் மேன்மையான அனுபவங்கள் எல்லாமே எகிப்திலிருந்து எபிரெயர்களை வெளியே அழைத்துவந்து, வாக்குத்தத்த தேசத்திற்கு வழிநடத்த, கீழ்ப்படிதலோடு பின்வாங்காமல் அவர் செயல்படுவதைச் சார்ந்தே இருந்தன.

இறுதியில் எல்லாம் எவ்வாறு முடிந்ததென நமக்குத் தெரியும். ஆனால் எரிகிற முட்செடி அனுபவத்தில், மோசேயின் இடத்தில் உங்களை வைத்து யோசியுங்கள். உயிர்தப்பிக்க எகிப்திலிருந்து தப்பியோடியிருந்தார். 40 வருடக் காலத்தில், எபிரெயர்களில் ஒரு புதிய தலைமுறை உருவாகியிருந்தது; அவர்களில் அநேகருக்கு இவரை அதிகமாகத் தெரியாது அல்லது காலப்போக்கில் இவரைப்பற்றி திரித்துக்கூறப்பட்ட கதைகளால் இவரை தவறாகப் நினைத்திருக்கலாம். ஆனாலும் இப்போது, அதே மக்களை அதிகாரமிக்க ஒரு தேசத்திலிருந்து வெளியே கொண்டுவருவதற்கு தேவன் அவரையே அழைத்தார்.

ஆம், அது சிக்கல்நிறைந்த ஒரு பணி. முடியவே முடியாதென தேவனிடம் சொல்லியிருந்தால், எதை இழந்திருப்பாரென யோசித்துப்பாருங்கள். வரலாற்றிலிருந்து மறைந்தே போயிருப்பார், அவர் மூலமாக தேவ வல்லமை செயல்பட்டிருக்க முடியாது, அதன் மூலமாக உருவான வரலாறு நிகழ்ந்திருக்காது, வேதாகமத்தில் மட்டுமல்ல, உலகத்திலும் மிகவும் மேன்மையான, செல்வாக்குமிக்க மக்களில் ஒருவராக இருந்திருக்கமுடியாது.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *பாலைவனப்பகுதியில் கழிந்த அமைதியான வருடங்களில், தேவன் தனக்குத் தந்த பணியை மோசே செய்தார்: அதாவது நல்ல குடும்பஸ்தனாக இருந்தார்; தன் ஆடுகளைப் பராமரித்தார்; தேவ மக்களின் மிகப்பெரிய தலைவராக அழைக்கப்படுவதற்குமுன் தேவனுடைய ஏவுதலின்கீழ் இரண்டு வேதாகமப் புத்தகங்களை எழுதினார்.*

2. *மேலோட்டமாகப் பார்த்தால், மோசே சொன்ன சாக்குப்போக்குகள் நியாயமானவைகளாகத் தெரியும், இல்லையா? மக்கள் ஏன் என்னை நம்பவேண்டும்? அவர்களிடம் செல்வதற்கு நான் யார்? என்னால் நன்றாகப் பேசமுடியாது போன்ற சாக்குப்போக்குகளைச் சொன்னார். நம்மை அழைத்த பணிக்கு தேவன் நம்மைத் தகுதிப்படுத்தமுடியும் என்பதுபற்றி இந்தச் சம்பவம் நமக்கு என்ன சொல்ல வேண்டும்?*

3. *ஆதியாகமப் புத்தகத்தை எழுதினவர் மோசே. பரிசுத்த வரலாற்றையும் இரட்சிப்பின் திட்டத்தையும் புரிந்துகொள்ள அந்தப் புத்தகம் முக்கியம் என்பதுபற்றி ஞாயிற்றுக்கிழமையில் பார்த்த கருத்தை அதிகமாகத் தியானியுங்கள். அந்தப் புத்தகத்தின் அதிகாரத்தை, குறிப்பாக அதன் வரலாற்றுதன்மையை, அதுவும் முதல் 11 அதிகாரங்களின் வரலாற்றுதன்மையைப் பெலவீனப்படுத்த அநேக முயற்சிகள் எடுக்கப்படுகின்றன; அவை ஒவ்வொன்றையும் நாம் ஏன் எதிர்க்க வேண்டும்?*

பாடம் 3 ஜூலை 12-19



# சிக்கலான துவக்கம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 5:1–23; வெளி 11:8; யாத் 6:1–13; சங் 73:23–26; 2கொரி 6:16; யாத் 6:28–7:7.

**மனன வசனம்:** பின்பு, மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் போய்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிடவேண்டும் என்று சொல்லுகிறார் என்றார்கள். அதற்குப் பார்வோன்: நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை என்றான். யாத்திராகமம் 5:1,2.

இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்துவிட்டால், மகிழ்ச்சியும் செழிப்பும் வெற்றியும்மட்டுமே கிடைக்குமென பல விசுவாசிகள் நினைக்கிறார்கள். பெரும்பாலும் அது உண்மையல்ல என்பதை வேதாகமம் காட்டுகிறது. பல்வேறு தடைகளும், புதிய சிக்கல்களும் எழும்பலாம். அது விரக்தியை ஏற்படுத்தும்; எளிதாகப் பதில் கிடைக்காத அல்லது பதிலே கிடைக்காத கடினமான கேள்விகளை எழும்பச் செய்யும். தேவனை நம்புகிறவர்கள் பல்வேறு சோதனைகளைச் சந்திப்பார்கள். அவற்றின்மத்தியிலும் நிலைத்துநின்றால், தேவன் தம் விருப்பத்தின்படி, தம்முடைய நேரத்தில் தீர்வுகளைக் கொண்டுவருவார். நாம் விரைவாகவும் உடனடியாகவும் தீர்வுகளை எதிர்பார்ப்பதால், அவரது வழிகள் நமது எதிர்பார்ப்புகளுக்கு முரணாக இருக்கலாம், ஆனாலும் அவரை நம்ப நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே இந்த வார ஆராய்ச்சியில் மோசேபற்றியும் தேவமக்களை எகிப்தைவிட்டு வெளியே நடத்துவதற்கான கட்டளைபற்றியும் பார்க்கிறோம். இது தெளிவான கட்டளை. அங்கே அற்புதங்களும் நடைபெற்றன, தேவன் நேரடியாக மோசேயிடம் பேசினார், மோசே என்ன செய்யவேண்டும் என்பதை அவருக்குத் தெரியப்படுத்தினார். தேவன் தன்னை அழைத்திருப்பதையும், குறிப்பிட்ட பணியைக் கொடுத் திருப்பதையும் அறிந்த நிலையில், அது அவருக்கு எவ்வளவு எளிதாக இருந்திருக்கவேண்டும்? கஷ்டமில்லாமல் செய்திருக்கவேண்டும் அல்லவா? தொடர்ந்து பார்ப்போம்.

*2024 ஜுலை 19 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கர்த்தர் யார்?

தேவனுடைய கட்டளைகளின்படி பார்வோனிடத்திற்கு மோசே செல்கிறார்; 'இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படியான' செயல்முறை துவங்க இருந்தது. யாத் 3:10.

**'என் ஜனங்களைப் போகவிடவேண்டும்' என்று தேவன் கேட்டுக்கொண்டதற்கு பார்வோனின் பதில் என்ன? (யாத் 5:1,2), இந்தப் பதிலிலுள்ள முக்கியத்துவம் என்ன?**

'அந்தக் கர்த்தர் யார்?' என்று பார்வோன் கேட்கிறான், அவரைப்பற்றி அறிந்துகொள்கிற ஆசையால் அல்ல, மாறாக அந்தத் தேவனை எதிர்க்கிற வகையில் அல்லது மறுக்கிற வகையில் கேட்கிறான், அவரைப்பற்றி தனக்குத் தெரியாது என்கிறான். பெருமைபாராட்டுகிற வகையில், 'நான் கர்த்தரை அறியேன்' என்கிறான்.

வரலாற்றில் இதேபோல எத்தனை பேர் பேசியிருக்கிறார்கள்? இயேசு தம்மைப்பற்றி 'ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்' என்று சொல்லியிருக்கிற நிலையில், இவ்வாறு கேட்பது எவ்வளவு வருத்தகரமானது! யோவான் 17:3.

பார்வோன் ராஜாவாக இருந்த எகிப்தானது தேவனுடைய பிரசன்னத்தையும் அதிகாரத்தையும் மறுக்கிற ஒரு வல்லமைக்கு அடையாளமாக இருக்கிறது. அது தேவனுக்கும், அவரது வார்த்தைக்கும், அவரது மக்களுக்கும் எதிராக நின்ற ஒன்று. 'நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை' என்று பார்வோன் சொன்னது, அந்த ஜீவனுள்ள தேவனுக்கு எதிராகக் கலகம்பண்ணினதைக் காட்டுகிறது; எனவே தேவனை மறுப்பது மட்டுமல்லாமல், அவருக்கு எதிராகப் போரிடுகிற ஒரு அமைப்புக்கும் எகிப்தை அடையாளமாக்குகிறது.

இதே மனநிலைதான், பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து, பிரெஞ்சுப் புரட்சியிலும் வெளிப்பட்டது. ஏசா 30:1-3; வெளி 11:8. பார்வோன் தன்னை ஒரு தேவனாக அல்லது தேவனுடைய குமாரனாகக் கருதினான்; ஒருவர் தன் சொந்த அதிகாரத்திலும், வலிமையிலும், புத்திசாலித்தனத்திலும் நம்பிக்கை வைப்பதை அது சுட்டிக்காட்டுகிறது. 'வேதாகம வரலாற்றில் சொல்லப்பட்டுள்ள எல்லா தேசங்களிலும் எகிப்து தான் ஜீவனுள்ள தேவன் இருப்பதை மிகவும் துணிகரமாக எதிர்த்தது, அவரது கட்டளைகளைப் புறக்கணித்தது. எகிப்தின் ராஜாவைவிட எந்த அரசனும் பரலோகத்தின் அதிகாரத்திற்கு எதிராக இவ்வளவு வெளிப்படையாகவும் அதிகாரத் தோரணையோடும் கலகம்செய்ததில்லை. மோசே கர்த்தருடைய நாமத்தினால் அவனிடம் செய்தியை அறிவித்தபோது, பார்வோன் பெருமையாக, 'நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை' என்று சொன்னான். யாத் 5:2. இதுதான் நாத்திகம், எகிப்து சுட்டிக்காட்டுகிற தேசமும் இதேபோல ஜீவனுள்ள தேவனுடைய கோரிக்கைகளை மறுக்கும், அவநம்பிக்கையான, துணிகரமான ஆவியை வெளிப்படுத்தும்.'

---

**உங்களுக்கு கர்த்தரைத் தெரியுமா என்று யாராவது கேட்டால், என்ன பதில் சொல்வீர்கள்? தெரியும் என்று சொன்னால், அவர் எப்படிப்பட்டவர் என்பதுபற்றி என்ன சொல்வீர்கள்? ஏன்?**

# சிக்கலான துவக்கம்

தேவன் தனக்குக் கொடுத்திருந்த பணி இலேசானது அல்ல என்பதை ஆரம்பம்முதலே மோசே அறிந்திருந்தார், அதனால்தான் அதிலிருந்து தப்பிக்க முயன்றார். அதனால் என்னென்ன நேரிடும் என்பதை அவர் சிறிதும் யோசிக்கவில்லை.

**மோசேயும் ஆரோனும் முதன்முதலாக பார்வோனைச் சந்தித்தபிறகு உண்டான உடனடி விளைவுகள் என்ன? யாத் 5:3-23.**

---

மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் செல்வதற்குமுன் இஸ்ரவேல் மக்களையும் மூப்பர்களையும் கூடிவரச்செய்து, தேவன் சொன்ன வார்த்தைகளைக் கூறினார்கள், தேவனுடைய அடையாளங்களைக் காட்டினார்கள், அதனால் தேவன் தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பாரென மக்களுக்கு நம்பிக்கை உண்டானது. அதனால், கர்த்தரைத் தொழுதுகொண்டார்கள். யாத் 4:29-31. இறுதியாக எபிரெய மக்களை தேவன் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் போவதுகுறித்த அதிகபட்ச எதிர்பார்ப்பு இருந்தது!

பிறகு, தேவன் சொன்னபடி எகிப்தின் ராஜாவிடம் மோசே சொன்னார், அதனால் இஸ்ரேலரின் நிலைமை முன்பைவிட மோசமாக மாறியது. உபத்திரவம் அதிகரித்தது, அவர்களது அனுதின வேலை அதிக பாரமாக, தாங்கமுடியாததாக மாறியது. சோம்பேறிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார்கள்; மிகக்கொடுமையாக நடத்தப்பட்டார்கள்; முன்பு இருந்ததைவிட அவர்களது வேலை கடினமாகியது.

அதனால் இஸ்ரவேலின் தலைவர்கள் கவலையடைந்தார்கள், அவர்களுக்கும் மோசேக்கும் ஆரோனுக்கும் இடையே மோதல் உருவாகியது; பின்வரும் வருடங்களில் மோசே தன் ஜனங்களுடன் சந்திக்கவிருந்த மோதலுக்கு அது முன்னடையாளமாக இருந்தது.

**மோசேயோடும் ஆரோனோடும் மோதல்போக்கில் பேசின அந்த மனிதர்களின் இடத்தில் உங்களை வைத்து யோசியுங்கள். யாத் 5:21. அவர்கள் அவ்வாறு பேசினதற்கான காரணம் என்ன?**

---

மோசேயின்மீது அவர்கள் அதிருப்தியுடன் இருந்ததற்கான காரணத்தைப் புரிந்துகொள்வது கடினமல்ல; 'கர்த்தர் உங்களைப்பார்த்து நியாயந்தீர்க்கக்கடவர்' என்று சொன்னார்கள். எகிப்தியரிடமிருந்து தங்களை விடுவிக்க மோசே வந்ததாக நினைத்தார்களே ஒழிய, எகிப்தியர்கள் தங்களை இன்னும் அதிகமாக ஒடுக்கச்செய்வார்களென நினைக்கவில்லை.

எனவே, எகிப்தியர்களைக் கையாளுவதுபோக, தங்கள் சொந்த மக்களை மோசேயும் ஆரோனும் கையாளவேண்டியிருந்தது.

---

**உள்ளூர் சபைத்தலைவர்களுடன் கருத்துவேறுபாடுகள் எழுவதைத் தடுக்கமுடியாது, நீங்களும் மற்றவர்களும் சபைத்தலைவர்களை அணுகுவதற்கான சிறந்த வழிகள் என்ன?**

---

# தெய்வீக 'நான்'

மோசே பரிதாப நிலையில் இருந்தார்! முதலில் பார்வோன் அவரை நிந்தித்தான், இப்போது அவரது மக்களே அவரைச் சபிக்கிறார்கள்.

அதுபற்றி மோசே தேவனிடம் புகார் கூறுகிறார். இஸ்ரவேலரின் நிலைமை மோசமடையவே, கசப்போடும் ஏமாற்றத்தோடும், 'ஆண்டவரே, இந்த ஜனங்களுக்குத் தீங்கு வரப்பண்ணினதென்ன? ஏன் என்னை அனுப்பினீர்? நான் உமது நாமத்தைக்கொண்டு பேசும்படி பார்வோனிடத்தில் பிரவேசித்தது முதல் அவன் இந்த ஜனங்களை உபத்திரவப்படுத்துகிறான்; நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே' என்று கேட்கிறார். யாத் 5:22,23. தேவன்மீது மோசேக்கு அதிருப்தி உண்டானதற்கு காரணமில்லாமல் இல்லை, ஏன் என்பதை அந்தச் சூழ்நிலையிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

ஆனால் தேவன் வல்லமையாகப் பதிலளித்தார். அதிக தீர்மானத்துடன் செயல்படவிருந்தார். 'நான் பார்வோனுக்குச் செய்வதை இப்பொழுது காண்பாய்' என்று சொன்னார். யாத் 6:1.

**மோசேக்கு தேவன் சொன்ன பதில் என்ன? அதிலுள்ள இறையியல் முக்கியத்துவம் என்ன? யாத் 5:22-6:8.**

தேவன் இனி பேசுவதோடுமட்டும் நிற்காமல், தம் மக்களுக்காக வல்லமையாகத் தலையிடவிருந்தார். சில முக்கிய உண்மைகளை மோசேக்கு நினைவூட்டுகிறார்: 1) 'நான் யேகோவா'; 2) நான் கோத்திரப்பிதாக்களுக்குத் தரிசனமானேன்; 3) நான் அவர்களோடு என் உடன்படிக்கையை ஏற்படுத்தினேன்; 4) அவர்களுக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குரைத்தேன்; 5) இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரலைக் கேட்டேன்; 6) உங்களுக்கு வாக்குத்தத்த தேசத்தைக் கொடுப்பதாகச் சொன்ன என் உடன்படிக்கையை நினைவுகூர்ந்தேன்.

தெய்வீக 'நான்' எனும் வார்த்தை எத்தனை முறை வருகிறதெனப் பாருங்கள். **நான்**, 'உங்கள் தேவனாகிய கர்த்தர்', **நான்** இன்னென்னதை உங்களுக்காகச் செய்தேன், அதனால் **நான்** வாக்குத்தத்தமாகச் சொன்னவற்றில் நீங்கள் நம்பிக்கையாக இருக்கலாம் என்கிறார்.

தாம் ஜீவனுள்ள தேவன் என்பதால், தாம் மகத்தான காரியங்களைச் செய்யப்போவதாக அறிவிக்கிறார்: 1) 'உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி நான் உங்களை விடுவிப்பேன்.' 2) 'உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்குவேன்.' 3) 'ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்பேன்.' 4) 'உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன்.' யாத் 6:6,7.

தேவன் சொன்ன இந்த நான்கு செயல்களும் தேவ மக்களோடு அவரது உறவை மீண்டும் உறுதிப்படுத்தின. இந்தச் செயல்களுக்கெல்லாம் தேவனே மூலகாரணர், இவற்றால் கிடைக்கிற நலன்களைப் பெறுகிறவர்கள் இஸ்ரவேலர்கள். இந்த ஈவுகளை தேவன் இலவசமாக, தம் அன்பால் கொடுக்கவிருந்தார்; அப்போது அவர்களுக்குச் செய்தார், இப்போது நமக்கும் செய்துவருகிறார்.

---

**வேதாகமத்தில் வேறு யாரெல்லாம் தேவனிடம் சரியான கரணத்தை முன்னிட்டு புகார் சொல்லியிருக் கிறார்கள்? சில சமயங்களில், உங்கள் ஆத்துமாவை தேவனிடம் ஊற்றி, உங்கள் சூழ்நிலை குறித்து அவரிடம் புகார்கூறுவது ஏன் சரியானது? ஆனாலும் அதை விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் செய்யவேண்டியது ஏன் முக்கியம்?**

# விருத்தசேதனமில்லாத உதடுகள்

தேவன் தாம் செய்யவிருந்ததுகுறித்து வல்லமையான சில வாக்குத்தத்தங்களை மோசேக்குக் கொடுத்தார். அது மோசேக்கு ஊக்கத்தைக் கொடுத்திருக்கும் என்றாலும், அந்த ஊக்கம் கொஞ்சநேரமே நீடித்தது, ஏனென்றால் மக்களுடைய பிரதிவினை சாதகமாக இல்லை.

**அடுத்து என்ன நிகழ்ந்தது? யாத் 6:9-13. நம் வாழ்க்கையில் ஏமாற்றமும் போராட்டமுமான காலங்களில் செய்யவேண்டியதுபற்றி இதிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?**

இஸ்ரவேலர் இக்கட்டாலும், உபத்திரவத்தாலும், கடுமையான வேலையாலும் மனமடிந்திருந்தார்கள்; அதனால், தேவன் தாம் வாக்குரைத்தபடி செய்வாரென மோசே அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டினபோது அதைக் கேட்க விரும்பவில்லை. வெகுகாலமாகக் காத்திருந்தும் அவர்களது எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. இப்போது மட்டும் மாறிவிடுமா? மனமடிந்து, நம்பிக்கை இழந்தார்கள்; தங்கள் வாழ்நாளில் முதல்முறையாக விடுதலைக்கான நம்பிக்கை கிடைத்த நிலையில் நிலமை மாறவே, அது இன்னும் அதிக கசப்பைக் கொடுத்தது.

இதேபோன்ற அனுபவம் யாருக்குத்தான் ஏற்பட்டிருக்காது? மனச்சோர்வாகவும், ஏமாற்றமாகவும், அதிருப்தியாகவும், ஏன் தேவனால் கைவிடப்பட்டதாகவும் உணருகிற நிலை யாருக்குத்தான் ஏற்பட்டிருக்காது?

யோபுவின் அனுபவம் ஞாபகமிருக்கிறதா? துன்மார்க்கர் செழிக்கிறதையும், நீதிமான்கள் உபத்திரவப்படுவதையும் கண்டு குழப்பமடைந்த சங்கீதக்காரனாகிய ஆசாப்பற்றி ஞாபகமிருக்கிறதா? ஆசாப் தன் போராட்டங்களின் மத்தியிலும், மிகவும் அற்புதமான விசுவாச அறிக்கைகள் ஒன்றை முன்வைக்கிறார்: 'ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்' சங் 73:23-26.

பரிசுத்த வரலாறு முழுவதிலும், தாம் தம் மக்களோடு இருப்பதாக தேவன் வாக்குரைத்திருக்கிறார். ஏசா 41:13; மத் 28:20. அவர்கள் வாழ்க்கையின் சவால்களை மேற்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு தம் சமாதானத்தையும், ஆறுதலையும் கொடுத்து, அவர்களைப் பெலப்படுத்துகிறார். யோவான் 14:27; யோவான் 16:33; பிலி 4:6,7. 'உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன்' என்கிற உடன்படிக்கை சூத்திரமானது தேவன் தம் மக்களிடம் விரும்புகிற நெருக்கமான உறவை வெளிப்படுத்துகிறது. யாத் 6:7.

---

**'உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன்' என்கிற வார்த்தைகளை யோசித்துப்பாருங்கள். யாத் 6:7. அது ஒட்டுமொத்த மக்களை உள்ளடக்கிச் சொல்லப்பட்டாலும், நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் அது எவ்வாறு பொருந்தும்? அந்த உறவு நம் அனுதின வாழ்க்கையில் எவ்வாறு வெளிப்படவேண்டும்? 2கொரி 6:16.**

# பார்வோனுக்குத் தேவன் போன்ற நிலை

**மோசேயின் ஆட்சேபனையை தேவன் எவ்வாறு கையாளுகிறார்? யாத் 6:28-7:7.**

மோசேயிடம் தேவன் தம்மை யேகோவா என்று சொல்கிறார்; அதற்கு, தனிப்பட்ட உறவுவைக்கிற நெருக்கமான தேவன், தம் மக்களின் தேவன், அவர்களோடு உடன்படிக்கை உறவை வைக்கிற தேவன் என்று அர்த்தம்.

எங்கும் நிறைந்திருக்கிற இந்தத் தேவன் மீண்டும் பார்வோனிடம் போய் பேசுமாறு மோசேயிடம் சொன்னார். மோசே தன்னம்பிக்கை இல்லாதவராக மீண்டும் ஆட்சேபிக்கிறார்: 'பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான்?' என்று கேட்டார். இங்கும்கூட மோசே பணிவால் இவ்வாறு சொல்லாமல், இது வரை அதில் வெற்றிகிடைக்காததால் அந்தப் பொறுப்பைத் தட்டிக்கழிக்கவே அவ்வாறு சொல்கிறார்.

'மீண்டும் பார்வோனிடம் செல்லுமாறு மோசேயிடம் தேவன் சொன்ன போது, மோசே அவநம்பிக்கையுடன் காணப்பட்டார். தன்னிடம் பேச்சுத்திறமை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட 'விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்' என்கிற வார்த்தைகளை மோசே பயன்படுத்தினார். யாத் 6:12,30. இதுவேதான் யாத் 4:10இல் 'வாக்குவல்லவன் அல்ல' என்று வருகிறது.

தேவன் தம் இரக்கத்தால் ஆரோனை மோசேக்கு உதவியாக அனுப்பினார். மோசே ஆரோனுக்குச் சொல்லவேண்டும், அதை ஆரோன் பார்வோனிடம் எல்லார் முன்னிலையிலும் அறிவிக்கவேண்டும்; இவ்வாறு, எகிப்திய ராஜாவுக்கு முன்பாக மோசே தேவனைப்போல இருப்பார்; ஆரோன் அவரது தீர்க்கதரிசி போல இருப்பார்.

ஒரு தீர்க்கதரிசியின் வேலை என்ன என்பதை இந்தச் சம்பவம் மிகச்சரியாக எடுத்துக்காட்டுகிறது. ஒரு தீர்க்கதரிசி என்பவர் தேவனுக்காகப் பேசுகிறவர்; அந்த ஆணோ பெண்ணோ, தேவனுடைய வார்த்தையை மக்களுக்குத் தெரிவிக்கவும், விளக்கவும் தேவனுடைய வாயாகச் செல்படுபவர். மோசே ஆரோனிடம் பேசி, அதை ஆரோன் பார்வோனிடம் சொன்னதுபோல, தேவன் ஒரு தீர்க்கதிரிசியிடம் தம் செய்தியைத் தெரிவிக்கிறார்; அவர் தேவனுடைய அந்தப் போதனையை மக்களிடம் அறிவிக்கிறார். இதை வாய்மொழியாக நேருக்குநேராக அறிவிக்கலாம்; அல்லது, பொதுவாகச் செய்யப்பட்டதுபோல, தீர்க்கதரிசி தேவனிடமிருந்து செய்தியைப் பெற்று, அதை எழுதிவைக்கலாம்.

பார்வோனோடான சந்திப்புகளில் மோசே என்ன எதிர்பார்க்கலாம் என்பதையும் மோசேக்கு தேவன் விளக்கினார். சந்திப்பு பதற்றமாக இருக்கும், நீண்ட காலம் நீடிக்கும் என்பதையும் எச்சரித்தார். பார்வோன் பிடிவாதமாக இருப்பான், தன் இருதயத்தைக் கடினப்படுத்துவான் என்று இரண்டாவது முறையாக மோசேயிடம் தேவன் வலியுறுத்துகிறார். யாத் 4:21; 7:3. ஆனாலும் முடிவு நன்மையாக இருக்கும், நானே கர்த்தர் என்று எகிப்தியர் அறிவார்கள். யாத் 7:5. அதாவது, அதினிமித்தம் குழப்பங்கள் நேரிட்டாலும்கூட, தேவன் மகிமைப்படுவார்.

---

**தேவன் தன்னை அழைத்த வேலையைச் செய்யாமல் மோசே சாக்குப்போக்குகளைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிற வேலையைச் செய்யாமல் இருப்பதற்கு நாமும் என்னென்ன சாக்குப்போக்குகளைச் சொல்லக்கூடும்?**

# மேலும் படிக்க:

மோசே முதன்முதலாக பார்வோனிடம் பேசியபிறகு, மோசேக்கும் அவரது மக்களுக்கும் நிலைமை எவ்வளவு மோசமாக மாறியதெனப் பாருங்கள். ‘முற்றிலும் சுதாரித்துக்கொண்டது போல நடந்துகொண்ட ராஜா, இஸ்ரவேலர் தனக்கு சேவைசெய்யாமலிருக்க ஏதோ திட்டம் தீட்டுவதாகச் சந்தேகித்தான். பற்றில்லாமைக்கு சோம்பேறித்தனம்தான் காரணமாக இருக்க முடியும்; அதனால், கேடான திட்டங்களைத் தீட்ட அவர்களுக்கு நேரமே கொடுக்கக்கூடாதென நினைத்தான். அவர்களது வேலைகளைக் கடினமாக்கவும், விடுதலை வேண்டுமென்கிற உணர்வை நொறுக்கவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டான். அவர்களது வேலையை அதிக கொடுமையாக்கி, ஒடுக்குவதற்கு அன்றே கட்டளைகளைப் பிறப்பித்தான். அந்த நாட்டில் கட்டுமானத்திற்கு பொதுவாக பயன்படுத்தப்பட்ட பொருள் வெயிலில் காயவைக்கப்பட்ட செங்கலாகும்; மிக நுணுக்கமான கட்டுமானச் சுவர்கள் இவற்றால் கட்டப்பட்டு, கற்கள் பதிக்கப்பட்டன; எபிரெயக் கொத்தடிமைகளை செங்கல் அறுக்கிற வேலையில் ஈடுபடுத்தியிருந்தார்கள். களிமண் கட்டியாவதற்கு வைக்கோல் துண்டுகளைக் கலப்பார்கள்; அதனால் அந்த வேலைக்கு வைக்கோல் ஏராளமாகத் தேவைப்பட்டது; இனி வைக்கோல் கொடுக்கவேண்டாமென ராஜா கட்டளையிட்டான்; வேலையாட்களே வைக்கோலைத் தேடவேண்டும், ஆனால் முன்புபோல அதே எண்ணிக்கை செங்கல்களை அறுக்கவேண்டும்.

‘இந்தக் கட்டளை அத்தேசம் முழுவதிலும் இஸ்ரவேலர் மத்தியில் மிகுந்த வேதனையை உண்டாக்கியது. எகிப்திய ஆளோட்டிகள் அந்த மக்கள் செய்த வேலையைக் கண்காணிக்க எபிரெய அதிகாரிகளை நியமித்திருந்தார்கள், தங்கள் கண்காணிப்பின்கீழ் செய்யப்படுகிற வேலைக்கு அந்த அதிகாரிகள்தாம் பொறுப்பு. ராஜாவின் கட்டளை அமுலுக்கு வந்தபோது, மக்கள் வைக்கோலுக்குப் பதிலாகத் தாளடிகளைச் சேர்க்கும்படி அத்தேசம் முழுவதும் சிதறிப்போனார்கள்; ஆனாலும் எப்போதும் செய்கிற அளவுக்கு வேலையைச் செய்ய இயலவில்லை. வேலைசெய்யத் தவறியதின் நிமித்தம் எபிரெய அதிகாரிகள் கொடுமையாக அடிக்கப்பட்டார்கள்’.


---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *உங்கள் வாழ்க்கையில் தேவன் சொன்னபடி செய்தும் காரியங்கள் சரியாகப் போகாத, நினைத்தபடி துவங்காத ஒரு சமயம்பற்றி யோசித்துப் பாருங்கள். அந்த அனுபவத்திலிருந்து காலப்போக்கில் என்ன பாடங்களைக் கற்றுக்கொண்டீர்கள்?*

2. *நீங்கள் தேவனுடைய உதவிகேட்டு ஜெபித்தபோது, அல்லது நீங்கள் எதிர்பாராத நிலையில் தேவன் உங்கள் வாழ்க்கையில் தேவன் தலையிட்டவிதத்தை மற்றவர்களுக்குச் சொல்லுங்கள். தேவனை நம்புகிறவர்களுக்கும்கூட மோசமான காரியங்கள் நிகழும்போது, அவர்கள் எவ்வாறு தேவனுடைய தயவில் நம்பிக்கையோடு இருக்கலாம்?*

3. *‘நான் கர்த்தரை அறியேன்’ என்று சொல்கிற ஒருவருக்கு என்ன பதில் சொல்வீர்கள்? ஒருவேளை அவர் தேவனை விரோதித்து அவ்வாறு சொல்லாமல், உண்மையாகவே அவ்வாறு சொல்லியிருக்கலாம். அவர் தேவனை அறிந்துகொள்ள, நீங்கள் எவ்வாறு உதவலாம், அது முக்கியமென அவருக்கு எவ்வாறு விளக்கலாம்?*



# வாதைகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 7:8–10:29; எண் 33:4; ரோமர் 1:24–32; சங் 104:27, 28; ஏசா 28:2, 12–17; 44:9, 10, 12–17.

**மனன வசனம்:** கர்த்தர் மோசேயைக் கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் கடினப்பட்டது; அவன் இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடவில்லை. யாத் 9:35.

ஒரு விவசாயி தன் கழுதையை ஓர் இடத்திலிருந்து நகர்த்த எவ்வளவோ முயன்றும் அது அசையவில்லை. உடனே ஒரு கம்பால் அடித்தான். மீண்டும் கழுதையிடம் கத்தவே, அது நகர்ந்தது. அப்போது ஒருவர் அந்த விவசாயிடம், அடித்தால் கழுதை ஏன் நகர்கிறது என்று கேட்க, 'முதலில் அதன் கவனத்தைத் திருப்பவேண்டும்' என்று சொன்னார்.

மிருகங்களை வதைப்பது குற்றம் என்பது ஒரு புறமிருக்க, எபிரெயர்களை எகிப்திலிருந்து புறப்பட வைத்ததைப் புரிந்துகொள்ள இங்கு ஒரு பாடம் உள்ளது. அங்கிருந்து புறப்படும்படி மோசேக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது; அவர் பார்வோனிடம் 'என் ஜனங்களைப் போகவிடு' என்கிறார்.

தேவஜனங்களைப்போகவிட பார்வோன் விரும்பவில்லை. எபிரெயர்கள் தங்களுக்கு எதிராகப் போரிட வாய்ப்பிருப்பதாகப் பயந்த நிலையில், பார்வோன் எதற்கு அவர்களைப் போகவிடத் தயங்கினான் என்று வேதாகமம் பிரத்தியேகமான காரணம் எதையும் சொல்லவில்லை. யாத் 1:10. அடிமைகள் என்று வரும்போது, பொருளாதார லாபத்திற்காகவே இவ்வாறு நடத்தப்படுகிறார்கள். அதிக சம்பளமின்றி வேலைவாங்கலாம், அதனால் அந்த அடிமைகளால் கிடைத்த பொருளாதார ஆதாயத்தை இழக்க அவன் விரும்பவில்லை. எனவே அவன் கவனத்தைத் திருப்பவும், அவன் மனதை மாற்றவைக்கவும் அவனை சற்றே அசைக்கவேண்டியிருந்தது.

*2025 ஜுலை 26 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தேவனை எதிர்த்த தேவர்கள்

**எபிரெயர்களின் தேவனுக்கும் எகிப்தின் தேவர்களுக்கும் இடையே நடந்த முதல் சந்திப்பில் என்ன பாடங்கள் உள்ளன? யாத் 7:8-15.**

அதன்பிறகு நடக்கவிருந்த யுத்தங்கள் ஜீவனுள்ள தேவனுக்கும், எகிப்தின் 'தேவர்களுக்கும்' இடையே நடக்கவிருந்தன. இதில் பிரச்சினை என்னவென்றால், அந்தத் தேவர்களில் ஒருவனாக பார்வோன் தன்னைக் கருதியிருந்ததுதான். தேவன் எகிப்தியர்களுடனோ எகிப்துடனோ போரிடவில்லை, மாறாக அவர்களுடைய தேவர்களுடன் போரிட்டார். எகிப்தியர்கள் 1500க்கும் அதிகமாக தேவர்களையும் தேவதைகளையும் வணங்கினார்கள். 'எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்' என்று வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது. யாத் 12:12. பிறகு, இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட அனுபவம் பற்றிப் பேசும்போதும் மீண்டும் இவ்வாறு சொல்லப்படுகிறது: 'அவர்கள் தேவர்களின்பேரிலும் கர்த்தர் நீதிசெலுத்தினார்.' எண் 33:4. அவர்களுடைய தேவர்களுக்கு நீதிசெலுத்தப்பட்டது என்பதற்கு சிறந்த உதாரணம் கோல் ஒன்று சர்ப்பமாக மாறின அனுபவமாகும். யாத் 7:9-12. எகிப்தில் யுரேயஸ் என்பது நாகப்பாம்பின் உருவம். அதை அணிந்துகொண்டால், வாட் ஜெட் எனும் தேவதையின் பாதுகாப்பு இருப்பதாக எகிப்தியர் நம்பினார்கள். வடக்கு எகிப்தில் வாட்ஜெட் முழு அதிகாரமுடையதாகக் கருதப்பட்டது. பார்வோனின் அதிகாரம், தெய்வதன்மை, அரசகுலம், தெய்வீக அதிகாரம் ஆகியவற்றிற்கு அடையாளமாக பார்வோனின் கிரிடத்தில் யுரேயஸ் பாம்பின் அடையாளம் இடம்பெற்றிருந்தது; ஏனென்றால் அந்தத் தேவதை பார்வோனின் எதிரிகள்மீது விஷத்தைக் கக்குவதாக நம்பப்பட்டது. தெய்வமாக எண்ணப்பட்ட அந்தப் பாம்பு பார்வோனை மறு உலக வாழ்வுக்குள்ளும் வழிநடத்துவதாக எகிப்தியர்கள் நம்பினார்கள்.

ஆரோனின் கோலானது பாம்பாக மாறி, ராஜாவுக்குமுன் மற்ற பாம்புகளை எல்லாம் விழுங்கியபோது, எகிப்திய மந்திர தந்திரங்களைவிட ஜீவனுள்ள தேவன் பெரியவர் என்பது வெளிப்பட்டது. பார்வோனின் பராக்கிரமத்திற்கு அடையாளமாக இருந்த பாம்பு வெற்றிகொள்ளப்பட்டது மட்டுமல்லாமல், அதை ஆரோனும் மோசேயும் தங்கள் கரங்களால் பிடித்தார்கள். யாத் 7:12,15. எகிப் தின்மீது தேவனே அரசாளுவதையும் ஆதிக்கம்செலுத்துவதையும் அந்த முதல் சந்திப்பு வெளிப்படுத்தியது. மோசே, தேவனுடைய பிரதிநிதியாக, 'கடவுளான' பார்வோனைவிடவும் அதிக அதிகாரமும் வல்லமையும் பெற்றிருந்தார்.

பண்டைய எகிப்தியர்கள் நெஹெப்காவ் எனும் பாம்புக் கடவுளை தொழுகைக்குரியதாகக் கருதினார்கள். நெஹெப்காவ் என்றால் ஆவிகளை கடிவாளம் போட்டு அடக்குகிறவன் என்று அர்த்தம். அவர்களுடைய புராணக்கதையின்படி இந்தப் பாம்புக் கடவுள் ஏழு நல்ல பாம்புகளை விழுங்கியதால், அதிகாரமிக்கதாகக் கருதப்பட்டது. எனவே, இந்த அற்புதத்தின்மூலம், இந்தப் பாம்பு கடவுளல்ல, தாமே சர்வ வல்லமையும் அதிகாரமும் படைத்தவர் என்று எகிப்தியர்களுக்கு தேவன் தெரியப்படுத்தினார். அந்த வல்லமையான சந்திப்புக்கு பிறகு அவர்கள் அந்தச் செய்தியை உடனடியாக, தெளிவாக புரிந்துகொள்ள முடிந்தது.

**நம் வாழ்க்கையில் ஆதிக்கம்செலுத்த முயலுகிற எந்தக் 'கடவுளுக்கும்' மேல் வல்லமை செலுத்தும்படி தேவனை நாம் எவ்வாறு அனுமதிக்கலாம்?**

# பார்வோனின் இருதயத்தைக் கடினமாக்கியது யார்?

**யாத் 7:3,13,14,22 ஆகிய வசனங்களின் அர்த்தத்தை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?**

தேவனால் பார்வோனின் இருதயம் கடினப்பட்டதாக யாத்திராகமத்தில் ஒன்பது முறை வருகிறது. யாத் 4:21; 7:3; 9:12; 10:2,20,27; 11:10; 14:4,8; ரோமர் 9:17,18. மேலும் பார்வோனே தன் இருதயத்தைக் கடினப்படுத்தியதாக ஒன்பது முறை சொல்லப்படுகிறது. யாத் 7:13,14,22; 8:15,19,32; 9:7,34,35.

பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தியது யார் -தேவனா அல்லது அவனேயா?

யாத்திராகமத்தில் உள்ள பத்து வாதைகளில், முதல் ஐந்து வாதைகள் ஒவ்வொன்றிலும், பார்வோனின் இருதயம் கடினப்பட்டதற்கு அவனே முழுக்க முழுக்கக் காரணம். அவனே தன் இருதயத்தைக் கடினப்படுத்த துவங்கினான். ஆறாம் வாதைமுதல், தேவனே அவனது இருதயத்தைக் கடினப்படுத்தியதாக வேதாகமம் சொல்கிறது. யாத் 9:12. இவை அனைத்தும் என்ன காட்டுகிறது? தேவன் மோசேயிடம் சொன்னபடியே, பார்வோனின் சொந்த தீர்மானத்தை தேவன் மேலும் பெலப்படுத்தினார் அல்லது ஆழப்படுத்தினார். யாத் 4:21.

அதாவது, பார்வோன் மனந்திரும்பவும், தன் இருதயத்தின் அந்தகாரத்திலும் தவற்றிலும் இருந்து விடுவிக்கப்படவும் தேவன் வாதைகளை அனுப்பினார். தேவன் பார்வோனின் இருதயத்தில் புதிதாக தீமையை உருவாக்கவில்லை; மாறாக, பார்வோனின் தீய உணர்வுகளுக்கு அவனை ஒப்புக்கொடுத்தார். கட்டுப்படுத்துகிற தேவ கிருபையை அவன் இழந்ததால், தன்னுடைய துன்மார்க்கத்திலேயே விழுவதற்கு அவன் விடப்பட்டான். ரோமர் 1:24-32.

தேவனுக்காக நிற்கவும் அல்லது அவருக்கு எதிராக நிற்கவும் தீர்மானிக்கிற உரிமை பார்வோனுக்குக் கொடுக்கட்டது; அவனோ அவருக்கு எதிராக நிற்கத் தீர்மானித்தான்.

இதில் தெளிவான பாடங்கள் உள்ளன. சரி-தவறு, நன்மை-தீமை, கீழ்ப்படிதல்-கீழ்ப்படியாமை ஆகியவற்றிற்கு இடையே ஒன்றைத் தேர்வுசெய்கிற திறன் நம்மிடம் உள்ளது. பரலோகத்தில் லூசிபராகட்டும், ஏதேனில் ஆதாம்-ஏவாளாகட்டும், எகிப்தில் பார்வோனாகட்டும், இன்று இப்பூமியில் நாமாகட்டும், நாம் வாழ்கிற பகுதிகளில், ஒன்று ஜீவன் அல்லது மரணத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும். உபா 30:19.

ஒப்புமைப் பாடம்: வெண்ணெயையும் களிமண்ணையும் வெப்பத்தில் வைக்கிறோம். வெண்ணெய் உருகுகிறது, களிமணம் கடினமாகிறது. ஒரே அளவு வெப்பம்தான், ஆனால் இருவேறு பிரதிவினைகள், அதனால் இருவேறு விளைவுகள். பொருளின் தன்மையைப் பொறுத்து வெப்பத்தின் தாக்கம் வேறுபடுகிறது. பார்வோனின் விஷயத்தில், தேவன்மீதும் அவரது மக்கள்மீதும் அவனுக்கிருந்த மனநிலைதான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்தியது.

---

**உங்கள் சுயாதீன சித்தத்தைப் பயன்படுத்தி, இனிவரும் நாட்களில் என்ன தீர்மானம் செய்யப் போகிறீர்கள்? சரியான தீர்மானம் எதுவெனத் தெரிந்தால், அதைச் செய்ய எவ்வாறு உங்களை ஆயத்தப்படுத்தலாம்?**

# முதல் மூன்று வாதைகள்

எகிப்தின் பத்து வாதைகள் எகிப்தியர்களுக்கு அல்ல, அவர்களது தேவர்களுக்குக் கொடுக்கப்பட்டவை. ஒவ்வொரு வாதையும் அவர்களது தேவர்களில் ஒன்றைத் தாக்கியது.

**யாத் 7:14-8:19இல் சொல்லப்படுகிற வாதைகளில் என்ன நடந்தது?**

பார்வோன் பிடிவாதமாக இருப்பான், அவனிடம் பேசியும் பயனிருக்காது என்று மோசேயிடம் தேவன் சொன்னார். யாத் 7:14. ஆனாலும், பார்வோனுக்கும் எகிப்தியர்களுக்கும் தம்மை வெளிப்படுத்த தேவன் விரும்பினார். அதனால், அவர்கள் புரிந்துகொள்கிற வகையில் அவர்களிடம் பேசத் தீர்மானித்தார். மேலும், இந்தச் சந்திப்பால் எபிரெயர்களும் நன்மையடையவிருந்தார்கள், அதாவது தங்கள் தேவனைப்பற்றி அதிகமாகக் கற்றுக்கொள்ளவிருந்தார்கள்.

முதல் வாதை நைல் தெய்வமான ஹபியை குறிவைத்து தொடுக்கப்பட்டது. யாத் 7:17-25. எகிப்தின் வாழ்வாதாரத்தில் நைல் நதி முக்கியப் பங்காற்றியது. தண்ணீர் இருக்கும் இடத்தில் வாழ்வாதாரம் இருக்கும். உயிரின் ஆதாரம் தண்ணீர். அதனால்தான் ஹபி தெய்வத்தை உருவாக்கி, அதை வாழ்வின் ஆதாரமாக வழிபட்டார்கள்.

உண்மையில், ஜீவனுள்ள தேவன்தாம் உயிரின் ஆதாரம், நீர், உணவு உட்பட அனைத்தையும் சிருஷ்டித்தவர். ஆதி 1:1,2; 20_22; சங் 104:27,28; 136:25; யோவான் 11:25; 14:6. தண்ணீரை இரத்தமாக மாற்றிய செயலானது ஜீவன்போய் மரணம் வருவதைச் சுட்டிக்காட்டுகிறது. ஹபியால் வாழ்க்கையைக் கொடுக்கவும் பாதுகாக்கவும் முடியவில்லை. இவை தேவனுடைய வல்லமையினால் மட்டுமே சாத்தியம்.

பிறகு தேவன் பார்வோனுக்கு மற்றொரு வாய்ப்பைக் கொடுக்கிறார். இந்த முறை தவளை தேவதையான ஹெக்கெட்டை நோக்கி தாக்குதல் தொடுக்கப்படுகிறது. யாத் 8:1-15. நைல் நதியானது வாழ்க்கையைக் கொடுப்பதற்குப் பதிலாக, தவளைகளைப் பிறப்பிக்கிறது; எகிப்தியர்கள் தவளையென்றால் பயப்படுவார்கள்; அருவருத்து ஓடுவார்கள். இந்த வாதை நீக்கப்பட்ட வேளையானது, இந்த வாதைக்குப் பின்னால் தேவவல்லமை செயல்பட்டதை எடுத்துக்காட்டியது.

மூன்றாவது வாதைபற்றி சுருக்கமான குறிப்பு உள்ளது. யாத் 8:16-19. இங்கே பேன் என்று சொல்லப்படுகிற பூச்சிக்கான எபிரெய வார்த்தை கின்னிம்; அது ஈயா, கொசுவா, உண்ணியா, பேனா என்று சரியாகத் தெரியவில்லை. பூமியின் கடவுள் என்று எகிப்தியர்கள் கருதிய கெப் கடவுளுக்கு எதிராக இந்தத் தாக்குதல் தொடுக்கப்பட்டது. பூமியின் புழுதியிலிருந்து (வேதாகம சிருஷ்டிப்பு சம்பவத்தை நினைவுப்படுத்துகிறது) பேன்கள் உருவாகி, பூமி முழுவதும் பரவின. இந்த அற்புதத்தைச் செய்யமுடியாத எகிப்தின் மந்திரவாதிகள் (தேவன் மட்டுமே உயிரைச் சிருஷ்டிக்கமுடியும்), 'இது தேவனுடைய விரல்' என்றார்கள். யாத் 8:19. ஆனாலும் பார்வோன் அசைந்துகொடுக்கவில்லை.

---

**பார்வோனின் இருதயம் எவ்வளவு கடினப்பட்டிருந்தது என்று பாருங்கள். தேவனுடைய தூண்டுதலை தொடர்ந்து மறுத்த செயல், நிலைமையை மேலும்மேலும் மோசமாக்கியது. தேவனுடைய தூண்டுதலை தொடர்ந்து மறுப்பது குறித்து நமக்கு இதிலுள்ள பாடங்கள் என்ன?**

# வண்டுகள், மிருகஜீவன்கள், கொப்புளங்கள்

**தேவ வல்லமை மற்றும் மகிமையின் வெளிப்பாடுகள் எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும், அவரை மறுப்பதற்கான சுதந்தரம் மனிதர்களுக்கு இருப்பதுபற்றி இந்தச் சம்பவம் கற்பிப்பது என்ன? யாத் 8:20-9:12.**

உவாச்சிட் என்கிற எகிப்திய கடவுள் வண்டு கடவுள்; அது சதுப்பு நிலங்களின் கடவுள். சூரிய உதயம், சிருஷ்டிப்பு, மறுசிருஷ்டிப்பின் கடவுளான கெப்ரி கடவுளின் தலை, சாணவண்டின் தலைபோல சித்திரிக்கப்பட்டிருந்தது. அந்தத் 'தெய்வங்களை' தேவன் தோற்கடித்தார். இந்தச் சம்பவத்தில் (யாத் 8:20-24), எகிப்தியர்களுக்கு உபத்திரவம் நேரிட்டாலும், எபிரெயர்கள் பாதுகாக்கப்பட்டார்கள். அதன்பிறகு நேரிட்ட எந்த வாதைகளும் அவர்களைத் தாக்கவில்லை.

மீண்டும் இவை அனைத்தும், 'பூமியின் நடுவில் நானே கர்த்தர்' என்பதை பார்வோன் அறிந்துகொள்ள தேவன் முயன்றதையே காட்டின. யாத் 8:22.

பிறகு, பார்வோன் பேரம்பேச ஆரம்பித்தான். அங்கே அழுத்தம் அதிகரிக்க ஆரம்பித்திருந்தது. இஸ்ரவேலர் தேவனைத் தொழவும், அவருக்குப் பலியிடவும் சம்மதித்தான், ஆனால் எகிப்து தேசத்தில் அதைச் செய்யும்படி சொன்னான். யாத் 8:25. அவனது நிபந்தனைகளுக்கு ஒத்துப்போகமுடியாது, ஏனென்றால் எகிப்து தேசத்தில் சில விலங்குகள் புனிதமாகக் கருதப்பட்டன; அவற்றைப் பலியிட்டால் எபிரெயர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டியிருக்கும். மேலும் அது, இஸ்ரவேலரைக் குறித்து தேவதிட்டமும் அல்ல.

அடுத்த வாதை எகிப்தின் கால்நடைகளைத் தாக்கியது. யாத் 9:1-7. பசுவின் தலையால் சித்திரிக்கப்பட்ட ஹதோர் என்கிற எகிப்திய பெண்தெய்வமானது காதல் தெய்வமாகவும், பாதுகாப்பின் தெய்வமாகவும் கருதப்பட்டது. காளைக் கடவுளான ஏப்பிஸ் கடவுளும் பண்டைய எகிப்தில் பிரபலமான, மதிப்புமிக்க கடவுளாகக் கருதப்பட்டது. ஆகவே, ஐந்தாவது வாதையில், எகிப்தியக் கால்நடைகள் கொல்லப்பட்டதால், முக்கிய தெய்வங்கள் தோற்கடிக்கப்பட்டன.

ஆறாவது வாதையில் (யாத் 9:8-12), மருத்துவம், மந்திரம், ஞானம் ஆகியவற்றின் எகிப்திய தேவதையான ஐசிஸ் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டது. போர்களுக்கும் பெருந்தொற்றுக்கும் தேவதையான ஷெக்மெட்டும், மருத்துவத்திற்கும் சுகத்திற்கும் தெய்வமான இம்ஹோடெப்பும் தோற்கடிக்கப்பட்டன. அவற்றால் தங்களைத் தொழுகிறவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. முரண்பாடு என்னவென்றால், எகிப்திய மந்திரவாதிகளும் சாஸ்திரிகளும்கூட பாதிக்கப்பட்டதால், அவர்களால் அரண்மனையில் நிற்கமுடியவில்லை; வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவருக்குமுன்பாக அவர்கள் பெலனற்றிருந்ததை அது காட்டுகிறது. பத்து வாதைகள்பற்றின சம்பவத்தில் முதல் முறையாக, 'கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்' என்று ஒரு வசனம் சொல்கிறது. யாத் 9:12. இந்த வார்த்தைகளைப் புரிந்துகொள்வதில் குழப்பம் இருந்தாலும், அதன் முழுப்பின்னணியில் யோசித்தால், நாம் தேவனை தொடர்ந்து புறக்கணிக்கும்போது அதன் விளைவுகளை நாம் அறுவடைசெய்ய அவர் நம்மை விட்டுவிடுகிறார் என்பது வெளிப்படுகிறது.

---

**பார்வோன் அறியாமையால் அவ்வாறு செய்யவில்லை; சரியான தீர்மானத்தைச் செய்வதற்கு பகுத்தறிவான ஆதாரம் போதுமான அளவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே, அவனது இருதயத்தில்தான் பிரச்சினை இருந்தது. நாம் நம் இருதயங்களைக் காத்துக்கொள்ள வேண்டியது பற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது?**

# கல்மழை, வெட்டுக்கிளிகள், இருள்

**பார்வோனின் மனது மாறுவதற்கு அந்த வாதைகள் எந்த அளவுக்கு வெற்றிகரமாக இருந்தன? யாத் 9:13-10:29.**

நட் என்பது எகிப்தின் ஆகாய, விண்ணுலக தேவதை, வானத்தின்கீழும் பூமியின்மேலும் நடப்பவற்றை அதுதான் கட்டுப்படுத்துவதாக நம்பினார்கள். ஓசிரிஸ் என்பது பயிர்கள் மற்றும் இனப்பெருக்கத்தின் கடவுள். வேதாகமத்தில், கல்மழை தேவனுடைய நியாயத்தீர்ப்பால் உண்டாவதாகக் கருதப்பட்டது. ஏசா 28:2,17; எசே 13:11-13. இந்த வாதையின்போது, தங்கள் உடைமைகளை பாது காப்பான இடத்தில் மறைத்தவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள். யாத் 9:20,21. இப் போது ஒவ்வொருவரும் சோதிக்கப்பட்டார்கள்; அதாவது தேவ வார்த்தையை நம்பவும், அதன்படி செயல்படவும் இணங்குவார்களா, இணங்கமாட்டார்களா?

பூமிமுழுவதும் தம்மை அறிந்துகொள்ளும்படிக்கு பார்வோனை தாம் வாழவிட்டதாக தேவன் சொல்கிறார். யாத் 9:16. உடனே, தான் பாவம் செய்த தாக பார்வோன் சொன்னாலும்கூட, பிறகு தன் மனதை மாற்றுகிறான்.

ஷெத் என்பது புயல், போர், ஒழுங்கின்மை ஆகியவற்றிற்கான எகிப்தியக் கடவுள். ஐசிஸ் தேவதையும் இந்தக் கடவுளும் சேர்ந்து விவசாய தெய்வங் களாகக் கருதப்பட்டன. ஷூ என்பது வளிமண்டலத்தின் கடவுள். ஸெராபிஸ் என் பது மனித உருவில் அமைந்த தெய்வீக மாட்சிமை, இனப்பெருக்கம், சுகம், மறுமைவாழ்வு ஆகியவற்றின் கடவுள். எகிப்திய தெய்வங்களில் ஒன்றுகூட தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. யாத் 10:4-20. ஏனென்றால், விக்கிரகங்கள் ஒன்றுமே அல்ல. ஏசா 44:9,10,12-17.

இஸ்ரவேலரைப் போக அனுமதிக்குமாறு பார்வோனின் ஊழியர்கள் அவனை வற்புறுத்தினார்கள், ஆனால் அவன் மீண்டும் மறுத்தான். ஒரு சமரச யோசனையைச் சொன்னான், அதற்கு மோசே மறுத்துவிட்டார்; ஏனென்றால் விசுவாசக் குடும்பத்திலும் தொழுகையிலும் பெண்களும் குழந்தைகளும் இன்றி யமையாத அங்கத்தினர்கள்.

இறுதியாக, ரா என்பது எகிப்தின் முக்கியக்கடவுளான சூரியக்கடவுள். தோத் என்பது சந்திரக் கடவுள். இரண்டு கடவுள்களாலும் வெளிச்சம் கொடுக்கமுடிய வில்லை. பார்வோன் மீண்டும் பேரம்பேச முயன்றான், ஆனால் பயனில்லை. மூன்று நாட்கள் எகிப்து இருளில் மூழ்கியது, ஆனால் இஸ்ரவேலர் வாழ்ந்த பகுதி யில் வெளிச்சம் இருந்தது. அந்த வேறுபாடு எவ்வளவு பிரமிப்பாக இருந்திருக்கும்!

அத்தேசத்திற்கு பலத்த அடிகள் விழுந்த போதிலும்கூட, பார்வோன் இணங்க வில்லை, போராட்டக் குணத்தை விடவில்லை. அதற்கான நோக்கங்கள் தெரிய வில்லை, ஆனால் அகந்தை இருந்தது தெரிகிறது. ஆதாரம் வலுவாக இருந்தா லும், அவனது ஊழியர்களே ‘எந்தமட்டும் இந்த மனிதன் நமக்குக் கண்ணியா யிருப்பான்? தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனைசெய்ய அந்த மனிதரைப் போகவிடும்; எகிப்து அழிந்துபோகிறதை நீர் இன்னும் அறியவில்லையா’ என்று சொல்லுமளவிற்கு எல்லாம் நிகழ்ந்தாலும், சரியான தீர்மானத்தைச் செய்திருக்க வேண்டியவன், முதலில் சற்றுச் சம்மதிப்பதுபேலத் தெரிந்தாலும், இறுதியில் தேவ சித்தத்திற்கு அர்ப்பணிக்க மறுக்கிறான்; எபிரெயரைப் போகவிடவில்லை.

‘அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட் டிமை’. நீதி 16:18.

# மேலும் படிக்க:

'தேவனுடைய மக்கள் விக்கிரகாராதனையின் சீர்கேடான செல்வாக்கின்நிமித்தம் வஞ்சிக்கப்படாதபடிக்கு எகிப்தியர்களின் கொடிய சித்திரவதைகளை அனுபவிக்க விடப் பட்டார்கள். பார்வோனை தேவன் கையாண்ட விதத்தில், விக்கிரகாராதனையை தாம் வெறுப் பதையும், கொடுமையையும் ஒடுக்குதலையும் தண்டிப்பதில் தீர்மானமாக இருப்பதையும் வெளிப்படுத்தினார். ராஜாவின் இருதயத்தைக் கடினப்படுத்துவதற்கு தெய்வீக வல்ல மையை வெளிப்படுத்தவில்லை. தம் தெய்வீக வல்லமைகுறித்து மிகவலுவான ஆதாரத்தை பார்வோனுக்கு தேவன் கொடுத்தார், ஆனால் அந்த ராஜா வெளிச்சத்திற்கு இணங்குவதற்கு பிடிவாதமாக மறுத்துவிட்டான். நித்திய வல்லமையின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் காண மறுத்ததால். தன் கலகத்தில் அதிக தீவிரமடைந்தான். முதல் அற்புத்தின்போதே இணங்க மறுத்ததால், அவன் விதைத்த கலகத்தின் விதைகள், அதற்கேற்ற அறுவடையைக் கொடுத்தன.

எகிப்தியர்கள் சூரியனையும் சந்திரனையும் வழிபட்டார்கள்; சூழ்இருள் உண்டான தன் மூலம், அந்தக் கொத்தடிமைகளின் நலனிற்கு பொறுப்பானவரின் வல்லமையால் எகிப்தியரும் அவர்களது தெய்வங்களும் தண்டிக்கப்பட்டார்கள். அது கொடிய அனுபவமாக இருந்தாலும், அந்த நியாயத்தீர்ப்பு தேவனுடைய மனதுருக்கத்திற்கும், அழிவை அவர் விரும் பாததற்கும் ஓர் ஆதாரமாக இருக்கிறது. அந்த வாதைகளிலேயே மிகவும் கொடிய, இறுதி யான வாதையை மக்களுக்குக் கொடுப்பதற்குமுன் அவர்கள் சிந்திக்கவும் மனந்திரும்பவும் விரும்பினார்.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *மக்களைப் போகவிடுவதுதான் பார்வோன் செய்திருக்கவேண்டிய சரியான தீர் மானம், ஆனாலும் அவ்வாறு செய்யாமல், தன் இருதயத்தை மிகவும் கடினபடுத் தினதுபற்றித் தியானியுங்கள். இவ்வளவுக்கு ஒருவர் தன்னைத் தானே எவ்வாறு வஞ்சிக்கமுடிகிறது? சரியான பாதையும், சரியான தீர்மானமும் நமக்குமுன்பாக இருக்கும்போது, நாம் மோசமான தீர்மானங்களைச் செய்தால் எவ்வளவு தூரம் பாவத்தில் கடினப்படமுடியும் என்பதுபற்றி எப்படிப்பட்ட எச்சரிப்புகளை இதி லிருந்து பெறலாம்? வேதாகமத்தில் இதேபோன்ற தவற்றை வேறு யாரெல்லாம் செய்திருக்கிறார்கள்? உதாரணத்திற்கு, யூதாஸ்பற்றி யோசியுங்கள்.*

2 *பார்வோன் தன் சொந்த தேசத்திற்கும் மக்களுக்கும் அழிவைக் கொண்டுவந்த போதிலும் ஒரு கட்டத்தில், 'நான் இந்த முறை பாவம் செய்தேன்; கர்த்தர் நீதி யுள்ளவர்; நானும் என் ஜனமும் துன்மார்க்கர்' என்று சொன்னான். யாத் 9:27. அப் போதைக்கு அது அருமையான பாவ அறிக்கையாக இருந்தாலும்கூட, அது மெய் யானது அல்ல என்பதை எவ்வாறு அறியமுடிகிறது?*

**பாடம் 5** **ஜூலை 26-ஆகஸ்ட் 1**



# பஸ்கா

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 11:1–10; மீகா 6:8; யாத் 12:1–30; 1கொரி 5:7; யாத் 13:14–16; எபி 11:28.

**மனன வசனம்:** அப்பொழுது உங்கள் பிள்ளைகள்: இந்த ஆராதனையின் கருத்து என்ன என்று உங்களைக் கேட்டால், இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். யாத் 12:26,27.

கடைசியும் பத்தாவதுமான வாதை நேரிடவிருந்தது. இறுதி எச்சரிப்பு கொடுக்கப்பட்டது; இறுதித் தீர்மானத்தைச் செய்தாகவேண்டும். அது வாழ்வா, சாவா பிரச்சினை. தனிப்பட்ட நபரின் வாழ்க்கை மட்டுமல்ல, குடும்பங்களும் ஒட்டுமொத்த தேசமும் செழிப்பது அதைச் சார்ந்துதான் இருந்தது. ஏராளமான மக்கள் வாழப்போகிறார்களா, சாகப்போகிறார்களா என்பதைத் தீர்மானிக்கிற பொறுப்பு பார்வோனுக்கும் அவரது அதிகாரிகளுக்கும் இருந்தது. ஜீவனுள்ள தேவனை பார்வோன் எவ்வாறு பார்க்கப்போகிறான் என்பது அவனது எதிர்காலத்தை மட்டுமல்ல, அவனது தேசத்தின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கவிருந்தது.

சூழ்நிலைகள் நம்மீது கடுமையாக அழுத்தும்போது, அடுத்து நாம் எடுத்து வைக்கிற அடி, செல்கிற திசை நம் வாழ்க்கையில் மட்டுமல்ல, பிறரது வாழ்க்கையிலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்; இதை எவ்வாறு உணருகிறோம்? என்ன தீர்மானத்தைச் செய்கிறோம்? நாம் சரியான தீர்மானம் செய்வதற்கான ஞானத்தையும் அறிவையும் ஆற்றலையும் கொடுப்பதற்கு தேவன் அதிகம் விரும்புகிறார். 1கொரி 1:30; பிலி 2:13.

ஆனாலும், நம் இருதயங்களில் பிடிவாதம் இருப்பதால், நாம் சரியானதைச் செய்ய விரும்புவதே இல்லை. நமக்கு எது சரியெனத் தெரியும்; ஆனால் செய்ய மாட்டோம். யாத்திராகம அனுபவத்தில், திரளான ஆதாரங்கள் கொடுக்கப்பட்ட போதிலும், ஒரு மனிதன் கீழ்ப்படிய மறுத்ததால், அது அவனுக்கும் அவனைச் சேர்ந்த அநேகருக்கும் அழிவைக் கொண்டுவந்தது; இது ஒரு மாறாத நியதி.

***2025 ஆகஸ்ட் 2 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# இன்னும் ஒரு வாதை

'கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்'. ஆமோஸ் 3:7. பார்வோனுக்கு அடுத்து நிகழ விருந்ததை தீர்க்கதரிசியாகிய மோசேமூலம் தேவன் வெளிப்படுத்தினார். மிகத்தீரவிரமான அந்த எச்சரிப்பு பார்வோனுக்குக் கொடுக்கப்பட்டது. அது பெருமை, அடக்குமுறை, வன்முறை, விக்கிரகாராதனை ஆகியவற்றின் மீதான நியாயத்தீர்ப்பு; இவை அனைத்தும்தான் எகிப்தின்மீது அந்த அழிவுகளைக் கொண்டுவந்தன.

**எகிப்தின்மீது நியாயத்தீர்ப்பை வழங்குவதற்குமுன் தேவன் கொடுத்த எச்சரிப்பு என்ன? யாத் 11:1-10.**

எகிப்தியருக்கு காலதவணை கொடுக்கப்பட்டது, மூன்றுநாள்மட்டும் உண்டான காரிருளின்போது, சமீபத்தில் நடைபெற்ற நிகழ்வுகளையும் அவற்றின் பொருளையும் யோசித்துப் பார்க்க அவர்களுக்கு நேரமிருந்தது. மேலும் சரியானதைச் செய்வதற்கு கடைசியாக ஒருமுறை பிரத்தியேகமாக எச்சரிப்பும் கொடுக்கப்பட்டது. ஆனால் மோசே 'உக்கிரமான கோபத்தோடே பார்வோனை விட்டுப் புறப்பட்டான்' என்று யாத் 11:8 சொல்கிறது. மோசே ஏன் கோபத்தோடு புறப்படவேண்டும்? ஏனென்றால், அந்தப் பத்தாவது வாதை, பார்வோனின் இருதயக் கடினத்தின்நிமித்தம் பல அப்பாவி மக்களைத் தாக்கி, பெருந்துயரத்தை உண்டாக்கவிருந்ததை அவர் அறிந்திருக்கவேண்டும்.

மேலும், வேதாகம அடையாளங்களில் பத்து என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. பத்து என்பது முழுமை அல்லது பூரணத்தைச் சுட்டிக்காட்டியது (பத்துக்கற்பனைகள் தேவனுடைய ஒழுக்கச்சட்டத்தின் முழுமையான வெளிப்பாடாக இருந்ததை யோசித்துப் பாருங்கள்). எகிப்தின் பத்து வாதைகளும் தேவனுடைய நியாயத்திற்கும், நீதியான தண்டனைக்கும் முழு வெளிப்பாடாக இருந்தது.

தேவனே நியாயாதிபதி; பெருமைக்கும், அநியாயத்திற்கும், பாகுபாட்டிற்கும், முரட்டாட்டத்திற்கும், அடக்குமுறைக்கும், கொடுமைக்கும், சுயநலத்திற்கும் அவர் எதிர்த்து நிற்கிறார். உபத்திரவத்திலும் துஷ்பிரயோகத்திலும் இருப்பவர்களுக்கும், தவறாக நடத்தப்படுகிறவர்களுக்கும் தேவன் உதவிசெய்கிறார்; நியாயம்செய்வார். அது உண்மையில் அவரது அன்பின் வெளிப்பாடு. சங் 2:12; 33:5; 85:11; 89:14; 101:1; ஏசா 16:5; எரே 9:24.

நாமும் அன்புகாட்டவும் நியாயமாக வாழவும் நம்மால் இயன்ற அளவுக்கு முயலவேண்டும். ஆனாலும், இதில் ஏதாவது ஒன்றில் அளவை மீறிச் செல்லவும் வாய்ப்புள்ளது. 'அன்பினால்' தவறுகளையும், சரிசெய்யவேண்டிய விஷயங்களையும் கண்டுகொள்ளாமல் விடவும் வாய்ப்புள்ளது. அல்லது நியாயத்தை சற்றும் வளைக்கமுடியாத ஒன்றுபோலக் கருதி நடக்கவும் வாய்ப்புள்ளது. இந்த இரண்டு தீவிரப்போக்கும் சரியல்ல. மாறாக நாம் செய்யவேண்டியது இதுதான்: 'இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?' மீகா 6:8.

**இதில் சமநிலையைக் கடைப்பிடிக்க இயலாவிட்டால் (நம்மால் முடியாத ஒன்றுதான்) நியாயத்தைவிட இரக்கத்தின் பக்கம் சாய்வது ஏன் நல்லது? அல்லது அப்படிச் செய்வது நல்லதா?**

# மறுவாழ்வு

**இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்படுவதற்குமுன் மோசேயிடமும் ஆரோனிடமும் தேவன் சொன்ன விசேஷித்த அறிவுரை என்ன? யாத் 12:1-20.**

---

முதியவர்கள், சிறுபிள்ளைகளுடைய தாய்மார்கள், மிருகங்கள் என அனைவரும் கிளம்பவேண்டியிருந்ததால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுபற்றி மோசே மற்றும் ஆரோனிடம் தேவன் சொல்லியிருப்பாரென நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் தேவனுடைய கட்டளை ஆச்சரியமளிக்கிறது; அவர் பஸ்காவை ஆசரிக்கச் சொல்லுகிறார். அதாவது, அவர்களை மீட்கவிருந்த கர்த்தரைத் தொழுவதில் அவர்கள் கவனம்செலுத்த வேண்டியிருந்தது. மற்ற அனைத்தும் அதனதன் நேரத்தில் நடக்கவிருந்தன.

ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரு ஆட்டுக்குட்டியை அடிக்கவேண்டும், அதில் ஒன்றையும் மீதியாக வைக்கக்கூடாது. ஒவ்வொருவரும் அவரவர் பங்கைப் புசிக்கவேண்டும், ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்க அந்தக் குடும்பத்தில் போதுமான ஆட்கள் இல்லாவிட்டால், பக்கத்து குடும்பத்தினருடன் சேர்ந்து புசிக்கவேண்டும்.

**இறுதி வாதையின்போது தேவன் அவர்களுக்கு என்ன செய்யவிருந்தார்? யாத் 12:13,14. அவை அனைத்தும் எதை அடையாளப்படுத்துகின்றன?**

---

அந்த யாத்திரை அனுபவத்தை கடந்தகாலத்தில் தேவன் தங்கள் முற்பிதாக்களுக்குச் செய்தவற்றின் நினைவுகூருதலாகமட்டும் அல்லாமல், ஒவ்வொரு தலைமுறையிலும் அவரே விடுதலையைக் கொடுக்கிறவர் என்கிற உண்மையை உணர்ந்தும் ஒவ்வொரு வருடமும் அதைக் கொண்டாடவேண்டியிருந்தது. ஒவ்வொரு தலைமுறையினருக்கும் அது ஒரு புதிய அனுபவமாக இருக்கவேண்டியிருந்தது.

பஸ்காவின் அர்த்தம்பற்றி 12,13ம் வசனங்கள் விளக்குகின்றன; அதாவது தண்டனை தீர்ப்பு இஸ்ரவேலரைக் 'கடந்துபோகும்'; அதனால் அவர்கள் 'பஸ்காவை' நினைவுகூருதலாக ஆசரிக்கவேண்டும். பஸ்கா என்றால், 'கடந்துசெல்லுதல்' என்று அர்த்தம்; அதாவது இரட்சிப்புக்கும் ஜீவனுக்கும் அடையாளமான ஆட்டுக்குட்டியின் இரத்தமானது யாருடைய வீட்டுவாசல் நிலைக்கால்களில் தெளிக்கப்பட்டிருந்ததோ, அந்த வீட்டை அழிவு கடந்துசென்றது. பஸ்கா என்பதற்கான எபிரெய பெயர்ச்சொல் பெஷாக்; இதற்கான வினைச்சொல்லுக்கு 'கடந்துசெல்' என்று அர்த்தம்.

பஸ்கா கொண்டாட்டம், தேவன் தம் மக்களுக்காக மகத்துவத்தோடும் கிருபையோடும் செய்தவற்றை இஸ்ரவேலரில் ஒவ்வொரு நபருக்கும் நினைவுப்படுத்தவேண்டும். அவர்களது தேசிய அடையாளம் பாதுகாக்கப்படவும், மதநம்பிக்கைகள் உறுதிப்படவும் அந்தக் கொண்டாட்டம் உதவியது.

---

**கடந்தகாலத்தில் தேவன் செய்த நன்மைகளை நினைவுகூருவதும், எதிர்காலத்திலும் அவர் நன்மைசெய்வார் என்று நம்புவதும் ஏன் முக்கியம்?**

# பெஷாக்

**இந்தப் புதிய பண்டிகை கொண்டாட்டத்தில் இரத்தம் என்ன பங்காற்றுகிறது? யாத் 12:17-23.**

இந்தக் கொண்டாட்டத்தில் பலியிடப்பட்ட மிருகத்தின் இரத்தம் முக்கியப் பங்காற்றியது. இந்த விருந்தில் பங்கேற்றவர்கள் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை தங்கள் வீட்டுவாசலின் நிலைக்கால்களில் தெளிக்கவேண்டும். அவ்வாறு தெளிக்காதவர்களுக்கு அழிவு நேரிடவிருந்ததால், தங்களை தேவன் பாதுகாப்பாரென இவ்வாறு தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தினார்கள்.

இது சுவிசேஷத்தின் மிகவல்லமையான வெளிப்பாடு! பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றதாக இருக்கவேண்டும், ஏனென்றால் அது, 'உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை' சுட்டிக்காட்டியது. யோவான் 1:29. மிருகத்தின் இரத்தம் முக்கியப் பங்காற்றியது: அது பாதுகாப்பையும், மரணத்தில் ஜீவனின் அடையாளத்தையும் சுட்டிக்காட்டியது. 'நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்துதேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.' யாத் 12:13.

பஸ்கா கொண்டாட்டம் சுவிசேஷத்தை எடுத்துக்காட்டியது, ஏனென்றால் அது அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று, வாக்குத்தத்த தேசத்திற்குச் செல்வதை மட்டுமல்ல, நம் பாவங்களுக்கு இயேசுகிறிஸ்து பலியாகவிருந்ததையும், அவரது இரத்தத்தால் மூடப்படுகிற அனைவருக்கும் அவரது புண்ணியங்கள் கிடைப்பதையும் சுட்டிக்காட்டியது.

இந்தக் கொண்டாட்டத்தை மனதில்வைத்தே பல நூற்றாண்டுகளுக்கு பிறகு பவுல் இவ்வாறு எழுதினார்: 'நீங்கள் புளிப்பில்லாதவர்களாய் இருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே' 1கொரி 5:7.

ஈஸ்ட் அல்லது புளித்த மாவு போன்றவை ரொட்டிக்கான மாவை ஆயத்தப்படுத்தப் பயன்படுகின்றன. முதன்முதலாக வேதாகமத்தில், எகிப்திலிருந்து இஸ்ரவேலர் புறப்பட்ட சமயத்தில், புளிப்பில்லாத அப்பத்தைத் தயாரித்தது சம்பந்தமாக அது குறிப்பிடப்படுகிறது. புளித்தமாவை அவர்களது வீடுகளிலிருந்து நீக்கவேண்டும். யாத் 12:8, 15-20; 13:3-7. இந்தச் சம்பவத்தில், புளித்தமாவு பாவத்தின் அடையாளமாக இருந்தது. 1கொரி 5:6-8. ஆகவே, பஸ்கா பண்டிகை கொண்டாடப்படுகிற அந்த வாரம்முழுவதும் அதைப் பயன்படுத்தக்கூடாது.

புளிப்பில்லாத அப்பமானது, எல்லா சோதனைகளையும் மேற்கொண்டு, நமக்காகதம் ஜீவனையே கொடுத்த பாவமற்ற மேசியாவைச் சுட்டிக்காட்டுகிறது. யோவான் 1:29; 1கொரி 5:7; எபி 4:15. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட 'ஈசோப்புக்' கொழுந்து சுத்திகரிக்கிற தேவ கிருபையை அடையாளப்படுத்தியது. சங் 51:7. சுருக்கமாக, பெஷாக் பண்டிகை, இயேசுவின் மீட்பின் பணியை வெளிப்படுத்துகிறது.

---

**பாவத்திற்கு நிவாரணம் செய்வதற்கு இயேசு இரத்தம் சிந்தவேண்டியிருந்தது என்கிற உண்மையானது பாவம் உண்மையில் எவ்வளவு மோசமானது என்பதுபற்றி என்ன போதிக்கிறது?**

# ஒரு தலைமுறையிலிருந்து இன்னொன்றிற்கு

பிள்ளைகள் தேவனையும் அவரது அன்பின் பாதுகாப்பையும் அறிந்துகொள்கிற விதத்தை சங்கீதக்காரன் சொல்கிறார்: 'உம்முடைய செயல்களை ஒரு தலைமுறை இன்னொரு தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும்.' சங் 145:4. (சமகால மொழிபெயர்ப்பு.) ஒரு குடும்பம் இன்னொரு குடும்பத்திடம் தேவனையும், அவரது மகத்துவமான கிரியைகளையும், அவரது போதனைகளையும்பற்றிப் பேசவேண்டும்; வேதாகம அறிவு அடுத்த தலைமுறைக்குக் கிடைப்பதற்கு இவற்றையெல்லாம் செய்யவேண்டும்.

**யாத் 12:24-28 சொல்கிற முக்கியக் கருத்து என்ன?**

இஸ்ரவேலில் பெற்றோர்தாம் முதல் ஆசிரியர்கள்; அவர்கள் யாத்திராகமச் சம்பவத்தை தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். அது வெகுகாலத்திற்குமுன் நடந்திருந்தாலும்கூட அதை கடந்தகால ஒரு வரலாற்று நிகழ்வாக மட்டுமல்ல, தங்களுடைய சொந்த அனுபவமாகவும் சொல்லவேண்டும். அந்தப் பண்டிகையைக் கொண்டாடுவதன்மூலம், தங்கள் முற்பிதாக்களின் அனுபவம் போலவே தங்கள் அனுபவமும் இருப்பதை உணர்ந்து, அந்த வரலாற்றின் அனுபவத்தை தங்கள் வாழ்க்கையில் உண்மையாக காணவேண்டும். 'நான் எகிப்தில் இருந்தேன், எகிப்தின் தேவர்கள் தோற்கடிக்கப்பட்டதையும் எகிப்தின் வாதைகளையும் கண்டேன், நான் விடுவிக்கப்பட்டேன்' என்று அப்பா சொல்லுவார். யாத்திராகமப் புத்தகத்தில், பஸ்காபற்றி பிள்ளைகள் கேட்கிற கேள்விகளுக்கு தகப்பன்மார் எவ்வாறு பதிலளிக்கவேண்டுமென இரண்டுமுறை வலியுறுத்தப்படுகிறது. உபா 6:6-8; யாத் 13:14-16. எகிப்திலிருந்து விடுதலையாவதைக் கொண்டாடுமாறு இஸ்ரவேலரிடம் சொல்லப்பட்ட சமயத்தில் அவர்கள் எகிப்தில்தான் இருந்தார்கள். எனவே அந்தக் கொண்டாட்டம் முழுவதும் விசுவாசம் சம்பந்தப்பட்டதாக இருந்தது. அது குறித்த வழிகாட்டல்களைப் பெற்றபிறகு, ஜனங்கள் தங்கள் மீட்பரை 'தலை வணங்கிப் பணிந்துகொண்டார்கள்' யாத் 12:27. பிறகு, பஸ்கா பண்டிகையின் வழிகாட்டல்களின்படி நடந்தார்கள்.

உபாகமப் புத்தகத்தில் இஸ்ரவேலர்கள் அதை தங்களுடைய சொந்தப்பயணம்போல அனுபவித்து, சொல்லுமாறு கட்டளைபெற்றார்கள். அவர்கள் அதை தங்களது தற்கால அனுபவம்போலச் சொல்வதைக் கவனியுங்கள்: 'என் தகப்பன் அழிவுக்கு நேரான சீரிய தேசத்தானாயிருந்தான். அவன் கொஞ்சம் ஜனங்களோடே எகிப்துக்குப்போய், அவ்விடத்தில் பரதேசியாய்ச் சஞ்சரித்து, அங்கே பெரிய பலத்த திரட்சியான ஜாதியானான். எகிப்தியர் எங்களை ஒடுக்கி, எங்களைச் சிறுமைப்படுத்தி, எங்கள்மேல் கடினமான வேலையைச் சுமத்தினபோது, எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டோம்; கர்த்தர் எங்கள் சத்தத்தைக் கேட்டு, எங்கள் சிறுமையையும் எங்கள் வருத்தத்தையும் எங்கள் ஒடுக்கத்தையும் பார்த்து, எங்களைப் பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரங்களினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, எங்களை இவ்விடத்துக்கு அழைத்து வந்து, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய இந்தத் தேசத்தை எங்களுக்குக் கொடுத்தார்.' உபா 26:5-9. மேலும் பஸ்கா சம்பவத்தை (அல்லது பரிசுத்த வரலாற்றின் ஏதாவது சம்பவத்தை) நினைத்துப் பார்த்து, அதை தங்கள் பிள்ளைகளுக்கு மீண்டும் சொல்வதன்மூலம், பெற்றோரும்கூட தேவன் தங்களுக்கும் மக்களுக்கும் செய்தவற்றை நினைவுகூரமுடியும். அதைச் சொல்வதால், கேட்கிறவர்களுக்கு மட்டுமல்ல, சொல்கிறவர்களுக்கும் நன்மையை உண்டாக்கும்.

# தெய்வீக நியாயத்தீர்ப்பு

**எகிப்தின் முதற்பேறனைத்தையும் தேவன் அடித்ததுபற்றி யாத் 12:29,30இல் வாசியுங்கள். முதற்பேறுகளை குறிப்பாக தேவன் அடித்தது ஏன்? எபி 11:28.**

எகிப்தின் கடைசி வாதை முதற்பேறானவைகளுக்கு சம்பவித்தன. அவை எகிப்தின் அனைத்துப் பொய்த்தெய்வங்களுக்கும், அந்தப் பொய்த்தெய்வங்களைத் தொழுத குடும்பங்களுக்கும் தேவன் கொடுத்த நியாயத் தீர்ப்பு; அவை பயனற்ற விக்கிரகங்கள்; எனவே, அவற்றைத் தொழுதவர்களின் உணர்வுகளும், விருப்பங்களும், பயங்களும்தான் அத்தொழுகையில் பிரதிபலித்தன.

முந்தின வாதைகள் காட்டினதுபோல, மக்களை இரட்சிக்க அந்தத் தெய்வங்கள் திறனற்றிருந்தன. பத்தாவது வாதை எகிப்தியர்களுக்கு மிகப்பெரிய அழிவுகளை உண்டாக்கியதால், அந்த வாதையின்போது அந்தத் தெய்வங்களின் பயனின்மை மேலும் தெளிவாக விளங்கியது. ‘எகிப்தின் பரந்த எல்லையெங்கும் ஒவ்வொரு குடும்பத்தின் அகந்தையும் அடக்கப்பட்டது. துயரத்தால் உண்டான அழுகுரல்களும் கூச்சல்களும் ஆகாயத்தை நிரப்பின. ராஜாவும் அரசவையினரும் தங்கள் கட்டுப்பாட்டிற்கு மிஞ்சிய அந்தப் பயங்கரத்தைக் கண்டு, முகம் வெளிற, உதடுங்கள் நடுங்க திகைத்து நின்றார்கள்.’

பார்வோனை இறுதி அதிகாரம் படைத்தவனாக, எகிப்தின் கடவுளாகப் பார்த்தார்கள்; அவனுக்கு முதல்பிறந்த குமாரன் கடவுளின் மகனாக எண்ணப்பட்டான். ஐசிஸ் தெய்வமானது பிள்ளைகளைப் பாதுகாக்கிற தேவதையாகக் கருதப்பட்டது; ஹெகெட் தெய்வமானது பிள்ளைப்பேற்றின்போது பெண்களுக்கு உதவுகிற தெய்வமாகக் கருதப்பட்டது; மின் தெய்வமானது இனப்பெருக்கத்தின் கடவுளாகக் கருதப்பட்டது. இதுபோக, இனப்பெருக்கத்துடன் சம்பந்தப்பட்ட பல்வேறு கடவுள்களும் எகிப்தில் இருந்தன. அந்தக் கடவுள்கள் அனைத்தும் ஜீவனுள்ள தேவனுடன் ஒப்பிடும்போது பயனற்றவையாக இருந்தன. ‘கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?’ என்று மோசே சொல்கிறார். யாத் 15:11. ‘கர்த்தர் எல்லாத் தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்; அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார்’ என்று எத்திரோ சாட்சியிட்டார். யாத் 18:11.

யாத் 1இல், இஸ்ரவேலரைப் பெலவீனப்படுத்தவும், அடக்கவும், தாழ்த்தவும் பார்வோன் கட்டளையிட அவர்களுக்கு புதிதாகப் பிறக்கிற ஆண்குழந்தைகளை எகிப்தியர்கள் கொன்றிருந்தார்கள். இப்போது தேவனுடைய தண்டனை எகிப்தின் தலைப்பிள்ளைகளுக்கு நேரிடுகிறது. விதைப்பதை அறுத்தே ஆக வேண்டும். நம் தீர்மானங்களும் நடத்தையும் விளைவுகளை உண்டாக்குகின்றன. இன்னொரு வேதனையான உண்மை, நம் தவறான செயல்களின் விளைவுகள் நம்மை மட்டும் பாதிப்பதில்லை. மற்றவர்களும், சிலசமயங்களில் அநேகரும், ஏன் ஒன்றுமறியாத பலரும்கூட பாதிக்கப்படலாம். அதுவே பாவத்தின் தன்மை.

**மற்றவர்களுடைய பாவங்களால் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள்? அல்லது, உங்களுடைய பாவங்களால் எவ்வாறெல்லாம் மற்றவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? நம்முடைய ஒரே நம்பிக்கை என்ன?**

# மேலும் படிக்க:

'பஸ்காவானது எகிப்திலிருந்து கிடைத்த விடுதலையை மட்டுமல்ல, மகா விடுதலையின் நாளில் பாவ அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்து தம் மக்களுக்குக் கொடுக்கப்போகிற மகத்தான விடுதலையையும் சுட்டிக்காட்டுகிற ஞாபகார்த்த பண்டிகையாகவும் வழக்கமான பண்டிகையாகவும் இருக்கவேண்டியிருந்தது. பலி ஆடு "தேவ ஆட்டுக்குட்டியை" சுட்டிக் காட்டுகிறது, அவரில்தாம் நம் ஒரே நம்பிக்கை இருக்கிறது. "பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே" என்று அப்போஸ்தலன் சொல்கிறார். 1கொரி 5:7. பஸ்கா ஆடு அடிக்கப்படுவதுமட்டும் போதாது; அதன் இரத்தத்தை நிலைக்கால்களில் தெளிக்க வேண்டும்; அப்போதுதான் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் புண்ணியங்கள் ஆத்துமாவில் பலிக்கும். அவர் உலகத்திற்காக மரித்தார் என்று மட்டுமல்ல, தனிப்பட்ட ஒவ்வொருவருக்காகவும் மரித்தார் என்றும் நம்பவேண்டும். பாவநிவாரணபலியின் புண்ணியத்தை நாம் சொந்தமாக்கவேண்டும்'.[1]

இன்றும், மிகத்தீவிர யூதக்குடும்பத்தினர்கள் உலகம் முழுவதிலும் பெஷாக் எனப்படும் பஸ்காவைக் கொண்டாடுகிறார்கள். அவர்களுக்கு 'பஸ்கா ஒழுங்கு' என்று ஒரு நிகழ்ச்சி உண்டு, அப்போது யாத்திராகமப் பயணத்தை நினைவுகூர்ந்து, விசேஷித்த விருந்துண்டு மகிழ்வார்கள். உண்மை என்னவென்றால், யாத்திராகம காலம் முதல் இது கொண்டாடப்பட்டு வருகிறது! மிகத்தீவிர யூதர்களாலும் ஆசரிக்கப்படுகிற ஏழாம் நாள் ஓய்வுநாள் மட்டும்தான், பண்டைய காலம்முதல் ஆசரிக்கப்பட்டு வருகிறது.

[1] Ellen G. White, Patriarchs and Prophets, p. 277.

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *தலைப்பிள்ளைகளை தேவன் அடித்தார், அவர்களில் அநேகர் 'குற்றம்புரியாதவர்களாக' இருந்திருப்பார்கள். இதில் கர்த்தருடைய 'நியாயத்தை' நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? தேவன் அன்புள்ளவர் என்கிற மகத்தான உண்மை இதற்கு எவ்வாறு ஒத்துப்போகும்? ஜலப்பிரளயம்பற்றியும் யோசியுங்கள். இதை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?*

2 *விசுவாசிகள் இயேசுவின் இரத்தத்தால் மூடப்படுகிறார்கள். அவரது இரத்தம் சகல அக்கிரமங்களிலிருந்தும் அவர்களைச் சுத்திகரிக்கிறது என்று அடையாளமாகச் சொல்லப்படுவதின் அர்த்தம் என்ன?*

3 *கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அவரது அனுபவத்தில் பங்குபெறவேண்டும். தேவவார்த்தையே வாழ்க்கையின், செயலின் அடிப்படை ஆற்றலாகும்படிக்கு அதைப் பெற்றுக்கொண்டு, தன்மயமாக்கவேண்டும். கிறிஸ்துவின் வல்லமையால் அவர்கள் அவரது சாயலாய் மாறி, தெய்வீக சாற்றுப்பண்புகளைப் பிரதிபலிக்கலாம். கிறிஸ்துவின் ஆவியும் பணியும் அவரது சீடர்களுடைய ஆவியும் பணியுமாக மாறவேண்டும். எழுதப்பட்ட இந்த வார்த்தைகளின்படி கிறிஸ்து நம் வாழ்க்கையில் செய்வதற்கு அவரை எவ்வாறு அனுமதிக்கலாம்?*



# சிவந்த சமுத்திரத்தின் வழியாய்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 12:31–36; யாக் 2:17–20; யாத் 13:1–14:31; எபி 11:22; யாத் 15:1–21; வெளி 15:2–4.

**மனன வசனம்:** அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான். யாத் 14:13,14.

பழைய ஏற்பாட்டில் தேவமக்கள் பெற்ற மிகவும் மகிமையான அனுபவம் தான் யாத்திராகம அனுபவம். தேவன் தம்முடைய பாணியில் எபிரெயர்களுடைய எதிரிகளைத் தோற்கடித்து, இஸ்ரவேலரை வாக்குத்தத்த தேசத்திற்குள் வெற்றிகரமாகக் கொண்டுவந்த சம்பவம் அது. கிறிஸ்துவிலுள்ள இரட்சிப்புக்கும் மீட்புக்கும் ஓர் அடையாளமாகவும் இருக்கிறது.

மனிதகண்ணோட்டத்தில், இஸ்ரவேலர் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்தார்கள்; தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலையில் இருந்தார்கள்; அவர்கள் விடுவிக்கப்படுவது, தெய்வீக செயலால் மட்டுமே ஆகக்கூடியதாக இருந்தது. பாவத்தோடு நம்முடைய அனுபவமும் அப்படிப்பட்டதே. நம்மில் நாமே நம்பிக்கையற்ற நிலையில் இருக்கிறோம். யாத்திராகம அனுபவத்தைக்காட்டிலும் பரபரப்பான ஓர் அனுபவம் நமக்கு நிகழ்ந்தாகவேண்டும். அதைத்தான் கிறிஸ்துவின் சிலுவையிலும் அவர் நமக்காகச் செய்த யாவற்றிலும் காண்கிறோம். யாத் 12இல், இஸ்ரவேலர் கோசேன் நாட்டிலிருந்து கிளம்பினதுமுதல் யாத் 15இல் மிகுந்த மகிழ்ச்சியுடன் பாடப்பட்ட மோசேயின் பாடல் வரையிலும் நிகழ்ந்த நிகழ்வுகள் சிலிர்ப்பூட்டுகிற மகத்தான அற்புதங்கள். தேவனுடைய அடையாளங்களும் அற்புதங்களும் ஆச்சரியமிக்க மீட்பின் கிரியைகளும் உச்சக்கட்டத்தில் இருந்தன.

ஆனாலும் இவைகூட கிறிஸ்து நமக்காக சிலுவையில் செய்திருப்பதற்கு ஈடானவை அல்ல; யாத்திராகம அனுபவம் அதை முன்னுரைக்கிற வெறும் அடையாளமாகமட்டுமே இருந்தது.

*2025 ஆகஸ்ட் 9 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# போய், கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்

பஸ்கா கொண்டாடப்பட்ட அன்று இரவில், இரத்தத்தால் மூடப்படாதவர்கள் மீது தேவநியாயத்தீர்ப்பு சம்பவித்தது. யாத் 12:1-12. பதவி, கல்வித்தகுதி, சமுதாய அந்தஸ்து, பாலினம் என எந்தப் பாகுபாடுமின்றி அது நிகழ்ந்தது. பார்வோன்முதல் அடிமைகள்வரைக்கும், மிருகங்களின் தலையீற்றுக்கும்கூட தண்டனை கொடுக்கப்பட்டது. எகிப்தின் அகந்தையானது புழுதிக்குத் தாழ்த்தப்பட்டது.

**அவர்கள் அனைவரையும் போகும்படி பார்வோன் அனுமதித்த வேளையில், அவன் வைத்த விநோதமான வேண்டுகோள் என்ன? ஏன்? யாத் 12:31-36.**

எபிரெயர்களிடம் நீங்கள் போய், ஆராதனை செய்யுங்கள் என்று சொல்லிய வேளையில், 'என்னையும் ஆசீர்வதியுங்கள்' என்று வேண்டுகோள் வைக்கிறான். என்னையும் ஆசீர்வதியுங்கள் என்றால்?

தன் மக்கள் மத்தியில் பூமியின் 'கடவுள்' என்று எண்ணப்பட்ட எகிப்தின் ராஜா, எதற்காக அவ்வாறு கேட்கவேண்டும்? அவன் இறுதியாக எபிரெயர்களுடைய தேவனின் வல்லமையை உணர்ந்து, அதால் நன்மையடைய எண்ணியிருக்கவேண்டும். ஆனாலும் அவன் கலகத்திலும், பிடிவாதக்குணத்திலும், பாவத்திலும் அகந்தையிலும் மூழ்கியிருக்கும்போது, தேவன் அவனை எவ்வாறு ஆசீர்வதிக்கமுடியும்? இறுதியாக அவன் சம்மதித்தது உண்மைதான், ஆனால் யாவேயின் சித்தத்திற்கு அடிபணிந்து அவ்வாறு செய்யவில்லை. மாறாக, தோல்வியின்நிமித்தம் அவ்வாறு செய்தான். அவன் மனந்திரும்பவில்லை. பின்னர் அவன் நடந்துகொண்ட விதம் அதைக் காட்டுகிறது. தன் ராஜ்யத்தைச் சிதைத்துக்கொண்டிருந்த அழிவை நிறுத்த மட்டுமே முயன்றான்.

பார்வோன் தாழ்த்தப்பட்டான். மிகப்பயங்கரமான அந்த வாதையால் உண்டான பெருந்துயரத்தின் நிமித்தம், இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுக் கிளம்புவதற்கு அனுமதிகொடுத்தான். தனது செயல்களால் தனது தேசத்திற்கு நேரிட்ட துன்பங்களைப் பொருட்படுத்தாமல், முந்தைய காலங்களில் தான் வழங்க மறுத்த அனுமதியை, இப்போது கொடுக்கிறான். எகிப்திய மக்களும்கூட, எபிரெயர்கள் புறப்பட்டுச்செல்வதற்கு ஆர்வம்காட்டினார்கள், அதற்கான காரணமும் புரிகிறது. தயவு செய்து செல்லுங்கள், 'இல்லாவிட்டால் நாங்கள் எல்லோரும் இறந்துவிடுவோம்' என்றார்கள். யாத் 12:33. (சமகால மொழிபெயர்ப்பு).

அதேசமயம் எகிப்தைவிட்டு இஸ்ரவேலர் வெறுங்கையுடன் கிளம்ப தேவன் விடவில்லை, மாறாக, எதிர்பார்த்ததைவிட அதிக காலம் அவர்கள் பண்ணவிருந்த பயணத்திற்கு தேவையான பொருட்கள் கிடைப்பதற்கு வழிசெய்தார். யூதர்களை வேகமாக தங்கள் நாட்டைவிட்டுக் கிளப்புவதற்காகவே எகிப்தியர்கள் விலையுயர்ந்த பொருட்களைக் கொடுத்தனுப்பினார்கள், ஆனால் அவை பல நூற்றாண்டுகளாக இஸ்ரவேலர் அடிமைகளாகச் செய்த வேலைக்கான சம்பளமாக இருந்தன. எகிப்தியர்களைபொறுத்தவரை, இஸ்ரவேலர்நாட்டைவிட்டுவெளியேறுவதைவிட அந்தப் பொருட்களெல்லாம் மதிப்புள்ளவையாகவே தெரியவில்லை.

---

**நாமும்கூட எத்தனை சமயங்களில் தவறான செயல்களை அவை தவறானவை என்பதை நினைக்காமல், அவற்றால் உண்டாகிற விளைவுகளை நினைத்து 'மனந்திரும்புகிறோம்? அது ஏன் மெய்யான மனந்திரும்புதல் இல்லை? நாம் தற்சமயம் செய்தும் 'பிடிபடாமல்' இருக்கிற பாவங்களுக்குக்கூட மனம்வருந்துவதற்கு என்ன செய்யலாம்?**

# முதற்பேறனைத்தையும் அர்ப்பணித்தல்

மீட்புகுறித்து, விடுதலைகுறித்து வாக்குரைக்கப்பட்ட காலக்கட்டம் நெருங்கியிருந்தது. மக்கள் ஆயத்தமாக வேண்டியிருந்தது. நம்புவதோடு நிற்காமல், அந்த நம்பிக்கைகளின்படி செயல்பட வேண்டியிருந்தது. அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் அவர்களிடம் சொல்லியிருந்தார்; இப்போது அவர்கள் அதை விசுவாசத்தால் செய்யவேண்டியிருந்தது. யாக்கோபு எழுதியிருக்கிற ஒரு விஷயம் முற்றிலும் வேறொரு பின்னணியில் எழுதப்பட்டிருந்தாலும், அதன் நியதி இங்கு மிகச்சரியாகப் பொருந்துகிறது: 'வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமோ?' யாக் 2:17-20.

**இறுதி வாதையின்போது இஸ்ரவேலின் முதற்பேறனைத்தும் தேவகிருபையால் பாதுகாக்கப்பட்டன. இந்த நித்தியக்கட்டளை ஏன் கொடுக்கப்பட்டது, இன்று நமக்கு அது எவ்வாறு பொருந்தும்? யாத் 13:1-16.**

விசுவாசத்தால் தங்கள் வீட்டு நிலைக்கால்களில் இரத்தம் தெளித்து, இரத்தத்தின்கீழ் இருந்த இஸ்ரவேல் குடும்பத்தினர்களை தேவன் இரக்கமாகப் பாதுகாத்தார். இந்தப் புதிய வழிகாட்டல்களை மோசேமூலமாக தேவனே கொடுத்தார்: 'முதற்பேறான எல்லா ஆண்களையும் எனக்கு அர்ப்பணம் செய்யவேண்டும்.' யாத் 13:2 (சமகால மொழிபெயர்ப்பு). இந்தச் சட்டம் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பொருந்தும்.

இந்தக்கட்டளையின் பின்னணியில் இருக்கும் ஒரு நியதி என்னவென்றால், அவரே நம் சிருஷ்டிகராகவும் சகலத்திற்கும் எஜமானாகவும் இருப்பதால், அனைத்தும் அவருக்கே சொந்தம்: 'பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.' சங் 24:1. 'வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.' ஆகாய் 2:8. இஸ்ரவேலரின் முதற்பேறான ஆண்பிள்ளைகள் தேவன் அவர்களுக்கு ஆசீர்வாதமாகக் கொடுத்த முதற்கனிகள்; மேலும், அவருக்கே தங்களை முற்றிலும் அர்ப்பணிக்க வேண்டியதற்கும், தங்களிடமுள்ள அனைத்தும் அவரிடமிருந்தே வந்ததை அறிந்துகொள்வதற்கும் அவர்கள் அடையாளமாகவும் இருந்தார்கள்.

மேலும், இரட்சிப்பையும் மீட்பையும் குறித்த கருத்தும் இதில் சம்பந்தப்பட்டுள்ளது. முதற்பிறந்த ஆண்பிள்ளைகள் எல்லோரும் இரத்தத்தால் மூடப்பட்டிருந்ததால் பாதுகாக்கப்பட்டார்கள். இயேசுவின் இரத்தத்தின்கீழ் இருக்கிற அனைவரும் பாதுகாக்கப்படுகிறபடியே பாதுகாக்கப்பட்டார்கள். இயேசுவைப் பற்றி பவுல் இவ்வாறு எழுதுகிறார்: 'அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.' கொலோ 1:14.

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதைக் கொண்டாடுகிற இந்தப் பிரதிஷ்டை ஆராதனையை எவ்வாறு செய்யவேண்டும் என்கிற சட்டத்திட்டங்களும் கொடுக்கப்பட்டன. மிருகங்களைப் பலியிட்டு, தங்கள் குமாரர்களை அவர்கள் மீட்டுக்கொள்ள வேண்டும். யாத் 13:12,13,15.

---

**இதை அவர்கள் தங்கள் கைகளுக்கும் கண்களுக்கும் நடுவே ஞாபகக்குறியாக வைத்திருக்க வேண்டுமென யாத் 13:16 சொல்கிறது. நம்மிடம் எவ்வளவுதான் விசுவாசம் இருந்தாலும், அந்த விசுவாசத்தின் அடிப்படையில் செயல்படவேண்டும் என்கிற முக்கியமான ஆவிக்குரிய உண்மையை இது எவ்வாறு சுட்டிக்காட்டுகிறது?**

# சிவந்த சமுத்திரத்தின் வழியாக நடந்துபோதல்

**இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கிளம்பியபிறகு தேவன் அவர்களை எவ்வாறு வழி நடத்தினார்? அடுத்து என்ன நடந்தது? யாத் 13:17-14:12.**

மோசேக்கு தேவன் கொடுத்த வழிகாட்டல்களின்படியே இராணுவ ஒழுங்குடன் இஸ்ரவேலர்கள் எகிப்தைவிட்டுக் கிளம்பினார்கள். அங்கு வருகிற 'அணி அணியாய்', 'சேனை', 'பிரிவு', 'படை', 'ஆயுதம் அணிந்தவர்கள்' போன்றவை அதற்குச் சான்று. யாத் 6:26; 7:4; 12:17,41,51; 14:19,20; யாத் 13:18. அவர்கள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு இராணுவம்போல அணிவகுத்துச் சென்றார்கள். பின்னாட்களில் ஒரு சமயம், மோவாபின் மலைகளிலிருந்து பிலேயாம் பார்த்தபோது இஸ்ரவேல் 'தன் கோத்திரங்களின்படியே பாளயமிறங்கியிருக்கிறதைப் பார்த்தான்.' எண் 24:2.

'மோசே தன்னோடேகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு போனான்.'. யாத் 13:19. இது ஒரு முக்கியமான தகவல்; தேவனுடைய வாக்குறுதிகளில் யோசேப்புக்கு இருந்த விசுவாசம் நிறைவேறியதை வெளிப்படுத்துகிறது. யோசேப்பு எகிப்தில் பல சிலாக்கியங்களைப் பெற்று, ராஜாபோல வாழ்ந்தாலும்கூட, வாக்குத்தத்த தேசத்தை மறக்கவே இல்லை. தன் எலும்புகளை கானான் தேசத்திற்கு எடுத்துச்செல்லும்படி சொல்லியிருந்தார். ஆதி 50:24,25. எகிப்திலிருந்த இஸ்ரவேலரை தேவன் நிச்சயமாகவே சந்தித்து, தாம் ஆணையிட்டிருந்தபடியே கானான் தேசத்திற்குக் கொண்டுசெல்வாரென நம்பினார். எபி 11:22. இஸ்ரவேலர் கானான் தேசத்தைச் சென்றடைந்ததும், யோசேப்பின் எலும்புகளை 'சீகேமிலே அடக்கம்பண்ணினார்கள்.' யோசுவா 24:32.

தேவபிரசன்னம் அவரது மக்கள்மத்தியில் இருந்தது என்பதற்கு மேகஸ்தம்பமும் அக்கினிஸ்தம்பமும் சாட்சிகளாக இருந்தன. கர்த்தர் அங்கே வாசம் பண்ணி, மேகத்திலிருந்தும் பேசினார். யாத் 14:24; எண் 12:5,6.

அதேசமயம், தன் இருதயத்தின் உண்மையான நோக்கங்களை பார்வோன் வெளிப்படுத்துகிறான், அவன் மாறவில்லை; உண்மையாக மனந்திருந்தவுமில்லை. தேவன் தன்னை ஆசீர்வதிக்குமாறு அவன் கேட்டது ஒரு ஏமாற்று வேலை, அவனது இருதயத்தின் வஞ்சகம். தன் படையைத் திரட்டி, தப்பிச்சென்ற அடிமைகளை விரட்டிச்சென்றான். இந்த மனிதன் பாவத்தால் எவ்வளவு தூரம் குருடாகியிருந்தான் பாருங்கள்! பார்வோனின் படை வருவதைக் கண்ட மக்கள் சொன்ன வார்த்தைகளும், அவர்கள் வெளிப்படுத்தின உணர்வுகளும் அப்போது மட்டுமல்ல; பல சமயங்களில் வெளிப்பட்டவைதாம். 'எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச்செய்தது என்ன?' யாத் 14:11. அதாவது, அவர்களுடைய முதற்பேறான ஆண்பிள்ளைகள் தப்புவிக்கப்பட்டது உட்பட தேவ வல்லமையின் மகத்தான வெளிப்பாடுகளைக் கண்டபிறகும், விசுவாசக் குறைச்சலுடன் நடக்கிறார்கள்.

---

**சமீபத்தில் நீங்கள் எதிர்கொண்ட பயங்கரமான ஒரு சூழ்நிலைபற்றி யோசியுங்கள். அதைச் சந்தித்ததும் உங்களுடைய எதிர்வினை எப்படி இருந்தது? தேவன்மேல் விசுவாசம் காணப்பட்டதா? விசுவாசக் குறைச்சல் காணப்பட்டதா? அடுத்தமுறை அதேபோல ஒரு சூழ்நிலை வரும்போது (நிச்சயமாக வரும்) உங்களுக்கு உதவும்படி இதிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?**

# விசுவாசத்தோடு முன்னேறிச் செல்லுதல்

**இஸ்ரவேல் புத்திரரின் விசுவாசக் குறைச்சலுக்கு மத்தியிலும் தேவன் அவர்களுக்கு என்ன செய்தார்? யாத் 14:13-31.**

மோசே தேவனையும் அவரது வார்த்தையையும் முழுமனதோடு நம்பினதால், மக்களை ஊக்கப்படுத்தினார். கடினமான சூழ்நிலைகளில் நடந்துகொள்ள வேண்டிய விதம் குறித்து நான்கு முக்கியக் கருத்துகளை முன்வைக்கிறார்:

1. 'பயப்படாதிருங்கள்.' யாத் 14:13. தேவனை நம்புமாறு முதலில் வேண்டுகிறார். அதுதான் பயத்தை மேற்கொள்ள ஒரே வழி. இத்தகைய நம்பிக்கை பற்றி ஏசாயா சொல்லியிருக்கிறார்; அதாவது, விசுவாசிகள் தேவனுடைய கரத்தில் இருக்கிறார்கள், அவரை தங்கள் தேவனாகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும்போது அவர்களுக்காகச் செயல்படுவார்: 'நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.' ஏசா 41:10,13.
2. 'நின்றுகொண்டு (உறுதியாக நில்லுங்கள்).' யாத் 14:13. 'நில்லுங்கள்' என்றால் முறுமுறுப்பதை நிறுத்திவிட்டு, மகத்தான காரியங்களை எதிர்பாருங்கள் என்றுமட்டும் அர்த்தமல்ல, தேவனை நம்புவதும், அவர் செயல்படுவாரென நம்பி, மகத்தான தலையீட்டுக்காக பொறுமையாகக் காத்திருப்பதுமாகும்.
3. 'இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்.' யாத் 14:13. நம் விசுவாசம் வளருவதற்கு, தேவனுடைய தலைமைத்துவத்தையும் உதவியையும் உணருவதும், தாம் செய்வதாக அவர் வாக்குரைத்துள்ள உதவிக்காக நன்றியோடு இருப்பதும் முக்கியம். 'பாருங்கள்' என்றால் கண்களைத் திறந்து பார்ப்பது ஆகும்; ஏனென்றால் அவநம்பிக்கை என்பது குருடான நிலை. தேவன்மட்டுமே வெற்றியும் பாதுகாப்பும் இரட்சிப்பும் கொடுக்கமுடியும். தேவன் எப்போதும் நமக்காக இருக்கிறார்; நம்மீது அக்கறைகாட்டி, சரியான நேரத்தில் நமக்கு தேவையானதைக் கொடுக்கிறார்.
4. 'கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்.' யாத் 14:14. அவர் தனிப்பட்ட விதத்தில் தம் மக்களுக்காக யுத்தம்பண்ணுவாரென இது சுட்டிக்காட்டுகிறது. இந்த உண்மைக்கு சிலுவைதான் இறுதியான எடுத்துக்காட்டு, ஏனென்றால் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும்படி சாத்தானை கிறிஸ்து தோற்கடித்தார். யோவான் 5:24; எபி 2:14; வெளி 12:10,11. பிறகு, இஸ்ரவேலருக்காக தேவன் யுத்தமிட்டதை எகிப்தியர்தானே உணர்ந்தார்கள். யாத் 14:25.

மோசேயிடம் தேவன் 'புறப்பட்டுப் போங்கள்' என்று கட்டளை கொடுத்திருந்தார். தேவன் தம் செயல்திட்டத்தை படிப்படியாக வெளிப்படுத்துகிறார்: 1) தேவதூதனானவரும் மேகஸ்தம்பமும் இஸ்ரவேல் சேனைக்கு முன்பக்கத்திலிருந்து விலகி பின்பக்கத்திற்குச் செல்ல, எகிப்திய படைகளிடமிருந்து இஸ்ரவேலர் பாதுகாக்கப்படுகிறார்கள்; 2) மோசே விசுவாசத்தோடு தன் கையை சமுத்திரத்தின்மேல் நீட்டவேண்டியிருந்தது. 3) தேவன் பலத்த காற்றினால் தண்ணீரைப் பிளந்து, இரண்டாகப்பிரித்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; 4) அதனால் வெட்டாந்தரையில் நடப்பதுபோல இஸ்ரவேலர்கள் நடந்து, பாதுகாப்பாக மறுபக்கம் சென்றார்கள். எகிப்தியர்கள் யோசனையின்றி அவர்களைப் பின்தொடர்ந்தார்கள், ஏனென்றால் தேவன் தம் மக்களுக்காக அசாத்தியமான காரியங்களைச் செய்ததை அவர்களால் காணமுடியவில்லை; கண்டபோது, காலம்கடந்திருந்ததை யாத் 14:25இல் அவர்களது அறிக்கை வெளிப்படுத்துகிறது.

# மோசேயும் மிரியாமும் பாடிய பாடல்

எகிப்திய படை முழுவதும் வீழ்த்தப்பட்டது; பார்வோன் உட்பட ஒருவரும் தப்பவில்லை. சங் 136:15. இது எகிப்தியர்களுக்கு முழுத்தோல்வி. தேவமக்களுக்கு முழு வெற்றி. அதனால்தான் யூதர்கள் தங்கள் வரலாறு முழுவதிலும் இன்றுவரை இந்தச் சம்பவத்தை நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

**மோசேயினுடைய பாடலின் கருத்து என்ன? யாத் 15:1-21.**

தேவன் தம் மக்களை எதிர்த்தவர்களைத் தோற்கடித்த தீரமிக்க பராக்கிரமர் என்று இந்தப் பாடல் அவரைத் துதிக்கிறது. இந்தக் கருத்தை தன் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பொருத்தி மோசே பாடுகிறார்; அதாவது தேவன் தன் பெலன், பாடல், இரட்சிப்பு என்று சொல்லுகிறார். 'பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய' அவருக்கு ஒப்பானவர் எவரும் இல்லை. யாத் 15:11.

தேவன் எப்படிப்பட்டவர், அவர் என்ன செய்கிறார் என்று முழுவதும் தேவனைப்பற்றியே மோசே பாடுகிறார். தேவன் தம் மக்களுக்காகச் செய்த அபூர்வமான கிரியைக்காக அவரை உயர்த்தியும், துதித்தும், புகழ்ந்தும் பாடினார். தேவன் நம்மீது காட்டுகிற தயவின்நிமித்தம் இயல்பாக நம்மிடமிருந்து புறப்படுவதுதான் நன்றியுணர்வும் தொழுகையும். அவரது அன்பை உணர்ந்து போற்றுதல்தான் உற்சாகமான ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முன்நிபந்தனை. தேவனுடைய மாறாத அன்பை வலியுறுத்தி, மகிமைப்படுத்தி பாடினார்; ஏனென்றால் தாம் மீட்டுக்கொண்டவர்களை தேவன் வழிநடத்துவார். பரிசுத்த வாசஸ்தலத்திற்குள்ளாக அவர்களைக் கொண்டுசெல்வார். தேவன் தம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்தில் தம்முடைய வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பாரென மோசே முன்னுரைக்கிறார். யாத் 15:17. இவை அனைத்தும் சீயோனையும் எருசலேமின் தேவாலயத்தையும் சுட்டிக்காட்டுகின்றன.

வெளி 15:2-4இல், மீட்கப்பட்டவர்கள் மோசேயின் பாடலையும் ஆட்டுக்குட்டியின் பாடலையும் பாடுகிறார்கள். தேவனுடைய மகத்துவமான, மாட்சிமையான செயல்களுக்காக அவரைத் துதித்தும், அவருடைய நியாயத்திற்காகவும் மெய்யான நியாயத்தீர்ப்பிற்காகவும் அவரைத் துதித்தும், தேவனுடைய நீதியான செயல்களுக்காகவும் பரிசுத்தத்திற்காகவும் அவரைத் துதித்தும் பாடப்படுகிற இந்தப் பாடல் பரலோகத்தில் எவ்வாறு ஒலிக்குமென கற்பனைபண்ண முடிகிறதா?

அந்தப் பாடலின் கடைசி வரியைக் கவனியுங்கள். 'எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின.'. அதாவது, ஆயிரக்கணக்கான வருடங்களாக தண்டிக்கப்படாமல் இருந்த தீமைமேலும் ஒடுக்குதல்மேலும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் வெளியரங்கமாகும்போது, சகல தேசங்களிலிமிருந்து மீட்கப்பட்டவர்கள் அந்த நியாயத்தீர்ப்புகளுக்காக அவரைத் துதிப்பார்கள்.

---

**தேவன் நியாயமுள்ளவர் என்றால், மறுமை வாழ்வு என்று ஒன்று இருந்தாகவேண்டுமென இம்மானுவேல் கென்ட் சொன்னார். அந்த அறிக்கை ஏன் உண்மையானது? வெகுகாலமாக கிடைக்காமல் இருக்கிற நியாயம் ஒருநாள் கிடைக்குமென எவ்வாறு நாம் நம்பமுடிகிறது? அந்த நம்பிக்கையிலிருந்து எவ்வாறு ஆறுதலைப் பெறமுடிகிறது?**

# மேலும் படிக்க:

இஸ்ரவேலரின் விசுவாசம் சிறிதாக இருந்தாலும், தேவன் அவர்கள் பக்கம் நின்றார். தெரிந்துகொண்ட தம் மக்கள் நடக்கவேண்டிய விதத்தையும், யோசிக்கவேண்டிய விதத்தையும் அவர்களுக்குப் போதித்து வழிகாட்ட விரும்பினார். தேவன் அவர்களை பொறுமையோடு வழிநடத்தினார், அவர்களுக்கு ஒரு சில சவால்களே இருக்கக்கூடிய இடத்திற்கு வழிகாட்டினார். எலன் ஒய்ட் இவ்வாறு விளக்குகிறார்: 'அந்த இஸ்ரவேலர்கள் தேவனைப் பற்றி குறைந்த அறிவுள்ளவர்களாக, அவரில் சொற்ப விசுவாசமுள்ளவர்களாக இருந்தார்கள், அவர்கள் பயந்து, கலக்கமடைந்திருப்பார்கள். அவர்கள் ஆயுதம் தரிக்கவில்லை; போர் செய்து பழகவில்லை; நீண்டகால அடிமைத்தனத்தால் அவர்களது மனங்கள் சோர்ந்திருந்தன. மேலும் பெண்கள், சிறுபிள்ளைகள், கால்நடைகள், மிருகஜீவன்கள் என பெருங்கூட்டமாக இருந்தார்கள். அவர்களை சிவந்தசமுத்திரத்தின்வழியாக நடத்தியதில், தேவன் தம்மை மனதுருக்கத்தின் தேவனாகவும் நியாயத்தீர்ப்பின் தேவனாகவும் வெளிப்படுத்தினார்.


மோசேயின் பாடலைப்பற்றிப் பேசும்போது ஆண்ட்ரூஸ் வேதாகம விளக்கவுரை இவ்வாறு சொல்கிறது: 'வரலாற்றில் தேவன் நிச்சயமாகவே செய்த இந்த மீட்பின் செயலானது எதிர்காலம்குறித்து நாம் பயப்படுவதற்கு ஒன்றுமே இல்லையென உறுதிப்படுத்துகிறது. கடைசிப் பத்தியானது, கானானைப் பிடிக்கும்போது எதிர்காலத்தில் சந்திக்கவேண்டிய எதிரிகளைப்பற்றிப் பேசுகிறது. தேவனுடைய வல்லமையான புயமானது கல்லைப்போல அசையாமல் இருக்கும். வச 16. நம்மால் எதிர்கொள்ள முடியாத காரியங்களைச் சந்திக்கும்போது, திக்குமுக்காடி, எந்தத் திசையில் செல்வதென அறியாமல் இருக்கும்போது, மோசேயின் பாடலில் நாம் நிச்சயத்தைக் காணலாம், ஏனென்றால் அது தேவமக்களின் வரலாற்றில் நடந்த ஒரு மாபெரும் நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறது.'

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *எகிப்திலிருந்து நம்புவதற்கரிய வகையில் விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரம் என்கிற சவாலை எதிர்கொண்டார்கள். நாமும்கூட பல சமயங்களில் இதேபோன்ற சூழ்நிலையை எதிர்கொள்வது ஏன்? அதாவது, தேவன் நம்மீது காட்டிய அவரது தயவையும், அவரது வல்லமையையும்குறித்து ஏராளமான ஆதாரங்கள் இருந்தாலும், ஏன் எளிதில் விசுவாசக் குறைச்சலுக்கு ஆளாகிறோம்?*

2. *முதற்பேறான ஆண்பிள்ளைகளை இழக்குமளவிற்கு காரியங்கள் சம்பவித்த நிலையிலும், பார்வோன் எதற்காக பின்னும் இஸ்ரவேலரைப் பின்தொடர்ந்தான்? பாவத்தால் நாம் கடினப்பட்டுப் போவதற்கான ஆபத்து இருப்பதுபற்றி இது நமக்கு என்ன கற்றுக்கொடுக்க வேண்டும்?*

3. *நம் எல்லாருக்குமே மிகப்பயங்கரமான சோதனைகள் நேரிட்டுவிடுகின்றன. ஆனாலும் நமக்கோ நமக்குப் பிரியமானவர்களுக்கோ கெட்டது எதுவும் நடக்காத சில நல்ல நாட்களையும் நம்மில் பலர் கண்டிருப்போம்; இனியும் காணுவோம். நாம் 'எதிரியின் பிரதேசத்தில்' வாழ்வதால், இதை எவ்வாறு தேவகிருபையாகவும் பாதுகாப்பின் ஆதாரமாகவும் நாம் பார்க்கவேண்டும்? அதாவது, நாம் எப்படிப்பட்ட பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறோம் என்பது நமக்குத் தெரியாததால், அந்த நல்ல நாட்களில் தேவனைத் துதிப்பதற்கு ஏன் ஒருபோதும் மறக்கவே கூடாது?*



# ஜீவ அப்பமும் ஜீவத் தண்ணீரும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 15:22–16:36; ஆதி 3:1–6; யாத் 17:1–7; 1கொரி 10:4; யாத் 18:1–27; 1கொரி 10:11.

**மனன வசனம்:** அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்? பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினபடியால், அவர் உங்களுக்கு ஆறாம் நாளில் இரண்டுநாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார்; ஏழாம்நாளில் உங்களில் ஒருவனும் தன்தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன் தன் ஸ்தானத்திலே இருக்கவேண்டும் என்றார். அப்படியே ஜனங்கள் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்கள். யாத் 16:28–30.

எகிப்தைவிட்டுக்கிளம்பியபிறகு, பயணத்திட்டம் எதுவுமின்றி, வாக்குத் தத்த தேசத்தை நோக்கி இஸ்ரவேலர் சென்றார்கள். கடும் சிக்கலான நெடுந்தூரப் பாதையில் செல்லவேண்டியிருந்தது, பல்வேறு பாடங்களையும் புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. தேவன் அவர்கள்மீது அக்கறைகாட்டி, வழி நடத்த ஆசைப்பட்டார்; ஆம், அவர்கள் வளருவதற்கு ஆசைப்பட்டார், ஆனால் அவர்கள் ஒழுக்கம், சுயக்கட்டுப்பாடு, தியாகம், சுயநலமின்மை, தேவனில் நம்பிக்கை, குறிப்பாக கீழ்ப்படிதல் போன்றவற்றைக் கற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. மோசே அவர்கள் கண்முன் இருந்த தலைவர். மக்கள் அவரை தலைவராக ஏற்றுக்கொண்டு, பின்பற்றுவதில்தான் அவர்களது வெற்றி அமைந்திருந்தது. அவர்கள் ஒன்றாக இருப்பதும், ஒரு சமுதாயமாக ஒத்துழைப்பதும், ஒருவருக்கு ஒருவர் உதவுவதும் அவசியமாக இருந்தது. பல தடைகளையும் சவால்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. அந்தச் சவால்களைச் சந்திக்கிற விதம், குறிப்பாக அந்தச் சவால்கள் அதிகமாகும்போது மோசேயிடம் நடந்துகொள்கிற விதம் ஆகியவற்றைச் சார்ந்தே ஆவிக்குரிய வளர்ச்சி இருந்தது.

'ஆயிரம் மைல் பயணம் ஒரு அடியில்தான் துவங்குகிறது' என்பது ஒரு சீனப்பழமொழி. இது அவர்கள் சூழ்நிலைக்கு பொருந்துகிறது. ஒவ்வோர் அடி எடுத்துவைக்கும்போதும் தேவ வழிகாட்டல்களை நம்பவேண்டியிருந்தது. ஆனால் அந்தப் பாடங்களை அவர்கள் எளிதாகக் கற்றுக்கொள்ளவில்லை. யார்தான் கற்றுக்கொள்கிறார்?

*2025 ஆகஸ்ட் 16 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கசப்பாயிருந்த தண்ணீர்

வேதாகமச் சம்பவங்களில், வெவ்வேறு கதாபாத்திரங்கள், நல்லவர்களோ கெட்டவர்களோ வெவ்வேறு பங்காற்றியிருக்கிறார்கள். சம்பவ விவரங்கள், இடம், நேரம், வில்லன்கள் ஆகியவற்றைக் கவனித்து வாசிக்கவேண்டும். ஆனாலும், ஒரு சம்பவத்தை வாசிக்கும்போது, அதிலுள்ள தீர்வும், பாடமும்தான் முக்கியம். இந்தச் சம்பவங்களிலும்கூட அவைதாம் முக்கியம்.

அந்தச் சம்பவங்கள் காட்டுகிறபடி, தேவனே பிரச்சினைகளைத் தீர்க்கிறவர்; சமாதானம்பண்ணுகிறவர்; ஆனாலும் மக்கள் தங்கள் அவநம்பிக்கையால் அவரது வேலையைச் சிக்கலாக்கினார்கள். எப்போதும் முறுமுறுத்துக் கொண்டும், கீழ்ப்படியாமலும் இருந்ததால், அந்த எபிரெயர்கள் கடும் சிக்கல்களை, ஏன்பெருந்துயரங்களைஅனுபவித்தார்கள். மனந்திரும்பாமலும்நம்பிக்கையில்லாமலும் இருந்ததால், அநேக இன்னல்களை வருவித்துக் கொண்டார்கள்.

**சிவந்த சமுத்திரத்தைக் கடந்துசென்றபிறகு, என்ன பின்னணியில் முதல் அற்புதம் செய்யப்பட்டது? யாத் 15:22-27.**

தண்ணீர் பற்றாக்குறைதான் இஸ்ரவேலரின் விசுவாசத்திற்கு வந்த முதல் சோதனை. கடும் சூடான, கொடிய, வறண்ட வனாந்தரச் சூழலில் இருந்ததால், அவர்கள் சோதனைக்கு ஆளானது ஆச்சரியமில்லை. மூன்று நாள் பயணம்செய்த பிறகு, தண்ணீரைப் பார்த்தார்கள், ஆனால் அது குடிப்பதற்கு ஏதுவாக இல்லை. மாரா என்றால் 'கசப்பு' என்று அர்த்தம்; அந்தத் தண்ணீர் கசப்பாக இருந்ததால், தேவன்மீதிருந்த விசுவாசம் தடுமாறியது. ஆனாலும் தேவன் மனதுருகினார், முதல் அற்புதம் ஒரு மரத்தை வைத்துச் செய்யப்பட்டது. அந்தத் தண்ணீர் மதுரமாகவும், குடிப்பதற்கு ஏதுவாகவும் மாறியதற்கு அந்த மரமல்ல, தேவன்தாம் காரணம். மக்கள் அங்கே சில முக்கிப்பாடங்களைக் கற்கவேண்டியிருந்தது: அதாவது, 1) தேவனுடைய நேரத்திற்காக பொறுமையோடு காத்திருப்பது 2) மனிதர்களுடைய ஒத்துழைப்பினால் தேவன் செயல்படுவதைப் புரிந்துகொள்வது.

ஆனால், தேவன் தங்களுக்குச் செய்திருந்த மகத்தான அற்புதங்களின் மதிப்பை உணர்ந்து, அவற்றைப் பாராட்டத் தவறியதால், இஸ்ரவேலர் அவற்றை சீக்கிரமே மறந்துவிட்டார்கள் - அந்த அற்புதங்களைக் கண்டு உணர்ச்சிப்பெருக்குடன் பின்வருமாறு பாடியது உண்மைதான்: 'கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?' யாத் 15:11.

அவர்கள் முறுமுறுத்தாலும்கூட, எகிப்தியர்களை வாதித்த 'வியாதிகளில் ஒன்றையும்' அவர்களுக்கு வரப்பண்ணுவதில்லை என்று தேவன் வாக்குரைத்தார். யாத் 15:26. அவர்களைப் பாதுகாக்க விரும்பினார். அவருக்கு உண்மையாக இருப்பதால்மட்டுமே அந்த வாக்குறுதியை அனுபவிக்கவிருந்தார்கள்.

---

**உங்களுக்கு நீங்களே வருவித்துக்கொண்ட போராட்டங்கள், சோதனைகள் என்ன? நீங்கள் தேவனோடு ஒத்துழைத்தால் அவர் உங்களுக்காகச் செயல்படுவார் என்பதை அறிவதின்நிமித்தம் என்ன ஆறுதலைப் பெறலாம்?**

# காடைகளும் மன்னாவும்

இஸ்ரவேலரின் யாத்திரை அனுபவத்தில் அவர்கள் மீண்டும்மீண்டும் கலகத்தில் ஈடுபட்ட ஒரு சுழற்சியைக் காணலாம். கடந்தகாலத்தில் தேவன் தங்களைப் பாதுகாத்ததையும், தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுவழங்கியதையும் மறந்துபோனார்கள். தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட அற்புதமான எதிர்காலத்தைக் காணவிடாமல் குருடாக்க, தற்போதைய பிரச்சினைகளை அனுமதித்தார்கள். இன்றும்கூட இது தேவமக்கள்மத்தியில் காணப்படுகிற ஒரு பொதுவான பிரச்சினையாக இருக்கிறது.

**இஸ்ரவேலருடைய முறுமுறுப்பிற்கு காரணம் என்ன? தொடர்ந்து நடந்தது என்ன? யாத் 16:1-36.**

---

வேதாகமம் சொல்கிற சோதனைகள் பெரும்பாலும் உணவு சம்பந்தமாக ஏற்பட்டவைதாம். ஏதேன் தோட்டத்தில், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் விலக்கப்பட்ட கனியைப் புசித்ததால் விழுகை உண்டானது. ஆதி 2:16, 17; 3:1-6. இயேசுவின் வனாந்தர சோதனையில், சாத்தான் வைத்த முதல் சோதனை உணவு சம்பந்தப்பட்டது. மத் 4:3. ஏசா தன் ஒழுக்கமற்ற பசி வேட்கையால் தன் சேஷ்டபுத்திரபாகத்தை இழந்தான். ஆதி 25:29-34. இஸ்ரவேலரும் பெரும்பாலும் புசித்தல், குடித்தல் சம்பந்தமாகத்தான் சோதனைக்கு ஆளானார்கள். அதனால்தான் பின்வரும் சந்ததிகளுக்கு மோசே இவ்வாறு நினைவூட்டினார்:

'மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.' உபா 8:3.

மன்னா என்பது பரலோக அப்பம்; இஸ்ரவேலரின் 40-வருட வனாந்தரப் பயணத்தில் அவர்களுக்கு அதைக் கொடுத்தார். தாமே சிருஷ்டிகர், சகலத்தையும் தாங்கி நடத்துகிறவர் என்பதை அந்த ஈவின்மூலம் அவர்களுக்குக் கற்பித்தார். மேலும், ஏழாம்நாள் ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டிய விதத்தை மன்னா என்கிற இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக ஏற்பாட்டின்மூலம் உணர்த்தினார்.

ஒவ்வொரு வாரமும் நான்கு அற்புதங்கள் நடந்தன: 1) ஐந்து நாட்களுக்கு, அன்றன்றைக்குரிய மன்னாவை தேவன் கொடுத்தார்; 2) வெள்ளிக்கிழமைகளில், இரண்டு மடங்கு மன்னா கொடுத்தார்; 3) வெள்ளிக்கிழமையிலிருந்து சனிக்கிழமை வரை மன்னா கெட்டுபோகவில்லை; 4) ஓய்வுநாளில் மன்னா பொழியவில்லை. மக்கள் ஓய்வுநாளை நினைவுகூரவும், அந்த நாளில் தேவ தயவை எண்ணிக் கொண்டாடவும் ஓய்வுநாள்தோறும் இந்த அற்புதத்தைச் செய்துவந்தார். 'பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினார்' என்று சொன்னார்.

---

**சாப்பிடுவது மனிதர்களுக்குப் பிடிக்கும். சாப்பிடுவது பிடிக்கிற வகையில்தான் மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். நிலத்திலிருந்து பரிபூரணமாகக் கிடைக்கிற உணவுப்பொருட்கள் (பொதுவாக நாம் சாப்பிடுபவை), நாம் சாப்பிட்டு மகிழவும், சாப்பிடுவதை இஷ்டத்துடன் சாப்பிடவும் தேவன் விரும்புவதைக் காட்டுகின்றன. ஆனாலும், உணவு, அதன் மேலுள்ள விருப்பம் என்கிற ஈவுகளை எவ்வாறு நாம் தவறாகப் பயன்படுத்த வாய்ப்புள்ளது?**

# கன்மலையிலிருந்து தண்ணீர்

வனாந்தரத்தில் தண்ணீர் அதிகமாகத் தேவைப்படும். மக்கள் முறுமுறுத்தார்கள்; தேவனை நம்பவில்லை. தங்களுக்கு தண்ணீர் கொடுக்க அவருக்கு விருப்பமிருக்கிறதா, திறமையிருக்கிறதா என்றுகூட சோதித்தார்கள், இருந்தபோதிலும் அவர்களது பிரச்சினைகளை தேவன் தீர்த்துவைத்தார். அவநம்பிக்கையால், எகிப்துபற்றி யோசிக்க ஆரம்பித்தார்கள்.

**யாத் 17:1-7இன் அனுபவத்திலிருந்து மக்கள் என்ன பாடத்தைக் கற்றிருக்க வேண்டும்?**

மோசே அந்த இடத்திற்கு மாசா என்றும், மேரிபா என்றும் பேரிட்டார்; அதற்கு முறையே 'சோதித்தல்', 'வாக்குவாதம்பண்ணுதல்' என்று அர்த்தம். இஸ்ரவேலருடைய அவநம்பிக்கையின் மத்தியிலும் தேவன் அவர்களுக்கு தண்ணீர் கொடுத்தார். தேவனைச் சோதிக்கக்கூடாது, அவருடன் வாக்குவாதம் பண்ணக்கூடாது என்று இந்த இரு பெயர்களும் இஸ்ரவேலருக்கு நினைவூட்டி யிருக்கும். எபி 3:7,8,15. தங்கள் மத்தியில் தேவபிரசன்னமும் தேவ வல்லமை யும் அவரது அதிகாரமும் இருந்ததற்கு கண்கூடாக பல ஆதாரங்களைக் கண்டிருந் தும், தங்கள்மத்தியில் தேவபிரசன்னம் இருக்கிறதாவெனக் கேள்வி எழுப்பினார்கள்.

மோசே அந்தக் கன்மலையை அடித்தார், ஆனால் மேகஸ்தம்பத்தில் மறைவாயிருந்த தேவகுமாரன்தாம் மோசேயின் அருகே நின்று, ஜீவனைக் கொடுக்கிற தண்ணீர் புறப்பட்டு வரும்படி செய்தார். மோசேயும் மூப்பர்களும் மட்டு மல்ல, சற்றுதூரத்தில் நின்றிருந்த சபையார் அனைவருமே கர்த்தருடைய மகிமையைக் கண்டார்கள்; ஆனால் அந்த மேகம் விலக்கப்பட்டிருந்தால், அந்த மேகத்தில் வாசம்பண்ணினவரின் முழுப்பிரகாசத்தால் அவர்கள் கொல்லப் பட்டிருப்பார்கள். வாழ்க்கையின் ஓர் அடையாளம் தண்ணீர், ஏனென்றால் தண்ணீரின்றி உயிர் வாழ முடியாது. நம் உடலிலுள்ள ஒவ்வோர் செல்லுக்கும் தண்ணீர் தேவை. நம் உடலில் 60 சதவீதம் தண்ணீராலானது. நம் எலும்புகள்கூட பாதியளவு தண்ணீரா லானதுதான். எனவே, வனாந்தரத்தில் இஸ்ரவேலருக்கு தண்ணீரைக் கொடுத் தது, தேவன் அவர்களது தேவைகளைச் சந்தித்ததற்கும், அவரை நம்பலாம் என்பதற்கும் அடையாளமாக இருந்தது.

வனாந்தரத்தில் இஸ்ரவேலருக்கு ஏற்பட்ட அனுபவம் தனித்துவமானது என்று பல நூற்றாண்டுகள் கழித்து 1கொரி 10:4இல் பவுல் எழுதினார். தேவன் தாமே அவர்களை வழிநடத்தினார்; அதுமட்டுமன்றி, அவர்களுக்கு தண்ணீர் கொடுத்தார். சங் 78:15,16. மேலும், அவர்களது பிற ஆவிக்குரிய, சரீர தேவைகளையும் சந்தித்தார். 'அந்தக் கன்மலை கிறிஸ்துவே' என்று பவுல் சொன்னார். அவர்களுக்கு கிறிஸ்துவே ஜீவனின் ஆதாரமாகவும், நித்திய ஜீவனைக் கொடுக்கிறவராகவும் இருந்தார். கற்பாறை திடமானதாக இருப்பதுபோல, தேவனும் தம் மக்களை திடமாக வழிநடத்தினார். அவர் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தவறுவதே இல்லை என்பதால், எவரும் அவரை நம்பலாம்.

---

**தற்சமயம் என்னென்ன விஷயங்களில் நீங்கள் தேவனை நம்பவேண்டியுள்ளது? அவரது சித்தத்திற்கு உங்களை அர்ப்பணிக்கவும், தமக்கேற்ற நேரத்தில் அவர் செயல்படும்படி அவருக்காகக் காத்திருக்கவும் என்ன செய்யலாம்? அவ்வாறு செய்வது எப்போதுமே ஏன் எளிதாக இல்லை?**

# எத்திரோ

மோசேயை அவரது மாமனாகிய எத்திரோ சந்தித்தார்; அவர் ரெகுவேல் என்றும் அழைக்கப்பட்டார். யாத் 2:18. எத்திரோ தன்னுடன் மோசேயின் மனைவியாகிய சிப்போராளையும், அவர்களது இரண்டு குமாரர்களான கெர்சோமையும் எலியேசரையும் அழைத்து வந்திருந்தார். அவர்கள் வந்திருப்பதைக் கேள்விப்பட்ட மோசே, அவர்களை வரவேற்கும்படி சென்றார்.

**இங்கே அத்தேசத்தின் வரலாற்றில் என்ன முக்கிய தீர்மானங்கள் செய்யப்பட்டன? யாத் 18:1-27.**

இஸ்ரவேலை தேவன் அற்புதமாக விடுவித்த சம்பவங்களைக் கேள்விப்பட்டு, எத்திரோ வந்தார். 'கர்த்தர் இஸ்ரவேலினிமித்தம் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்த எல்லாவற்றையும், வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும், கர்த்தர் தங்களை விடுவித்து இரட்சித்ததையும்' எத்திரோவுக்கு மோசே விவரித்துச் சொன்னார். யாத் 18:8.

தேவன் தம் மக்கள்மீது காண்பித்த இரக்கத்தையும், அவர்களுக்காக அசாதாரணமான விதத்தில் தலையிட்டதையும் எத்திரோ புகழ்ந்தார்:

'உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து, எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் எல்லாத் தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்; அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார்'. யாத் 18:10,11.

உண்மையான தேவன் யார் என்பதற்கும், அவரால் தம் மக்களுக்கு என்ன செய்யமுடியும் என்பதற்கும், தம் மக்கள்மத்தியில் தேவன் செய்த கிரியைகள் ஒரு சாட்சியாக இருக்கவேண்டும் என்பதே தேவநோக்கம்.

எத்திரோ மெய்யான தேவனைப்பற்றி அறிந்துகொண்டார், அதேசமயம் அவரும் தேவ மக்களுக்கு சில உதவிகள் செய்தார், அதாவது, ஞானமான, பயன்மிக்க ஆலோசனையை வழங்கினார். அர்ப்பணிப்பும் உண்மையுமுள்ள நியாயாதிபதிகளும், ஒழுக்கமிக்க மனிதர்களும் தேவையென்றார். பின்வரும் தகுதிகளை எத்திரோ பட்டியலிடுகிறார்: 1) தேவனுக்குப் பயந்தவர்கள்; 2) நம்பிக்கைக்கு பாத்திரவான்கள்; 3) அநியாயமான ஆதாயத்தை வெறுப்பவர்கள். 4) நற்குணசாலிகள் 5) திறமையானவர்கள். இப்படிப்பட்டவர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தவேண்டும். இவ்வாறு செய்தால், மோசேயின் நிர்வாகப் பணிச்சுமை குறையும், முக்கியப் பிரச்சினைகளில் அவர் கவனம் செலுத்தமுடியும். மக்களுக்கு சிறப்பான சேவைசெய்யமுடியும். எத்திரோவின் ஞானமான ஆலோசனையை மோசே ஏற்றுக்கொண்டார். யாத் 18:24. வெவ்வேறு நிர்வாகப் பணிகளுக்கு தலைவர்களை நியமித்தார். உபா 1:9-18.

---

**அந்த முதியவரின் பேச்சை உதாசினப்படுத்தி, 'உம்முடைய வேலையைப் பாரும்' என்று மோசே சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. ஒரு எபிரெயனாக இருந்தாலும் எத்திரோவுக்குச் செவிகொடுக்க மோசே ஆயத்தமாக இருந்ததில் என்ன முக்கியப் பாடங்கள் உள்ளன?**

# ஜீவ அப்பமும் ஜீவத் தண்ணீரும்

**இந்தச் சம்பவங்கள் எழுதப்பட்டிருப்பதற்கு பவுல் சொல்கிற காரணம் என்ன? 1கொரி 10:11.**

---

இஸ்ரவேலருக்குச்சம்பவித்த அனைத்தும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு முன்னுதாரணங்களாகவும் எச்சரிப்புகளாகவும் இருப்பதாகவும், அதே போன்ற சிக்கல்களிலிருந்து தப்பிக்க உதவுவதாகவும் பவுல் விளக்குகிறார். அந்த முன்னுதாரணங்களிலிருந்து கற்றுக்கொள்ளலாம் என்கிறார். இவை 'முடிவு காலத்தில்' வாழ்கிற நமக்கு ஏற்ற அறிவுரைகளாக உள்ளன. விசுவாசிகள் 'பலமும் அன்பும் தெளிந்த புத்தியும்' பெற்றுப் பெலப்படுவதற்கு தேவன் தம் மக்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார். 2தீமோ 1:7. அப்போது அவர்கள் சரியான தீர்மானங்களைச் செய்து, அவரது போதனையின்படி நடக்கலாம். இயேசுவே புதிய ஜீவனின் ஆதாரமாக இருக்கிறார். யோவான் 14:6. அவர் மட்டுமே நாம் நம் 'சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக' ஒப்புக்கொடுக்கவும், நாம் 'இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, (நம்) மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகவும்' உதவ முடியும். ரோமர் 12:1,2.

இயேசு தம் ஊழியக்காலத்தின் பிற்பகுதியில், பழைய ஏற்பாட்டு அனுபவங்களை, குறிப்பாக மன்னாவையும் தண்ணீர் அனுபவங்களையும் உருவகங்களாகப் பயன்படுத்தி, இஸ்ரவேலரை வனாந்தரத்தின் வழியாக வழிநடத்திச் சென்றவரான தம்மைப்பற்றின சத்தியங்களைப் போதித்திருக்கிறார்.

**யோவான் 4:7-15; 6:31-51 இல், கிறிஸ்தவர்களாகிய நமக்கு வெளிப்படுத்தியுள்ள சத்தியங்கள் என்ன?**

---

தான் வேறு எங்கும் பெற்றுக்கொள்ள முடியாத ஒன்றை கிறிஸ்து கொடுப்பதை அந்தச் சமாரியப்பெண் கண்டுகொண்டாள். உள்ளான சமாதானம், சந்தோஷம், மகிழ்ச்சி ஆகியவற்றின்மீதான தாகத்தை தேவனே கொடுக்கிறார், அதனால் அவர்மட்டுமே அதில் நம்மைத் திருப்தியாக்கமுடியும். சங் 42:1,2.

பிறகு, மன்னாபற்றிப் பேசினபோது, மோசே அல்ல, தேவனே மன்னாவை மக்களுக்குக் கொடுத்ததாக தேவன் சொன்னார். 'ஜீவ அப்பம் நானே' என்று இயேசு சொன்னார். யோவான் 6:35. தாமே ஜீவ அப்பம் என்று இரண்டு முறை இயேசு சொன்னார். யோவான் 6:35,41,48.

வனாந்தரத்தில் பொழிந்த மன்னா 'வானத்திலிருந்து அருளிய அப்பமாக' இருந்ததுபோல (யோவான் 6:31,32), கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீர் அவர்களது தாகத்தைத் தீர்ப்பதற்கான கிறிஸ்துவின் ஈவாக இருந்தது. தண்ணீருக்கும் அப்பத்திற்கும் இருந்த இந்த வெளிப்புற அர்த்தங்கள்தவிர, அவற்றுக்கு ஆவிக்குரிய அர்த்தமும் இருந்தது. இயேசுவே 'ஜீவ அப்பம்'. யோவான் 6:35, 48. அவரே 'ஜீவத்தண்ணீர்'. யோவான் 4:10,11,14; 7:37,38. அவருக்குள்மட்டுமே நம் ஆவிக்குரிய தாகத்தையும் பசியையும் தீர்க்கமுடியும்.

# மேலும் படிக்க:

கன்மலையிலிருந்து தண்ணீர் கிடைத்த சம்பவத்திற்குப்பிறகு அத்தேசத்தார் ஒரு புதிய சவாலை எதிர்கொண்டார்கள். யாத் **17:8–16.** கொடிய, யுத்தஆயுதந்தரித்த அமலேக்கியர்கள் அவர்களைத் தாக்கினார்கள். 'அமலேக்கியர்கள் தேவனுடைய குணத்தையோ அவரது சர்வவல்லமையையோ அறியாதவர்கள் இல்லை, ஆனால் அவருக்குப் பயப்படுவதற்குப் பதிலாக, அவரது வல்லமைக்கு எதிர்த்துநிற்கத் துணிந்தார்கள். எகிப்தியர்களுக்குமுன்பாக மோசே செய்த அற்புதங்களை அமலேக்கியர்கள் பரியாசப்பொருளாக்கினார்கள். சுற்றிலுமிருந்த தேசத்தாரிடம் காணப்பட்ட பயத்தை ஏளனம்செய்தார்கள். எபிரெயர்களில் ஒருவரும் தப்பிவிடாதபடிக்கு அவர்களை அழிப்பதாக தங்கள் கடவுள்களுக்கு முன்பாக சபதம்செய்தார்கள், மேலும் தங்களைத் தடுத்துநிறுத்த இஸ்ரவேலின் தேவன் வல்லமையற்றவர் என்று பெருமைபாராட்டினார்கள். இஸ்ரவேலர்கள் அவர்களுக்கு ஊறுவிளைவிக்கவில்லை; அச்சுறுத்தவும் இல்லை. கோபமுகாந்தரமின்றி தாக்கவந்தார்கள். தேவனுக்கு எதிராக தங்கள் வெறுப்பையும் துணிகரத்தையும் வெளிப்படுத்தவே அவரது மக்களை அழிக்க முயன்றார்கள். அமலேக்கியர்கள் நீண்டகாலமாகவே கொடிய பாவிகளாக இருந்தார்கள். தேவன் பழிவாங்குமளவிற்கு அவர்களது பாவங்கள் தேவசந்ததியை எட்டின, ஆனாலும் அவரது இரக்கம் அவர்களை மனந்திரும்பும்படி அழைத்துக்கொண்டே இருந்தது; அந்த நிலையில், களைத்தும் பாதுகாப்புமின்றியும் இருந்த இஸ்ரவேல் படையினர்மீது அமலேக்கியர்கள் தாக்குதலைத் தொடுத்தபோது, அத்தேசத்தின் அழிவு முத்திரிக்கப்பட்டது.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *தேவன் தம்முடைய மக்களுக்காகச் செய்தவற்றிலிருந்து எத்திரோ எவ்வாறு மெய்யான தேவனைப்பற்றி அறிந்துகொண்டாரென தியானியுங்கள். யாத் 18:8-10. அந்த நியதி எவ்வாறு இன்றைக்கும் பொருந்தும்? உங்களிடமும் வகுப்பினரிடமும் நீங்கள் கேட்கவேண்டிய கேள்வி: நம் திருச்சபை உலகத்திற்கு எப்படிப்பட்ட சாட்சியை முன்வைக்கிறது? தேவனுடைய குணம்பற்றி உலகத்தாருக்கு நாம் என்ன சொல்லலாம்?*

2. *1கொரி 10:4ஐ மீண்டும் வாசியுங்கள். 'பழைய ஏற்பாட்டின் தேவன் பழிவாங்குபவர்; வெறுப்பவர்; மன்னிக்காதவர், ஆனால் இயேசு அப்படியல்ல' என்று போதிக்கிற பண்டைய பாரம்பரியக் கருத்தையும், ஏன் இன்று நிலவுகிற நம்பிக்கையையும்பற்றி இது கற்றுக்கொடுப்பது என்ன? அந்த நம்பிக்கை தவறானது என்பதை இந்த வசனம் எவ்வாறு காட்டுகிறது?*

2. *மெய்யான தேவனைப்பற்றி அறிவதற்கு அமலேக்கியர்களுக்குக் கிடைத்திருந்த வாய்ப்புபற்றி எலன் ஒய்ட் எழுதியிருப்பதை மீண்டும் மேலே வாசியுங்கள். அவர்களது மனநிலையை எத்திரோவின் மனநிலையுடன் ஒப்பிடுங்கள். அவர்களின்மீது மட்டுமல்ல, இஸ்ரவேலரை எதிர்த்த பண்டைய உலகத்தின் பல கோத்திரங்களின்மீது தேவன் நியாயத்தீர்ப்பை வழங்கியதிலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள முடிகிறது?*



# சீனாயில் உடன்படிக்கை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 19:1–20:17; வெளி 21:3; உபா 5:6–21; யாக் 1:23–25; ரோமர் 3:20–24; 10:4.

**மனன வசனம்:** நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள். யாத் 19:4–6.

இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்தபிறகு தேவன் அவர்களை எங்கு வழிநடத்திச் சென்றார்? வாக்குத்தத்த தேசத்திற்கு. வேறு எங்கு? வாக்குத்தத்த தேசம் என்பது புவியியல் ரீதியாக சரிதான், இறையியல்ரீதியாக தவறு. தேவன் தாமே பதிலளிக்கிறார்: 'நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள்.' யாத் 19:4. எனவே இந்தக் கேள்விக்கு வேதாகம-இறையியல்ரீதியான பதில், தேவனது இறுதி நோக்கத்தை வெளிப்படுத்துகிறது; அதாவது அவர்களை தம்மிடத்திற்குக் கொண்டு வருவதே நோக்கம்.

மனிதர்கள் தேவனைவிட்டு விலகிச்செல்லும்போது, தேவன் அவர்களைத் தேடுகிறார், தம்மிடத்திற்கு மீண்டும் திரும்பிவர அழைக்கிறார். ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு எதிராகப் பாவம்செய்து, அவரிடமிருந்து மறைந்துகொண்டார்கள். அப்போது தேவன்தாம் அவர்களை முதலாவதாகத் தேடிவந்து, 'நீ எங்கே இருக்கிறாய்?' என்று கேட்டார். ஆதி 3:9. எப்போதும் அவர்தாம் முதல் அடி எடுத்து வைக்கிறார். 'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்'. மத் 11:28,29. தேவன் நம் அனைவரையும் அழைக்கிறார்; நம் பதிலை பொறுத்து தான் நம் நித்திய முடிவு இருக்கிறது.

*2025 ஆகஸ்ட் 23 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# சீனாய் மலையில்

**சீனாய் மலை அடிவாரத்தில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு வாக்குரைத்தது என்ன? யாத் 19:1-8.**

இஸ்ரவேலரை தேவன் சீனாய் மலைக்கு வழிநடத்தினார். அங்கு அவர்களுக்கு பத்துக்கட்டளைகளைக் கொடுக்கவிருந்தார். சீனாய் தீபகற்பத்திலுள்ள ஜெபெல் முசா (உயரம்: 7,497 அடி, அல்லது 2,285 மீட்டர்) என்கிற இடத்தில்தான் மோசே பலமுறை தேவனைச் சந்தித்த அனுபவம் நிகழ்ந்திருக்கவேண்டும். யாத் 3:1; 19:2; 24:18. பல வருடங்கள் கழித்து, அங்குதான் எலியா தேவனைச் சந்தித்தார். 1இராஜா 19:8. அதே மலையில்தான், இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவர மோசேயை அழைத்தார். யாத் 3:1,10. அந்தச் சமயத்தில், விடுதலையான இஸ்ரவேலருடன் சேர்ந்து மோசேயும் அதே இடத்தில் தன்னைத் தொழுவார்களென்றும், ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் தேவன் வழிநடத்துவதற்கு அதுவே அடையாளம் என்றும் தேவன் மோசேயிடம் சொல்லியிருந்தார். யாத் 3:12.

இஸ்ரவேலர் இரண்டு மாதங்கள் பயணம் செய்து, சீனாயை வந்தடைந்தார்கள். யாத் 19:1. அங்கே கிட்டத்தட்ட ஒருவருடம் இருந்தார்கள். யாத் 19:1ஐ எண் 10:11,12 உடன் ஒப்பிடவும். அந்த வருடம்முழுவதும், பல சட்டங்கள் கொடுக்கப்பட்டன; யாத் 3:1; 19:2; யாத் 24:18. இஸ்ரவேலர் சீனாய் மலையருகே தங்கியிருந்த அனுபவம்தான் மோசேயின் முதல் ஐந்து புத்தகங்களின் மையப் பகுதியாக இருக் கிறது. அஞ்ஞான மார்க்கத்திலும் விக்கிரக வழிபாட்டிலும் முற்றிலும் மூழ்கிப் போகாத தேசமாக இஸ்ரவேலர் இருப்பதற்காக அங்கேதான் தேவன் அடித்தளம் போட்டார்.

தேவன் முதலடி எடுத்துவைத்து, தமக்கும் இஸ்ரவேலருக்கும் இடையே உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். அவர்கள் தமக்குக் கீழ்ப்படிந்து தம்மோடுள்ள உறவைப் பேணினால், அவர்களை தமது உரிமைசொத்தாகவும், ஆசாரிய ராஜ்யமாகவும், பரிசுத்த ஜனமாகவும் மாற்றுவதாக வாக்குரைக்கிறார்.

'பரிசுத்த ஜனம்' என்றால், 'தேவனுக்கு தங்களை அர்ப்பணித்திருக்கிற ஜனம், மற்றவர்களுக்கு குறிப்பாக தங்களைச் சுற்றிலுமுள்ள தேசத்தாருக்கு அவரது குணத்தை வெளிப்படுத்துகிற ஜனம்8 என்று அர்த்தம். அவர்கள் ஆசாரிய ராஜ்யம்; அதாவது, மற்ற மக்களும் தேவனை நாட உதவவேண்டும், அவரது வழிகளையும் பிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். அவர்கள் அவரது உரிமைசொத்து; ஏனென்றால், தம் குணத்தைப்பற்றிய அறிவை உலகத்திற்கு வெளிச்சப்படுத்திக் காட்டுகிற ஓர் ஊடகமாக இஸ்ரவேலர் இருக்க வேண்டுமென்றுதேவன்விரும்பினார். தேவனுக்கும்அவரதுமக்களுக்குமிடையே உள்ள அந்த உறவை சட்டப்படி உறுதிப்படுத்துவதாக அந்த உடன்படிக்கை இருந்தது. உடன்படிக்கையின் பொதுவான சூத்திரம், வெவ்வேறு வசனங்களில் இலேசான மாற்றத்துடன் சொல்லப்பட்டாலும், ஒட்டுமொத்தமாக இதுதான்: 'நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்.' யாத் 6:7; லேவி 26:12; எரே 24:7; 31:33; எபி 8:10; வெளி 21:3.

---

**தேவனுடைய 'உரிமைச் சொத்தாக' இருப்பதுபற்றி யோசியுங்கள். அதிலுள்ள விசேஷித்த சிலாக்கியங்கள் என்ன? உங்களுக்குள்ள விசேஷித்த பொறுப்புகள் என்ன?**

# ஈவைப் பெற ஆயத்தமாகுதல்

**பத்துக்கற்பனைகளைப் பெறுவதற்கு தேவன் எவ்வாறு இஸ்ரவேலரை ஆயத்தப்படுத்தினார்? யாத் 19:9-25.**

சீனாயில் கற்பனைகளைப் பெற ஆயத்தமாகும்படி இஸ்ரவேலருக்கு விசேஷித்த வழிகாட்டல்களை தேவன் கொடுத்தார். வெளிப்புற சுத்திகரிப்பானது தேவனுக்கு முற்றிலும் அர்ப்பணிப்பதற்கு அடையாளமாக இருந்தது. சீக்கிரத்தில் வெளிப்படவிருந்த தேவ மகிமையின் மகத்துவமான வெளிப்பாட்டிற்கு அவர்கள் தங்களை ஆயத்தமாக்கவேண்டியிருந்தது. தேவ மகிமை வெளிப்பட்டபோது, 'இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள்'. யாத் 19:16.

வேதாகம நன்னெறிகளின் மையமாக பத்துக்கற்பனைகள் இருக்கின்றன. தேவனுடைய தரநிலைகளின் அடிப்படை அமைப்பு, அடித்தளம் என்னவென்று எல்லா மனிதர்களுக்கும் அவை காட்டுகின்றன. அவற்றின் நியதிகள் நித்திய மானவை; உலகம்முழுவதிற்கும் பொருந்தக்கூடியவை. வேதாகமப் பதிவின்படி, தேவனே பத்துக்கற்பனைகளைக் கொடுத்தார். யாத் 19:19; 20:1; உபா 5:4,5, 24. அவரே எழுதினார். யாத் 24:12; 31:18; உபா 5:22. அது ஒரு விசேஷித்த ஈவாக இரண்டுமுறை மோசேக்குக் கொடுக்கப்பட்டது. யாத் 32:19; 34:1; உபா 10:1,2.

யாத்திராகமப் புத்தகத்தில், பத்துக்கற்பனையானது 'சாட்சி' என்றும் (எபிரெய வார்த்தை **எடுட்**. யாத் 31:18), 'உடன்படிக்கையின் வார்த்தைகள்' என்றும் அழைக்கப்படுகிறது. (எபிரெய வார்த்தை **ஹப்பெரிட்**; யாத் 34:28). உபாகமப் புத்தகத்தில், அவை 'உடன்படிக்கையின் பலகைகளில்' எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உபா 9:9,11,15. எபிரெய மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களில் 'பத்துக் கற்பனைகள்' என்கிற வார்த்தைகளே இல்லை. கற்பனை என்பதற்கான எபிரெய வார்த்தை **மிட்ஸ்வாட்**. ஆனால் **மஸெரெட் ஹடெபரிம்** எனும் எபிரெய வார்த்தைகளால் கற்பனைகள் குறிப்பிடப்படுகின்றன. இதற்கு, பத்து வார்த்தைகள் என்று அர்த்தம். இது **டபார்** என்கிற எபிரெய வார்த்தையிலிருந்து வந்தது; இதற்கு 'வார்த்தை, வாக்கியம், முக்கியப்பொருள், காரியம், பேச்சு, சம்பவம், வாக்குறுதி, கூற்று' என்று அர்த்தம். யாத் 34:28; உபா 4:13; உபா 10:4.

சிறுசிறு வித்தியாசங்களுடன் பத்துக்கற்பனைகளின் இரு பதிப்புகள் உள்ளன; முதலாவது பதிப்பு யாத் 20:1-17இலும், இரண்டாம் பதிப்பு உபா 5:6-11 இலும் உள்ளது. இரண்டாவது பதிப்பு, மோசே இஸ்ரவேலரிடம் வாய்மொழியாகச் சொன்னது, சீனாய் அனுபவத்திற்குப்பிறகு நாற்பது வருடங்கள் கழித்து, மக்கள் வாக்குத்தத்த தேசதிற்குள் செல்வதற்குமுன் மோசே சொன்னார். உபா 1:3,4; 4:44-47. இந்த வெவ்வேறு சூழ்நிலைகளால் சிற்சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. நியாயப்பிரமாணத்தின் பொருள் அன்பு என்று பவுல் சொல்லி, பத்துக்கற்பனைகளிலிருந்துதான் மேற்கோள் காட்டினார். ரோமர் 13:8-10. அன்புதான் நியாயப்பிரமாணத்தின் பொருள், ஏனென்றால் தேவன் அன்பாகவே இருக்கிறார். 1யோவான் 4:16.

---

**பத்துக்கற்பனைகள் தேவ அன்பின் வெளிப்பாடாக இருப்பதை எவ்வாறு புரிந்திருக்கிறீர்கள்? அதன் அர்த்தம் என்ன? அவற்றில் தேவ அன்பு எவ்வாறு வெளிப்படுகிறது?**

# பத்துக்கற்பனை எனும் ஈவு

**பத்துக்கற்பனைகளின் நியதி என்ன? அவை எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன? யாத் 20:1-17.**

பத்துக்கற்பனைகள் கட்டளைகளுடன் துவங்காமல், தேவன் தம் மக்களுக்குச் செய்த கிருபையான செயல்களுடன் துவங்குகின்றன: ‘உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே’. யாத் 20:2. தேவன் முதலாவது இஸ்ரவேலுக்கு விடுதலையும் இரட்சிப்பும் கொடுத்து தம் கிருபையைக் காட்டுகிறார், அதன்பிறகு தம் சித்தத்தை வெளிப்படுத்துகிறார். தேவன் காண்பித்த தயவுக்காக அன்போடும் நன்றியுணர்வோடும் அந்தக் கற்பனைகளை அவர்கள் கைக்கொள்ள வேண்டியிருந்தது.

பத்துக்கற்பனைகளின் பொருள் ‘அன்பு’ என்று தேவன் சுருக்கமாகச் சொல்கிறார். ரோமர் 13:10. கற்பனைகளிலேயே பிரதானமானது அன்பின் கற்பனை, அது இரண்டு வழிகளில் வெளிப்படுகிறது: தேவன்மீது அன்பு. உபா 6:5. பிற மனிதர்கள்மீது அன்பு. லேவி 19:18. தேவன்மீது அன்புகூருவதின் அர்த்தத்தை முதல்நான்குகற்பனைகள்விளக்குகின்றன; பிறமனிதர்கள்மீது அன்புகூருவதின் பொருளை அடுத்த ஆறு கற்பனைகள் விளக்குகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக தேவன்மீது அன்புகூருமாறு பத்துக்கற்பனைகள் தொடங்குகின்றன. (நமக்கும் தேவனுக்கும் இடையில் காணப்படுகிற அன்பு); பிறகு, மற்றவர்களையும் மதிப்புடன் நடத்தச் சொல்கின்றன. (நமக்கும் பிறமனிதர்களுக்கும் இடையில் காணப்படுகிற அன்பு):

1. நம் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுக்கு முதலும் முதன்மையுமான இடத்தைக் கொடுத்து, அவரைக் கனப்படுத்தல்; பயபக்திகொள்தல். (முதலாவது கற்பனை).
2. தேவனுடைய பிரத்தியேகநிலையைக்கனப்படுத்தி, பாதுகாத்தல்; சரீரரீதியாக, அடையாளரீதியாக, ஆவிக்குரியரீதியாக அவருக்குப் பதிலாக எந்த வகையிலும் ஒரு விக்கிரகத்தைச் செய்யாமல், முழு மெய்ப்பற்றையும் தேவனுக்கே கொடுத்தல். (இரண்டாவது கற்பனை).
3. தேவநாமத்தின்மீது பயபக்திகொள்தல். அதாவது அவரது நன்மதிப்பு, குணம் மீது பயபக்திகொள்தல் (மூன்றாவது கற்பனை);
4. அவரது இளைப்பாறுதலின், தொழுகையின் நாளை – அதாவது ஓய்வுநாளைக் கனப்படுத்தல். (நான்காம் கற்பனை);
5. பெற்றோரைக் கனம்பண்ணுதல். (ஐந்தாம் கற்பனை).
6. வாழ்க்கையை மதித்தல். (ஆறாம் கற்பனை).
7. திருமணத்தைக் கனம்பண்ணுதல். (ஏழாம் கற்பனை).
8. மனிதர்களின் சொத்தை மதித்தல். (எட்டாம் கற்பனை).
9. பிறர் நன்மதிப்புக்கு மதிப்பளித்தல். (ஒன்பதாம் கற்பனை).
10. சுயநல ஆசைகள் எதுவும் நம் குணத்தைக் கெடுக்காதபடிக்கு சுயத்தை மதித்தல். (பத்தாம் கற்பனை).

‘நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்’ என்று இயேசுதாமே சொன்னார். யோவான் 14:15; 1யோவான் 4:20,21. எனவே, மெய்யான கீழ்ப்படிதல் என்பது இயேசுவின்மீதான அன்பின், நன்றியுணர்வின் வெளிப்பாடாகும். அந்த அன்பு மற்றவர்களை நாம் நடத்துகிறவிதத்தில் வல்லமையாக வெளிப்படும்.

# தேவபிரமாணத்தின் வெவ்வேறு செயல்பாடுகள்

தேவனுடைய கற்பனை அவரது குணத்தை வெளிப்படுத்துவதால், அவர் யாரென்பது தெரிகிறது. அவர் பரிசுத்தமும் நீதியும் நற்குணமும் உள்ளவராக இருப்பதால், அவரது கற்பனையும் அப்படிப்பட்டதே. 'நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது' என்று பவுல் அதை உறுதிப்படுத்துகிறார். ரோமர் 7:12.

வேதாகமத்தில் தேவனுடைய கற்பனைபற்றி நேர்மறையான மனநிலையே வெளிப்படுகிறது. மத் 5:17,18; யோவான் 14:15; 1கொரி 7:19. கற்பனைகளை வைத்து கவிதை எழுதலாம். சங் 119. பாடலாம். சங் 19. அவற்றை இரவும் பகலும் தியானிக்கலாம். சங் 1:2; யோசுவா 1:8. மனிதன் தீமையில் விழாமல் கற்பனைகள் பாதுகாக்கின்றன, ஞானத்தையும் அறிவையும் ஆரோக்கியத்தையும் செழிப்பையும் சமாதானத்தையும் கொடுக்கின்றன. உபா 4:1-6; நீதி 2; 3.

1. தேவனுடைய கற்பனை ஒரு வேலி போன்றது; அது நாம் சுதந்தரமாக வாழ்வதற்கான இடத்தை உருவாக்குகிறது; குறிப்பிட்ட எல்லையைத் தாண்டினால் ஆபத்தும், பிரச்சினைகளும், சிக்கல்களும், ஏன் மரணமும்கூட காத்திருப்பதாக எச்சரிக்கிறது. ஆதி 2:16,17; யாக் 2:12.
2. கற்பனை இயேசுவைச் சுட்டிக்காட்டுகிற திசைப்பலகை; அவரே நம் பாவங்களை மன்னித்து, நம் வாழ்க்கையை மாற்றுகிறார். 2கொரி 5:17; 1யோவான் 1:7-9. இவ்வாறு, கிறிஸ்துவிடம் நம்மை வழிநடத்துகிற உபாத்தியாக இருக்கிறது. இதன் அர்த்தம், பாதுகாவலன் என்பதாகும். கலா 3:24.

**யாக் 1:23-25இல் யாக்கோபு சொல்வது என்ன? நியாயப்பிரமாணம் நம்மை இரட்சிக்கமுடியாது என்றாலும் அதன் செயல்பாடு, முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள அந்த வார்த்தைகள் எவ்வாறு உதவுகின்றன?**

ஒரு கண்ணாடியால் நம் குறைகளைக் காட்டமுடியும். ஆனால் நம்மைக் குணமாக்குகிற எதுவும் கண்ணாடியிடம் கிடையாது. கண்ணாடி பிரச்சினைகளைக் காட்டுகிறது, ஆனால் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு எதையும் கொடுப்பதில்லை. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு தேவனுக்குமுன் நீதிமானாக்கப்பட முயலுவது, கண்ணாடி என்றாவது ஒருநாள் நம் குறைகளைச் சரிசெய்துவிடுமென நம்பி, அதையே பார்த்துக்கொண்டிருப்பதற்கு சமம்.

நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் உட்பட எந்தக் கிரியைகளாலும் இரட்சிப்பு கிடைப்பதில்லை, மாறாக விசுவாசத்தால் அதைப் பெறுகிறோம், அதனால், நியாயப்பிரமாணம் ஒழிந்துபோனது, இனி அதை நாம் கைக்கொள்ளவேண்டியதில்லை என்று சில கிறிஸ்தவர்கள் சொல்கிறார்கள். நியாயப்பிரமாணம்தான் பாவம் இன்னதென்று விளக்குகிறது: 'பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேன்' ரோமர் 7:7. எனவே, நியாயப்பிரமாணம் ஒழிந்ததாகச் சொல்வது, அதற்கும் சுவிசஷத்திற்கும் உள்ள தொடர்பை தவறாகப் புரிந்துகொள்வதாகும். நியாயப்பிரமாணம் இருந்தால்தான், சுவிசேஷம் ஏன் முக்கியம் என்பது புரியும்.

---

**தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக இருந்திருக்கிறீர்கள்? இரட்சிப்பைப் பெறுமளவிற்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? இல்லை என்றால், உங்களுக்கு ஏன் சுவிசேஷம் அவசியமாக இருக்கிறது?**

# நமக்கான தேவ வாக்குத்தத்தமே கற்பனை

**பத்துக்கற்பனைகளைக் கைக்கொள்வதால் நாம் எவரும் இரட்சிக்கப்படமுடியாது என்று பவுல் தெளிவாகச் சொன்னாலும், கற்பனைகள் நம் வாழ்க்கையில் என்ன செயலாற்றவேண்டும்? ரோமர் 3:20-24.**

---

பத்துக்கற்பனைகளைச் சுட்டிக்காட்ட மோசே **டபரிம்** என்கிற எபிரெய வார்த்தையைப் பயன்படுத்துகிறார். யாத் 34:28; உபா 4:13; 10:4. இந்தச் சொல்லுக்கு 'கற்பனைகள்' என்று அர்த்தம் கிடையாது, மாறாக 'வார்த்தைகள்' என்று அர்த்தம். 'வார்த்தை' என்பதற்கான ஒருமை எபிரெயச் சொல் **டபார்**; அதற்கு 'வாக்குத்தத்தம்' என்றும் அர்த்தமுண்டு. அதனால்தான் வேதாகமத்தின் பல இடங்களில் டபார் என்கிற வார்த்தை வாக்குத்தத்தம் சம்பந்தமாக பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்லாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1இராஜா 8:56; 2நாளா 1:9; நெகே 5:12,13; உபா 1:11; 6:3; 9:28; யோசு 9:21; 22:4; 23:5.

பத்துக்கற்பனையின் செயல்பாடுபற்றி எலன் ஒய்ட்டும் நுணுக்கமான கருத்தைச் சொல்லியிருக்கிறார்: 'பத்துக்கற்பனைகளும் பத்து வாக்குத்தத்தங்கள்'[1]. தேவன் நமக்காக அற்புதமான காரியங்களைச் செய்யும்படிக்கு நம்மை சரியான பாதையில் வழிநடத்துகிற தேவனுடைய வாக்குறுதிகளாக பத்துக்கற்பனைகள் இருக்கின்றன. அதேசமயம் அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

**கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் 'முடிவாயிருக்கிறார்' என்று பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? ரோமர் 10:4.**

---

இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் **டெலோஸாக** இருப்பதாக பவுல் சொல்கிறார்; ஒழித்துவிட்டதாக அவர் பேசவில்லை. மாறாக, கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தின் இலக்கு, நோக்கம் என்றே வலியுறுத்துகிறார்; அவரது பாவநிவாரண பலியானது நியாயப்பிரமாணத்தின் செல்லுபடிதன்மையை ஒழித்துவிட்டதாக அர்த்தமில்லை.

மாறாக, நியாயப்பிரமாணம் முக்கியமானது, சட்டப்பூர்வமானது, நிலையான அதிகாரமுடையது என்று பவுல் வலியுறுத்துகிறார். ரோமர் 3:31; 1கொரி. 7:19; கலா 5:6. **டெலோஸ்** என்பது ஒரு நோக்கத்தை, இலக்கைச் சுட்டிக்காட்ட பயன்படுமேதவிர, காலம் சம்பந்தமாக சுட்டிக்காட்டப் பயன்படுவதில்லை. தேவ பிரமாணத்தின் மெய்யான அர்த்தத்தையும் நோக்கத்தையும் திறக்கிற சாவி கிறிஸ்துவே. எனவே கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை ஒழித்துவிட்டார், ஒதுக்கிவிட்டார் என்று சொல்வது தவறு. கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தின் இலக்கு, அவரையே அது சுட்டிக்காட்டுகிறது.

---

**நியாயப்பிரமாணம் எவ்வாறு இயேசுவைச் சுட்டிக்காட்டுகிறது? அதாவது, நம்மைப்பற்றி நியாயப்பிரமாணம் சுட்டிக்காட்டுகிற என்ன உண்மையானது இயேசுவை நாம் நோக்கிப் பார்க்க உதவுகிறது?**

---

# மேலும் படிக்க:

'தம் பிரமாணம் எவ்வளவு மேன்மை வாய்ந்ததோ அதற்கேற்றாற்போல அது கொடுக்கப்பட்ட தருணத்தையும் தேவன் பயபக்திமிக்க பிரமாண்ட தருணமாக்கினார். தேவசேவையுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றும் பயபக்திமிக்கதாகக் கருதப்படுகிற வகையில் மக்கள் தாக்கமடைய வேண்டியிருந்தது'.

இத்தகைய பயபக்தி அவசியம் என்கிற நியதி இன்றைக்கும் பொருந்தும். இது தேவனுடைய மகத்துவத்தையும், மாட்சிமையையும், பூரணத்தையும் புரிந்துகொள்வதால் நமக்குள்ளிருந்து புறப்படுகிறது. தேவமகிமையைக் காண்பது நம் இருதயங்களில் நன்றியுணர்வை உருவாக்குகிறது; நம் அகந்தையைத் தாழ்த்துகிறது. தேவனுடைய பரிசுத்தத்தை எவ்வளவு அருகிலிருந்து பார்க்கிறோமோ, அவ்வளவுக்கு நம் வாழ்க்கையின் குறைகளைப் பகுத்தறிவோம், மேலும் மறுரூபமாக்குகிற அவரது பிரசன்னத்தைத் தேடி, அவரைப்போலாக விரும்புமாறு நம்மை வழிடத்துகிறது. தேவனோடும் அவரது பரிசுத்த பிரமாணத்தோடும் ஒப்பிட்டு, நம்முடைய நிலைபற்றி அறிவது, நமக்காக கிறிஸ்து அடைந்த மரணத்தை நாம் முற்றிலும் சார்ந்திருக்கச் செய்கிறது. அதே நேரம், தேவனை நம் ஆண்டவரும் ராஜாவுமாக தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ளும்போது, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது கடினமாக இருக்காதென இயேசு தெளிவுபடுத்தியிருக்கிறார். மத் **11:28–30**. தெய்வீக பிரமாணம் நித்திய காலம் செல்லுபடியாகுமென கிறிஸ்து காண்பித்திருக்கிறார். மத் **5:17–20**. தேவன் நமக்கு இலவசமாக அருளியுள்ள இரட்சிப்பின்நிமித்தம் அவர்மீது அன்புவைத்து, நன்றியுணர்வால் அவரது பிரமாணங்களைக் கைக்கொள்ளும்போது, அவரோடுள்ள இரட்சண்ய உறவை முழுமையாக அனுபவிக்கலாம். நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதின் மகத்தான சிலாக்கியங்களை அனுபவிக்கிற அதே வேளையில் (அதை மீறுவதால் எவ்வளவு வேதனையும் கஷ்டங்களும் உண்டாகிறதெனப் பாருங்கள்), நம் இரட்சிப்பு பிரமாணத்தைக் கைக்கொள்வதில் அல்ல, இயேசுவில் காணப்படுகிறது என்பதை அறிவதின் நிச்சயத்தையும் பெறலாம்.

---

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் செய்யவேண்டியிருந்த ஆயத்தமானது, தங்களுக்கு எவ்வளவு பயபக்தி தேவை என்கிற உணர்வைக் கொடுத்தது. இன்று, நம் சபையிலும் சபை வாழ்விலும், தேவனுக்குமுன் இதேபோன்ற பயபக்தியும் நடுக்கமும் காணப்படுகிறதா? அதை இழந்துவருகிறோமா?*

2. *'அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்' என்கிற உடன்படிக்கைபற்றி யோசியுங்கள். இன்று நமக்கு இது எவ்வாறு பொருந்தும், தனிநபராகவும், ஒரு கூட்டமாகவும் இது எவ்வாறு வெளிப்படவேண்டும்?*

3. *நாம் என்ன செய்யுமாறு தேவன் கட்டளையிட்டிருக்கிறாரோ அதைச் செய்வதற்குத் திறனளிப்பார். 'அவரது கட்டளைகள் யாவும் செய்யக்கூடியவையே' என்று எலன் ஒய்ட் சொல்கிறார். இந்த வாக்குறுதியை, டபாரை எவ்வாறு செயல்படுத்தலாம்?*

4. *சிலுவைக்குப்பிறகு நியாயப்பிரமாணம் ஒழிந்துவிட்டது என்கிற பொதுவான கருத்துக்கு நாம் எவ்வாறு பதிலளிக்கலாம்? உண்மையில், அவர்கள் அவ்வாறு சொல்வதுதான் தவறு என்பது எவ்வாறு வெளிப்பட்டிருக்கிறது?*

பாடம் 9 ஆகஸ்ட் 23-29



# கற்பனையின்படி வாழுதல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 21:1–32; 22:16–23:33; 2இராஜா 19:35; மத் 5:38–48; ரோமர் 12:19; மத் 16:27.

**மனன வசனம்:** அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன் என்று கண்டீர்கள். நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம் என்றார். யாத் 20:22,23.

சுற்றிலுமிருந்த தேசத்தாரைக் காட்டிலும் இஸ்ரவேலர்கள் வித்தியாசமானவர்களாக வாழவேண்டுமென தேவன் விரும்பினார். தம்முடைய தலைமையின் கீழ் வாழ்கிற அர்ப்பணிப்புமிக்க விசுவாசக் குடும்பத்தினராக அவர்கள் உருவாக்கப்படவேண்டுமென்று ஆசைப்பட்டார். அனைவரும் அவரது பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள்தாம். நியாயப்பிரமாணத்தின்படி நடப்பதைக் கண்காணிக்க நியாயாதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள்; ஆசாரியர்கள் அதைப் போதித்தார்கள். பெற்றோர்களும் முக்கியப் பங்காற்றினார்கள்.

எந்தக் கலாச்சாரமாக இருந்தாலும், சட்டத்தை இயற்றியவரின் இலட்சியங்களையும் நோக்கங்களையும் குறிக்கோளையும் குணத்தையும்தான் அந்தச் சட்டங்கள் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, ஒவ்வொரு எபிரெய ஆண் குழந்தையையும் கொல்லவேண்டுமென பார்வோன் கட்டளையிட்டபோது, அவன் தீயவன் என்பதை அந்தச் சட்டம் வெளிப்படுத்தியது. ஒரு ராஜா தன் ராஜ்யத்திலுள்ள 18 வயது வாலிபர் ஒவ்வொருவருக்கும் இலவசமாக மேல்கல்வி வழங்குவதாக சட்டம் இயற்றினால், அது அந்த ராஜாவின் தயாளகுணத்திற்கும், தன் நாடு செழிக்க அவர் விரும்புவதற்கும் ஆதாரமாக இருக்கும்.

அதேபோல தேவனுடைய கற்பனைகள் அவர் நல்லவர், அன்புள்ளவர், நன்னெறியுடையவர், நீதியுள்ளவர், தீமையை வெறுப்பவர் என்பதை வெளிப்படுத்துகின்றன. கற்பனைகள் பரிசுத்தமாயும் நீதியாயும் இருப்பதுபோல தேவனும் இருக்கிறார். கற்பனைகள் பரிபூரணமான வாழ்க்கைக்கான சூழலை உருவாக்குகின்றன; மேலும், ஆபத்துக்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கின்றன. தேவனையும், சகமனிதர்களையும், வாழ்க்கையின் நன்னெறிகளையும் மதித்து நடக்கவேண்டும் என்பதே அவரது சட்டஅமைப்பின் அடிப்படை.

*2025 ஆகஸ்ட் 30 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# உடன்படிக்கையின் பிரமாணங்கள்

சீனாயில் தேவன் தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்தார்; அதாவது, தம்முடன் உறவு வைப்பதால் எவ்வாறு பரிசுத்தமான ஜீவியம் ஜீவிக்கலாமென தம் மக்களுக்குப் போதிக்க அது அடிப்படையாக இருந்தது. ஆனால் நியாயப்பிரமாணத்தின் நியதிகளை அனுதின வாழ்க்கையில் அப்பியாசிக்கவேண்டும், அதனால் தேவன் கூடுதல் சட்டங்களை அவர்களுக்குக் கொடுத்தார், அவை 'உடன்படிக்கையின் பிரமாணங்கள்' என்று அழைக்கப்பட்டன. அவற்றைக் கண்காணிப்பதும், அவற்றை சரியாகப் பயன்படுத்துவதும் நியாயதிபதிகளின் பொறுப்பு.

'அடிமைத்தனத்தாலும் அஞ்ஞானப் பழக்கவழக்கங்களாலும் குருடாகி, சீர்கேடடைந்திருந்த ஜனங்களின் சிந்தைகளால் தேவனுடைய பத்துக்கற்பனைகளின் விசாலமான நியதிகளை முற்றிலும் புரிந்துகொள்ள முடியவில்லை. பத்துக்கற்பனைகள் வலியுறுத்தின கடமைகளை முற்றிலும் புரிந்துகொள்ளவும், செயல்படுத்தவும், பத்துக்கற்பனைகளின் நியதிகளை விளக்கியும் எடுத்துக்காட்டியும் கூடுதல் போதனைகள் கொடுக்கப்பட்டன. அந்தச் சட்டங்களே பிரமாணங்கள் என்று அழைக்கப்பட்டன, ஏனென்றால் அவை எல்லையில்லா ஞானத்தாலும் நியாயத்தாலும் உருவாக்கப்பட்டிருந்தன. அதேசமயம் அவற்றை அடிப்படையாக வைத்தே நியாயாதிபதிகள் தீர்ப்பு வழங்கவேண்டியிருந்தது. அவை பத்துக்கற்பனைகளைப்போல அல்லாமல் மோசேயிடம்மட்டும் சொல்லப்பட்டன, அவற்றை அவர் மக்களுக்குச் சொல்லவேண்டும்.

**எபிரெய அடிமைகள், மனிதகொலைகள், உடலைக் காயப்படுத்துதல் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட பிரத்தியேக சட்டத்திட்டங்கள் என்ன? யாத் 21:1-32.**

பல அதிகாரங்களில் உடன்படிக்கை பிரமாணங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. யாத் 21:1-23:19. தீமை பெருகாமல் தடுத்து நிறுத்தவும், ஒழுக்கமிக்க சமுதாயத்தைக் கட்டவும் இந்தச் சட்டத்திட்டங்களும் கற்பனைகளும் கொடுக்கப்பட்டன.

அடிமைத்தனச் சட்டங்கள் சிறப்புச்சிட்டங்கள், அவற்றை நவீனகால அல்லது மத்தியக்கால கொடிய, தீய அடிமைத்தனத்துடன் குழப்பிக்கொள்ளக்கூடாது. எபிரெய அடிமைகள் பாதுகாக்கப்பட்டார்கள், மதிப்புடன் கருதப்பட்டார்கள். நவீனகால, மத்தியக்கால சமுதாயங்களில், அடிமைகள் எஜமானின் உடைமைகளாகக் கருதப்பட்டார்கள்; அந்த எஜமான் தன் விருப்பப்படி அவர்களை நடத்த முடியும். இஸ்ரவேலில், ஒருவரை ஆறு வருடங்கள்மட்டுமே அடிமையாக வைத்திருக்க அனுமதி தரப்பட்டது. யாத் 21:1,2; எரே 34:8-22. ஏழாம் வருடத்தில் தங்கள் எஜமான்களுடன் இருக்க தாங்களே விரும்பினாலொழிய அவர்களை விடுவித்துவிடவேண்டும். எஜமான்கள் அவர்களுக்கு ஓய்வுநாட்களில் விடுப்பு கொடுக்கவேண்டும், அவர்களது அடிப்படைத் தேவைகளைச் சந்திக்கவேண்டும். யாத் 20:9,10.

**உலகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடிமைத்தனப் பழக்கவழக்கம் கிட்டத்தட்ட ஒழிக்கப்பட்டிருந்தாலும், அதன் நியதிகளில் சில இன்றும் எவ்வாறெல்லாம் காணப்படுகின்றன? நம் செல்வாக்கிற்கு உட்பட்ட பகுதிகளில் அந்த நியதிகளை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் என்ன செய்யலாம்?**

# கூடுதலான பிரமாணங்கள்

சொத்துரிமை சம்பந்தப்பட்ட பல்வேறு சூழல்களில் நியாயாதிபதிகள் நீதி வழங்கவேண்டிய விதம்பற்றி தேவன் தம் இரக்கத்தால் சொல்லியிருந்தார். ஒரு மாடு பிறனுடைய மாட்டை முட்டினால் என்ன செய்யவேண்டும்? ஒருவர் வீட்டுக் கால்நடைகளை வேறொருவர் திருடி விற்றால் என்ன செய்யவேண்டும்? வேறொருவருடைய வயலில் அல்லது திராட்சத்தோட்டத்தில் மிருகங்கள் மேய்ந்தால் என்ன செய்யவேண்டும்? ஒருவர் கடனாக வாங்கியிருந்த பொருள் திருடுபோனால் என்ன செய்யவேண்டும்? இரவலுக்கு வாங்கியிருந்த மிருகம் காயப்பட்டாலோ செத்துப்போனாலோ என்ன செய்யவேண்டும்? இவ்வாறு வழக்குகள் பட்டியலிடப்பட்டன. யாத் 21:33-22:15.

**என்னென்ன பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வுகாண யாத் 22:16-23:9இல் உள்ள சட்டத்திட்டங்கள் கொடுக்கப்பட்டன?**

---

தேவன் கொடுத்த சட்டங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகள் அடங்கியிருந்தன. மற்றவர்களை விமர்சிப்பது அல்லது நிந்திப்பதற்கு எதிராகவும் சட்டத்திட்டங்கள் கொடுக்கப்பட்டன. ஒடுக்குமுறை எந்த விதத்திலும் இருப்பதை அவர் விரும்பவில்லை. தேவன் தம் இரக்கத்தால், மனித இருதயத்தின் தீய இயல்புகளைச் சீர்ப்படுத்துகிறார். மக்களின் சுபாவ மனநிலைகளைக் கட்டுப்படுத்துகிறார். சமுதாயம் பாதுகாப்பானதாக, தீமை இல்லாததாக இருக்கவேண்டும்; தனிநபர்களுக்கிடையே நல்ல உறவுகள் பேணி வளர்க்கப்படவேண்டும். எல்லாச் செயல்களையும் நியாயமும் அன்புமே கட்டுப்படுத்தவேண்டும்.

**என்னென்ன முக்கிய விஷயங்கள்பற்றி யாத் 23:10-19இல் விவாதிக்கப்படுகிறது?**

---

ஓய்வுநாளும் பண்டிகைகளும் தொழுகை சம்பந்தப்பட்டவை. அவை இரட்சிப்பு வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளின் ஞாபகச்சின்னங்களாக இருந்தன. தொழுகைக்கான ஒழுங்கமைப்பு மிகக்கவனத்துடன் செய்யப்பட்டிருந்தது. ஏனென்றால் மற்ற எல்லாச் செயல்பாடுகளுக்கும் அதுவே இறையியல் அடிப்படையாக இருந்தது. சிருஷ்டிப்பின்போது ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்டது. ஆதி 2:2,3; யாத் 20:8-11. அது இஸ்ரவேலரின் விடுதலையோடும் மீட்போடும் தொடர்புடையதாக இருந்தது. உபா 5:12-15. மேலும், தேவனை நம் சிருஷ்டிகராகவும், மீட்பராகவும், ஆண்டவராகவும் வல்லமையாகச் சுட்டிக்காட்டுகிறது. மாற்கு 2:27,28.

அதேசமயம், இஸ்ரவேலர்கள் வருடந்தோறும் மூன்று முக்கியப் பண்டிகைகளைக் கொண்டாட வேண்டியிருந்தது: 1) இளவேனிற்காலத்தில், பஸ்கா அல்லது புளிப்பில்லா அப்பப்பண்டிகை (மார்ச்மாதம் பாதியிலிருந்து ஏப்ரல்மாதம் பாதிவரை); 2) பெந்தெகொஸ்தே அல்லது அறுப்பின் பண்டிகை (அல்லது வாரங்களின் பண்டிகை). முந்தின பண்டிகை முடிந்து ஏழு வாரங்கள் கழித்து, அதாவது 50ஆவது நாளில் இது ஆரம்பிக்கப்பட்டது; 3) இலையுதிர் காலத்தில், கூடாரப்பண்டிகை அல்லது சேர்ப்புக்காலப் பண்டிகை (பொதுவாக செப்டம்பர் மாதம் பாதியிலிருந்து அக்டோபர் மாதம் பாதிவரை). யாத் 34:18-26; லேவி 23:4-44; எண் 28:16-29:40; உபா 16:1-16.

# தேவனுடைய ஆதி திட்டம்

**வாக்குத்தத்த தேசத்தைக் கைப்பற்றுவதற்கு என்ன பாணிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று தேவன் விரும்பினார்? யாத் 23:20-33.**

இஸ்ரவேலர் சண்டையிட்டு, நிலங்களைக் கைப்பற்றவேண்டும் என்பது தேவ திட்டமல்ல; தேவனே அவற்றைக் கொடுக்கவிருந்தார். அதை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபிற்கு வாக்குரைத்திருந்தார்; அதனால் இஸ்ரவேலர்கள் தேவனிடமிருந்து அதை ஒரு விசேஷித்த ஈவாகப் பெறவேண்டியிருந்தது.

வாக்குத்தத்த தேசத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தை சிவந்த சமுத்திரத்தைக்கடந்துசென்றசம்பவம்எடுத்துக்காட்டியது. தேவன்தம்மக்களுக்காகச் சண்டையிட்டு, அவர்களைக் கொல்லத் திட்டமிட்டிருந்தவர்கள்மேல் முழு வெற்றியைக் கொடுத்தார். யாத் 14:13,14. தேவன் அற்புதவிதமாகத் தலையிட்டதால், எகிப்தியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அதுபோல, அசீரிய ராஜாவான சனகெரிபின் காலத்தில், மிகப்பெரிய, ஆயுதந்தரித்த, நன்கு பயிற்சிப்பெற்ற அசீரியப் படையையும் தேவன் தோற்கடித்தார், அங்கே இஸ்ரவேலர் போரிடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. ஏசாயா தீர்க்கதரிசிமூலம் தனக்குக் கொடுக்கப்பட்ட தேவ வார்த்தையை எசேக்கியா ராஜா விசுவாசித்ததால் தேவன் வெற்றியைக் கொடுத்தார்.

ஆபிரகாமிடம் தேவன் அவரது சந்ததியாருக்கு வாக்குத்தத்த தேசம் 400 வருடங்கள் கழித்துக் கொடுக்கப்படும் என்று சொன்னார். ஆதி 15:13-16. ஏன்? கானான் தேசத்தில் குடியிருந்தவர்களின் துன்மார்க்கம்தான் அதற்கு காரணம். தேவன் அவர்கள் மனதில் மிகுந்த கிருபையுடன் செயல்பட்டுவந்தார். அவர்கள் மனந்திரும்ப மற்றுமொரு கிருபையின் காலத்தைக் கொடுத்தார். ஆனாலும் அவர்கள் தேவனுக்கும் அவரது விழுமியங்களுக்கும் எதிரான கலகத்தில் தொடர்ந்தார்கள், அத்தேசத்தாரின் அக்கிரமங்கள் நிறைவானபோது, அவர்கள் வாழ்ந்த பகுதியை எபிரெயர்கள் புதிதாகக் குடியிருக்கும்படி கொடுக்கச் சித்தமானார்.

மேலும், இஸ்ரவேலருக்கு முன்னிருந்து அத்தேசத்தாரை இரண்டு விநோதமான, ஆனால் ஆற்றல்மிக்க வழிகளில் துரத்தப்போவதாகச் சொன்னார்: 1) துன்மார்க்க தேசத்தார்மீது திகிலையும் கலக்கத்தையும் அனுப்புதல், 2) அங்கிருந்தவர்களைத் துரத்த குளவிகளை அனுப்புதல். இஸ்ரவேலர் அந்தப் புதிய பகுதிக்குள் சென்று சேர்வதற்குமுன்னரே, அவர்களுடைய எதிரிகள் அந்த இடத்தை விட்டுவிட்டு, 'முதுகுகாட்டி' ஓடியிருப்பார்கள். யாத் 23:27,28.

வாக்குத்தத்த தேசத்தைக் கைப்பற்றியதில் முக்கியப் பங்காற்றியவர் தேவனுடைய தூதனானவர். அந்தத் தூதர் கிறிஸ்து, அவரே இஸ்ரவேலை வழிநடத்தினார்; தேசங்களைக் கைப்பற்றினார்; இஸ்ரவேலரைக் காப்பாற்றினார். அவர்களை பகலில் வழிநடத்த மேகஸ்தம்பமாகவும், இரவில் வழிநடத்த அக்கினி ஸ்தம்பமாகவும் இருந்தார். அவர் தெய்வீக அதிகாரமுடையவராக இருந்ததால், இஸ்ரவேலர் அவர்மீது தீவிரகவனம்செலுத்தி, அவருக்குச்செவிகொடுக்கவேண்டியிருந்தது. யாத் 23:21. தேவசித்தத்திற்கு எதிர்த்துநிற்பதும், அவரது தலைமைத்துவத்தைச் சந்தேகிப்பதும் அவர்களது முன்னேற்றத்தைச் சிக்கலாக்கவிருந்தன.

---

**அந்த அஞ்ஞான தேசத்தினர் தங்கள் வழிகளிலிருந்து திரும்புவதற்கு பல வருடங்களை தேவன் கொடுத்தார் என்கிற கருத்தானது, தேவ கிருபைகுறித்தும், அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவர்களுக்கு ஓர் எல்லைக்குமேல் அது கிடைக்காமல் போவதுகுறித்தும் சுட்டிக்காட்டுவது என்ன?**

# கண்ணுக்கு கண்

**பழிக்குப் பழி என்கிற பிரமாணத்தின் அர்த்தத்தை இயேசு எவ்வாறு விளக்கிக்கூறு கிறார்? மத் 5:38-48. அதை இன்று நாம் எவ்வாறு செயல்படுத்தவேண்டும்?**

---

மலைப்பிரசங்கத்தில், அன்றைய மக்கள் நன்றாக அறிந்திருந்த பழைய ஏற்பாட்டு வசனங்களிலிருந்து இயேசு மேற்கோள் காட்டினார். ஆனாலும் அவர் சொன்ன கருத்துகள் அன்றைய ரபிமார்களின் விளக்கங்களுக்கு மாறாக இருந் தன; அந்தக் கருத்துகளால் பல நூற்றாண்டுகளில் பிரமாணங்களின் உண்மை நோக்கமே மறக்கப்பட்டிருந்தது. அதாவது மனிதபாரம்பரியமானது தேவ வார்த் தையின் நோக்கத்தை மறைத்தது மட்டுமல்லாமல், அவற்றின் உட்கருத்தையும் அர்த்தங்களையும்கூட புரட்டியிருந்தது. உதாரணத்திற்கு, ஓய்வுநாள் சட்டத்திட் டங்கள் எவ்வளவாய் புரட்டப்பட்டிருந்தன என்று யோசியுங்கள். அந்தச் சட்டங் களின் அசல் நோக்கங்களை மக்கள் மீண்டும் அறிந்துகொள்கிற வகையில் இயேசு பேசினார்.

அந்த வசனங்களின் உண்மையான உட்கருத்தையும் அர்த்தத்தையும் மக் களுக்கு வலியுறுத்தும்படி மலைப்பிரசங்கத்தின் பாக்கிய வசனங்களைச் சொன் னார். அதன்மூலம், அன்று நிலவிய தவறான விளக்கங்களைச் சரிசெய்ய இயேசு முயன்றார்.

'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்று யாத் 21:24 சொல்வதை, மத் 5:38 மேற்கோள் காட்டுகிறது. 'என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர் கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்று பழிக்குப்பழி பிரமாணத்திற்கு இயேசு விளக்கம் சொல்கிறார். இந்த வசனம் வேதாகமத்தின் பிற இடங்களிலும் வருகிறது. லேவி 24:20; உபா 19:21.

தனிப்பட்ட வகையில் எவரும் பழிவாங்கக்கூடாது என்பதே இந்தப் பிர மாணத்தின் உண்மையான நோக்கம், விசாரிக்காமல் இரத்தம்சிந்துதலோ பழி வாங்குதலோ உண்டாகாமல் இருப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. பாதிப்பை நியாயாதிபதிகள் மதிப்பிட்டு, அதற்கான பண நஷ்ட ஈட்டைக்கணக்கிட்டு, கொடுக்க வேண்டும். மக்கள் 'தாங்களே சட்டத்தை கையில் எடுப்பதை' தடுப்பதற்கு இந்த நடைமுறை ஏற்படுத்தப்பட்டது. நியாயம் செலுத்தவேண்டும், அதை தேவனு டைய சட்டத்தின்படி செய்யவேண்டும்.

இந்த சமூகச்சட்டங்களை மோசேக்குக் கொடுத்த இயேசு கிறிஸ்து, இதன் அர்த்தத்தை அறிந்திருந்தார்; அதனால் அதன் உண்மையான நோக்கத்தின்படி அவற்றைக் கடைப்பிடித்தார். நியாயத்தையும் ஒப்புரவாக்குதலையும் நிலை நாட்டி, மீண்டும் சமாதானத்தைக் கொண்டுவருவதே அதன் நோக்கம்.

நியாயம்செலுத்துவதற்கு பழிக்குப்பழியும் தேவையெனக் கருதலாம். இந் தப் பிரமாணங்களை சரியாகப் பயன்படுத்தும்போது, நியாயமும் தவறுக்கு தகுந்த தண்டனை கொடுப்பதும் சமநிலை தவறாமல் இருக்கும்.

---

**ஒருநாளில் எல்லாவற்றிற்கும் நியாயம் செலுத்தப்படப் போகிறது என்கிற கருத்து, இன்று உல கத்தில் காணப்படுகிற சகலவித அநியாயங்களையும் கையாள எவ்வாறு உதவுகிறது?**

# பழிக்குப் பழி

*'பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.' ரோமர் 12:19; உபா 32:35.*

**இந்த வசனங்களில் உள்ள வாக்குறுதியும் கட்டளையும் என்ன? அவை எவ்வாறு நெருங்கிய தொடர்புடையவை?**

---

---

இப்போது நியாயம்கிடைப்பது அரிதாயிருக்கிறது. தீங்கோ பாதிப்போ உண்டாகும்போது, தேவன் இறுதி அதற்காக நியாயம் செய்யும்மட்டும், சட்டத்தைப் பயன்படுத்தி, நியாயமான தண்டனை கொடுப்பது பண்டைய இஸ்ரவேலிலிருந்த நியாயாதிபதிகளின் கடமையாக இருந்தது. அதற்கு முதலில் உண்மையான தகவல்களை அறியவேண்டும். பிரச்சினை என்னவென்றால், கிறிஸ்துவின் காலத்திலிருந்த நியாயப்பிரமாண போதகர்கள், தனிப்பட்ட வகையில் பழிவாங்குவதற்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தினார்கள். அவ்வாறு செய்து, அந்தச் சட்டத்தின் நியதியைப் புரட்டினார்கள், அதன் உண்மையான நோக்கத்தைத் தவறவிட்டார்கள். அதனால், உண்மையில் பிரமாணம் தடைசெய்ததை நியாயமானதுபோலக் காட்டினார்கள்.

**பிரதிபலன் நியதிகள், தண்டனையின் நியதிகள்பற்றி இயேசு பார்த்த விதம்குறித்து மத் 6:4,6; 16:27; லூக் 6:23; 2தீமோ 4:8 என்ன சொல்கின்றன?**

---

---

பிரதிபலன் நியதிக்கும் தண்டனை நியதிக்கும் இயேசு எதிராக இருக்கவில்லை. நியாயம் என்பது நியதி சம்பந்தப்பட்ட விஷயம்; அது வாழ்க்கையின் ஒரு முக்கியப் பகுதி. ஆனால் மனிதன் எவனும் தன்னை ஒரு நடுவராக, நீதிபதியாக, 'தண்டனை கொடுப்பவனாக' எண்ணிவிடக்கூடாது. நாம் நியாயத்தைப் புரட்டுவது எவ்வளவு எளிதாக இருக்கிறது! தீங்குக்கு தீங்குசெய்வது நம்முடைய வேலையல்ல. ஏதாவது தீமையைச் சரிசெய்ய வேண்டியிருந்தால், அதை அதற்காகவே உள்ள நீதிமன்றம் செய்யவேண்டும்; அது நீதிபதிகளின் வேலை. இந்தப் பின்னணியில்தான் 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல' நீங்களும் பூரண சற்குணராயிருங்கள் என்று இயேசு சொன்னார். மெய்யான பூரணசற்குணம் என்பது தகுதியில்லாதவர்கள்மேலும் அன்பு காட்டுவதும், மன்னிப்பதும், இரக்கமாயிருப்பதும் ஆகும். லூக் 6:36. இந்த நியதியும், இந்த நியதியின்படி செயல்படுவதும்தான் தேவனுடைய குணத்தைப் பிரதிபலிப்பதாகும்.

---

**நமக்கு கட்டளையிட்டிருக்கிறபடியே ஒவ்வொரு நாளும் எவ்வாறெல்லாம் அன்புகூரலாம்? அதற்காக சுயத்திற்கு மரிப்பது ஏன் அவசியம்?**

---

# மேலும் படிக்க:

நாம் நம் எதிரியின் பிரதேசத்தில் வாழ்வதால், அவனது மிகத்திறமையான, வஞ்சனை மிக்க திட்டங்களால் வாழ்க்கையில் பாதிப்புக்கு ஆளாகலாம். பாவத்தாலும், விழுந்துபோன இந்த உலகத்தில் வாழ்வதாலும் வேதனையையும் உபத்திரவத்தையும் அனுபவிக்காதவர் நம்மில் யாராவது உண்டா? இது வாழ்க்கையின் அங்கமாகிவிட்டதுதான் வருத்தம். ஆனாலும் அவற்றை ஏற்றுக்கொண்டு வாழ்வதற்கு தேவன் நமக்கு வல்லமைகொடுக்கிறார்.

'ஒப்பற்ற இரட்சகர் நமக்கு உதவி தேவைப்படும்போது அதை அனுப்புவார். பரலோகத்திற்குச் செல்கிற பாதை, அவரது காலடிகளால் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளது. நம் பாதங்களைப் புண்படுத்துகிற ஒவ்வொரு முள்ளும் அவரது பாதங்களப் புண்படுத்தியவை. நாம் சுமக்கும்படி அழைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சிலுவையும் ஏற்கனவே அவர் சுமந்தவை. சமாதானத்தைப் பெற ஆத்துமாவை ஆயத்தமாக்குவதற்கு ஆண்டவர் பிரச்சினைகளை அனுமதிக்கிறார். இக்கட்டின் காலமானது தேவமக்களுக்கு பயங்கர வேதனையான அனுபவமாக இருக்கிறது; ஆனால் அதுதான் ஒவ்வொரு விசுவாசியும் மேல்நோக்கிப் பார்க்கவும், உடன்படிக்கையின் வில் தன்னைச் சூழ்ந்திருப்பதை விசுவாசத்தால் காணவும் ஏற்ற நேரமாக இருக்கிறது.'


### கலந்துரையாடக் கேள்விகள்

1 *தேவன் அந்த அஞ்ஞானிகளை அவர்களது தேசங்களிலிருந்து துரத்தினார்; முற்றிலும் அழித்தார் என்கிற உண்மையைப் புரிந்துகொள்ள பல நூற்றாண்டுகளாக மக்கள் போராடி வருகிறார்கள். தேவ அன்பில் நியாயமும் வெளிப்படவேண்டும் என்பதை உணருவது, இந்த அனுபவங்களில் எல்லாம் தேவனுடைய நியாயம் மட்டுமல்ல, அவரது அன்பும் வெளிப்பட்டதை நம்புவதற்கு எவ்வாறு உதவுகிறது?*

2 *நம் எதிரிகள், நம்மைப் பகைக்கிறவர்கள் உட்பட மற்றவர்களை நாம் நேசிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு உடனேயே 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்' என்று சொல்வதுபற்றி தியானியுங்கள். மத் 5:48. மற்ற கட்டளைகளைத் தொடர்ந்து, இந்தக் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிய இயேசு விரும்பியது ஏன்? நாம் 'பூரண சற்குணராக' இருக்கவேண்டும் என்று மட்டுமல்ல, 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவைப்போல' பூரண சற்குணராக இருக்கவேண்டும் என்று சொல்லியது ஏன்?*

3 *தேவனுடைய பிரமாணம், அதன் செயல்பாடுபற்றி பவுலின் மனநிலை உயர்வாக இருந்தது. ஆனாலும். அதை தவறாகப் பயன்படுத்துவதை அவர் ஆதரிக்கவில்லை. 'நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறீர்கள்' என்று அவர் சொல்வதின் அர்த்தம் என்ன? ரோமர் 6:14. நாம் எவ்வாறெல்லாம் பிரமாணத்தை தவறாகப் பயன்படுத்த வாய்ப்புள்ளது?*

4 *நியாயத்திற்கும் பழிவாங்குதலுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? அவை முற்றிலும் எதிரெதிர் கருத்துகளா? அல்லது ஒரே கருத்தின் வெவ்வேறு வெளிப்பாடுகளா? நியாயம் வேண்டும் என்கிற ஆசையில் பழிவாங்கவேண்டும் என்கிற ஆசை இல்லாமல் இருக்க என்ன செய்யலாம்?*



# உடன்படிக்கையும் அதன் செயல்படமும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 24:1–18; 1கொரி 11:23–29; லேவி 10:1,2; எசே 36:26–28; யாத் 25:1–9; யாத் 31:1–18.

**மனன வசனம்:** மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். யாத் 24:3.

தேவனும் சிருஷ்டிகரும் மீட்பருமாகிய கர்த்தர், தம் மக்களோடு இருக்கவும் அவர்கள் மத்தியில் வாசம்பண்ணவும் ஆசைப்பட்டார். நாம் அவரோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருப்பதற்காக நம்மைச் சிருஷ்டித்தார். எவ்வாறு மற்ற மனிதர்களுடன் நேரமும் முயற்சியும் செலவிட்டு, அர்த்தமிக்க உறவுகளை உருவாக்க முடிகிறதோ அதுபோல தேவனோடும் உறவை வளர்க்கலாம். அது நம்மை உயர்த்துகிற அனுபவமாக, முழுவளர்ச்சியைக் கொடுக்கிற அனுபவமாக இருக்கும், அவரோடு நேரம் செலவிடவேண்டும். அதாவது, அவரது வார்த்தையை ஆராயவேண்டும் (அது தேவன் நம்முடன் பேசுவது), ஜெபிக்கவேண்டும் (நம் இருதயத்தைத் திறந்து தேவனிடம் பேசுவது), கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல், வருகைபற்றி மற்றவர்களுக்குச் சாட்சிகூறவேண்டும். (தேவ ஊழியத்தில் ஈடுபடுவது). தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார், அப்போது மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களின் ஊடகமாக நாம் இருக்கமுடிகிறது.

நம் கவனமெல்லாம் நம்மீது அல்ல, தேவன்மீது இருக்கவேண்டும். எபி 12:1,2. அவரோடு இணைந்திருப்பதால், அவரது போதனைகளின்படி நடப்பதற்கு நம்மை அவர் பெலப்படுத்துகிறார், அதாவது அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படியச் செய்கிறார். அதனால்தான் முடிவுகாலத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகளைப்பற்றி 'தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்கள்' என்று சொல்லப்படுகிறது. வெளி 14:12. அதாவது, நாம் தேவனில் அன்பாக இருக்கும்போது, அவருக்குக் கீழ்ப்படிகிறோம்.

*2025 செப்டம்பர் 6 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# இரத்தமும் புத்தகமும்

**தேவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையே உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதில் தேவ வார்த்தையை வாசிப்பதும் இரத்தத்தைத் தெளிப்பதும் என்ன பங்காற்றுகின்றன? யாத் 24:1-8.**

---

வேதாகமத்தின் ஜீவ தேவன் உறவுகளின் தேவன். நம் ஆண்டவர் முக்கியமாகக் கருதுவது ஒரு பொருளையோ, திட்டத்தையோ அல்ல, நபரைத்தான். அதனால் தேவன் மக்கள்மீது அதிக கவனம்செலுத்துகிறார்; அவரது செயல்பாடுகளின் முக்கிய நோக்கமே மனிதர்களோடு தனிப்பட்ட உறவை ஏற்படுத்துவதுதான். எல்லாவற்றிற்கும் மேலாக, 'அன்பாகவே' இருக்கும் தேவன் உறவுகளைப்பற்றி அக்கறைகொண்ட தேவனாக இருக்கவேண்டும். ஏனென்றால் உறவுகள் இல்லாமல் அன்பு எப்படி இருக்கமுடியும்?

'நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்' என்று இயேசு சொன்னார். யோவான் 12:32. தேவன் நம்மிடம் நன்னெறி நடத்தையையும், சரியான கோட்பாட்டையும், சரியான செயல்பாடுகளையும் மட்டும் எதிர்பார்க்கவில்லை. நம்மோடு நெருக்கமான உறவை எதிர்பார்க்கிறார். சிருஷ்டிப்பின்போது கொடுக்கப்பட்ட இரண்டு ஏற்பாடுகளும் (ஆதி 1, 2) உறவைப்பற்றியவை: முதலாவது, தேவனோடுள்ள உறவைப்பற்றியது (ஓய்வுநாள்); இரண்டாவது, சகமனிதர்களுக்கு இடையேயுள்ள உறவைப்பற்றியது (திருமணம்).

தேவன் தம் மக்களோடு ஒரு விசேஷித்த உறவை வைக்க விரும்பினதை வலியுறுத்திக் காட்டவே சீனாயில் உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டது. அந்தச் சடங்கில், தேவன் எதிர்பார்க்கிறபடியெல்லாம் தாங்கள் செய்வதாக இரண்டு முறை மக்கள் சத்தமாகச் சொன்னார்கள். 'கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம்' என்று சொன்னார்கள். யாத் 24:3. செய்துவிடலாம் என்று கருதியே சொன்னார்கள், ஆனால் தாங்கள் பெலவீனர்கள், பாவிகள், திறனற்றவர்கள் என்பதை உணர்ந்திருக்கவில்லை. கிறிஸ்துவின் புண்ணியங்களால்மட்டுமே இஸ்ரவேலரால் தேவனுடைய கட்டளைகளின்படி நடக்கமுடியும் என்பதைச் சுட்டிக்காட்டவே இரத்தம் தெளிக்கப்பட்டது.

மனித இயல்பு பெலவீனமானது, பாவத்தன்மையுள்ளது என்பதை ஒத்துக்கொள்ள நாம் விரும்புவதில்லை. தீமை செய்ய விரும்புகிற இயல்பையே பெற்றிருக்கிறோம். நாம் நன்மை செய்கிறவர்களாக மாறுவதற்கு வெளியே இருந்து உதவி தேவைப்படுகிறது. இந்த உதவி மேலேயிருந்தும், தேவகிருபையின் வல்லமையிலிருந்தும், அவரது வார்த்தையிலிருந்தும், பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்தும்மட்டுமே கிடைக்கிறது. இவை அனைத்தும் நாம் பெற்றுக்கொள்கிற தூரத்தில் இருந்தும்கூட, தீமை எளிதாக நம்மை நெருங்கிவிடுகிறதல்லவா?

அதனால்தான் சீனாயில் இருந்த மக்களுக்கும், ஏன் நமக்கும்கூட தேவனுடன் ஒரு நெருக்கமான தனிப்பட்ட உறவு இன்றியமையாததாக இருக்கிறது.

---

**'கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம்'. யாத் 24:3. எத்தனைமுறை இதேபோலச் சொல்லித் தோற்றிருப்பீர்கள்? ஒரே தீர்வு என்ன?**

# தேவனைத் தரிசித்தல்

**யாத் 24:9-18இல் இஸ்ரவேலர் பெற்ற அற்புதமான அனுபவம் என்ன?**

---

தேவனோடு உடன்படிக்கையை மறுஉறுதி செய்தபிறகு, மோசே மீண்டும் சீனாய் மலைமேல் ஏறினார். ஏற ஆரம்பித்த சமயத்தில், மோசேயுடன் வேறு பலரும் இருந்தார்கள். அவருடன்கூட இஸ்ரவேலின் 73 தலைவர்கள் சென்றிருந்தார்கள். அந்தத் தலைவர்களுக்கு அது அரியதொரு அனுபவமாக இருந்தது: அவர்கள் தேவனைக் கண்டார்கள். (தேவதரிசனம்); அந்த வேதப்பகுதியில் இந்த உண்மை இரண்டுமுறை வலியுறுத்தப்படுகிறது. அந்தச் சமயத்தில் தலைவர்கள் ஒன்றாகச்சேர்ந்து புசித்து, தேவனுடன் உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார்கள். அது ஒரு விருந்து, இஸ்ரவேலின் தேவனே விருந்துகொடுத்தார். அந்தத் தலைவர்களை தேவன் அதிகமாகக் கனப்படுத்தினார்.

மத்தியக்கிழக்கில் வேதாகமக் காலங்களில் ஒன்றாகச் சேர்ந்து விருந்துண்பது ஒரு மேன்மையான, கனமிக்க, சிலாக்கியமிக்க அனுபவமாகக்கருதப்பட்டது. இன்றும்கூட ஓரளவுக்கு அதைக் காணலாம். தவறுகளை மன்னித்து, நட்பை வளர்க்க அது உதவுகிறது. 'நாங்கள் இருக்கிறோம்; நெருக்கடிகளில் கைகொடுப்போம்' என்பது வார்த்தைகளால் சொல்லாமலேயே உணர்த்தப்பட்டது. ஒருவரை விருந்துக்கு அழைப்பது விசேஷித்த தருணம், எல்லாரையும் அவ்வாறு அழைப்பது கிடையாது.

அதேசமயம் விருந்து அழைப்பை நிராகரிப்பது, மிகமோசமான அவமரியாதை செயலாகும். இந்த உண்மை புதிய ஏற்பாட்டு சம்பவங்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது; உதாரணமாக, பாவிகளுடன் சேர்ந்து சாப்பிட்டதற்காக இயேசுவை பயங்கரமாக விமர்சித்ததை யோசித்துப் பாருங்கள். லூக் 5:30. விசுவாசிகள் திருவிருந்தில் பங்குபெறும்போதும், தங்களைப்போன்ற பாவிகளான பிற விசுவாசிகளுடன் இந்த நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்துகிறார்கள். அந்த விருந்தில், இயேசுவில் நமக்குக் கிடைத்துள்ள மன்னிப்பையும் இரட்சிப்பையும் கொண்டாடுகிறோம். மத் 26:26-30; மாற்கு 14:22-25; 1கொரி 11:23-29.

வருத்தம் என்னவென்றால், மோசேயுடன்கூட சென்றவர்களில் சிலர், பிறகு பாவத்தில் விழுந்து, சாகநேரிட்டது. லேவி 10:1,2,9. அங்கே தேவனோடு ஆழமான ஓர் அனுபவத்தைப் பெற்றிருந்தபோதிலும், அந்த அனுபவத்தால் அவர்கள் மாறவோ மனமாற்றமடையவோ இல்லை. சத்தியத்தையும் இறையியல் சிலாக்கியங்களையும் பெற்றிருப்பதால் ஒருவர் மனமாறிவிடமுடியாது என்பதற்கு எவ்வளவு வல்லமையான பாடம் இது. அப்படியொரு அனுபவத்தைப் பெற்றிருந்த அந்த மனிதர்கள், அந்தப் பாவத்தைச் செய்து மடிந்துபோயிருக்கவேண்டிய அவசியமில்லை.

---

**மேன்மையான சிலாக்கியங்களைப் பெற்றிருந்த ஆரோனுடைய குமாரரின் செயல்களை யோசித்துப் பாருங்கள். அட்வென்டிஸ்டுகள்கூட அதிகமான வெளிச்சத்தைப் பெற்றிருப்பது பெரும் சிலாக்கியம்தான்; அவர்களுக்கு இதிலுள்ள எச்சரிப்பு என்ன?**

---

# கீழ்ப்படிவதற்கான வல்லமை

**நம் வாழ்க்கையில் எவ்வாறு கீழ்ப்படிதல் உண்டாகிறது? எசே 36:26-28.**

தாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதாக மூன்று தருணங்களில் இஸ்ரவேலர் வைராக்கியத்தோடு சொன்னார்கள். யாத் 19:8; 24:3,7. மனிதர்கள் பெலவீனர்கள், குறையுள்ளவர்கள், பாவிகள். இந்த வருத்தமான உண்மை பண்டைய இஸ்ரவேல் வரலாற்றில் மட்டுமல்ல, அவரது மக்கள் அனைவரின் வரலாற்றிலும் வெளிப்பட்டிருக்கிறது; இருந்தபோதிலும், அவர்கள் கீழ்ப்படியவேண்டியது அவசியமென வேதாகமம் போதிக்கிறது. அப்படியானால், தேவனுக்கு உண்மையாகக் கீழ்ப்படிவதற்கான திறனை எவ்வாறு பெறுகிறோம்?

தேவன் தாம் செய்யக் கட்டளையிடுவதைச் செய்வதற்கு நமக்கு திறனைக் கொடுக்கிறார் என்பதே நற்செய்தி. நமக்குள்ளாகவே கிடைக்காத உதவி வெளியேயிருந்து கிடைக்கிறது, தேவன் எதிர்பார்ப்பதைச் செய்ய நமக்குத் திறனளிக்கிறது. அது அவருடைய வேலை. இந்த இறையியல் கருத்தை எசேக்கியேல் தீர்க்கதரிசி எசே 36:26,27 இல் மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கிறார். தேவன்மட்டுமே இருதய மாற்றத்தைச் செய்யமுடியும்; கல்லான இருதயத்தை மாற்றி, உணர்வு மிக்க சதையான இருதயத்தைக் கொடுக்கிறார். இல்லையென்றால் யோசுவா சொல்வதுபோல, 'நீங்கள் கர்த்தருக்குத் தொடர்ந்து சேவை செய்வதென்பது இயலாதது' யோசுவா 24:19, எளிய மொழிபெயர்ப்பு.

ஆனால் தேவனைப் பின்பற்ற நாம் தீர்மானிக்கவேண்டும், அதுதான் நம் பங்கு. அவருக்கு நம்மை அர்ப்பணிப்பதற்கு ஒவ்வொரு தருணமும் தீர்மானிக்க வேண்டும். ஏனென்றால் அவரைச் சேவிப்பதற்கு நாம் சுயநினைவோடு எடுக்கிற தீர்மானத்தைக்கூட நிறைவேற்ற நாம் திறனற்றவர்கள். ஆனால் நம் பெலவீனத்தை தேவனிடம் கொடுக்கும்போது, அவர் நம்மை பெலமுள்ளவர்களாக மாற்றுவார். 'நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்' என்று பவுல் சொல்கிறார். 2கொரி 12:10. எசே 36:24-30இல் தேவனாகிய 'நான்' என்று சொல்லப்படுகிறவர், ஒன்றாகச் சேர்க்கிறார், சுத்தமாக்குகிறார், அவரது கற்பனைகளை நமக்குள் வைத்து, அவற்றின்படி கவனமாக நடக்கச்செய்கிறார். அவர் செய்வதை நீங்களும் செய்வீர்கள். அவர் உங்களைப் புரிந்திருக்கிறார், அவரோடு நீங்கள் நெருக்கமாக இணைந்திருந்தால், அவர் செய்வதையே நீங்களும் செய்வீர்கள். உங்களுக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள ஐக்கியம் செயலில் வெளிப்படுவதாக, ஆற்றல் மிக்கதாக, உயிரோட்டமானதாக இருக்கும்.

எல்லாவற்றையும் தேவனே செய்கிறார். எசே 36:27. மூலமொழியை அப்படியே மொழிபெயர்த்தால், 'நான் உங்களுக்குள் எனது ஆவியை வைப்பேன். நீங்கள் என் சட்டங்களைக் கைக்கொள்ளக் கவனமாயிருக்கவும், என் விதிமுறைகளைப் பின்பற்றவும் செய்வேன். அப்போது அதைச் செய்வீர்கள்' என்று வரும். மனிதர்களிடம் தேவன் கீழ்ப்படியச் சொல்லுகிறார், பிறகு கீழ்ப்படிவதற்கான திறனைக் கொடுக்கிறார். தேவன் தம் மக்களிடம் என்ன எதிர்பார்க்கிறாரோ, அதை அவர்கள் செய்வதற்கு உதவுகிறார். நீதிமானாக்கப்படுதலும் இரட்சிப்பும் அவரது ஈவுகளாக இருப்பதுபோலவே (பிலி 2:13), கீழ்ப்படிதலும் தேவன் கொடுக்கிற ஈவுதாம். (அது நம் செயல்திறனோ, சாதனையோ அல்ல).

---

**கீழ்ப்படிவதற்கான வல்லமை நமக்கு வாக்களிக்கப்பட்டிருந்தாலும், ஏன் பாவத்தில் எளிதாக விழுந்துவிடுகிறோம்?**

# தம் மக்களின் நடுவில்

தேவன் பல்வேறு வழிகளில் மக்களுக்கு சத்தியத்தைப் போதித்தார், அவற்றில் ஒன்றுதான் ஆசரிப்புக்கூடாரம். அதன் ஆராதனை முறைகள் அனைத்தும் இயேசுவைச் சுட்டிக்காட்டின; அவை இரட்சிப்பின் திட்டத்தின் விளக்கப் பாடங்களாக இருந்தன. அவை அனைத்தும் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இயேசுவின்மூலம் நிறைவேறவிருந்தன.

**யாத் 25:1-9இல் உள்ள மிகமுக்கியமான, நடைமுறைரீதியான, இறையியல்ரீதியான சத்தியங்கள் என்ன?**

தேவன் இஸ்ரவேலரை வழிநடத்தினார். அவர்களுக்கு மிகநெருக்கமானவராகவே இருந்தார். ஆனாலும் ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டும்படி மோசேக்குக் கட்டளையிட்டார்: 'அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக'. யாத் 25:8. தாம் அவர்களோடு இருந்ததை நேரடியாகவே அவர்களுக்குக் காட்ட விரும்பினார். பல நேரங்களில் அவர்கள் தவறு செய்திருந்தாலும்கூட, அவர்களைக் கைவிடவில்லை, 'அதன் பிறகும் பரலோகத் தயவைப்பெற்றவர்களாக எண்ணப்பட்டார்கள்'. அவர்களுக்கு தெய்வீக கட்டளை கொடுக்கப்பட்டது, ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுகிற வேலை துவங்கப்பட்டது.

மனிதர்கள் கட்டின ஆலயங்களிலும் கட்டடங்களிலும் தேவன் வாசம்பண்ணுவதில்லை, ஏனென்றால் அவர் வானாதி வானங்களைவிட பெரியவர், பரலோகமும் அவரைக் கொள்ளாது. அப் 7:47-50. அத்தேனேயில் மார்ஸ் மேடையருகே பவுல் இவ்வாறு சொன்னார்: 'உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை'. அப் 17:24. சாலொமோன் ராஜா இவ்வாறு சொல்கிறார்: 'தேவன் மெய்யாக பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?' 1இராஜா 8:27. ஜனங்களுக்கு தம் பிரசன்னத்தை வெளிப்படுத்த விரும்புகிற இடமாக ஆசரிப்புக்கூடாரத்தை நியமித்திருந்தார். அந்த ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்கு இஸ்ரவேலர்கள் மனமுவந்து காணிக்கை கொண்டுவர வேண்டியிருந்தது. அரிய, விலையுயர்ந்த காணிக்கைகளில் பொன், வெள்ளி, வெண்கலம், சித்தீம் மரம், பல்வேறு வகை மெல்லிய வஸ்திரம், ஒலிவ எண்ணெய், தூபவர்க்கங்கள் அடங்கும்.

ஆசரிப்புக்கூடாரம் மற்றும் அதன் ஆராதனைகள்பற்றி யாத் 25:10-27:21 இல் பல விவரங்கள் சொல்லப்படுகின்றன. உடன்படிக்கை பெட்டி, சமுகத்தப்ப மேஜை, குத்துவிளக்கு, பலிபீடங்கள், திரைச்சீலைகள், வண்ணங்கள், அளவுகள் என ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டி, பணிதீர்த்து முடிப்பது சம்பந்தப்பட்ட வழிகாட்டல்கள் அடங்கிய செயல்படத்தை மோசேயிடம் தேவன் கொடுத்தார்.

மோசேக்கு தேவன் காண்பித்த மாதிரியின்படியே ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டவேண்டியிருந்தது. யாத் 25:9,40; 26:30. அது பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் பிரதிபலிப்பாக இருந்தது. எபி 8:1,2; 9:11. பூலோக ஆசரிப்புக்கூடாரம் இயேசு வந்து மரிக்கிறவரையிலும் ஒரு முக்கியச் செயல்பாட்டைச் சுட்டிக்காட்டியது; அவர் பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம்செய்ய ஆரம்பித்தபிறகு, பூலோக ஆசரிப்புக்கூடாரம் பயனற்றதாக மாறியது, அந்த உண்மையைத்தான், கிறிஸ்து மரித்தபோது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக இருந்த திரைச்சீலை இரண்டாகக் கிழிந்த சம்பவம் சுட்டிக்காட்டியது. மத் 27:51, மாற்கு 15:38.

# தேவ ஆவியினால் நிரப்பினேன்

ஆசரிப்புக்கூடார ஆராதனைகளைச் செய்யவேண்டிய விதம்பற்றி ஒவ்வொரு விளக்கத்தையும் மோசேயிடம் தேவன் சொல்லியிருந்தார். ஆசாரியர்கள் ஆசாரிய வஸ்திரங்களை உடுத்தவேண்டும், பிரதான ஆசாரியன் ஏபோத் எனும் விசேஷித்த ஆடை அணியவேண்டும், அதில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள் பதிக்கப்பட்டிருந்தன. மேலும் மார்க்கவசம் ஒன்றையும் அணிந்திருந்தான், அதில் ஊரீம், தும்மீம் பதிக்கப்பட்டிருந்தன, அது எப்போதும் அவனது இருதயத்தின்மீது இருக்கவேண்டும். யாத் 28. ஆசாரியர்கள் அனைவரும் பரிசுத்தம்பண்ணப்படவேண்டும். யாத் 29. மேலும் தூபபீடம், தொட்டி, அபிஷேக எண்ணெய், தூபவர்க்கம் போன்ற பிற பொருட்களையும் கவனமாக ஆயத்தம்செய்ய வேண்டும்.

**ஆசரிப்புக் கூடாரத்தின் அனைத்து விவரங்களும் அது தொடர்பான ஆராதனைகளும் சரியாகவும் நேர்த்தியாகவும் நடைபெறுவதற்காக தேவன் என்ன விசேஷித்த உதவியைச் செய்தார்? யாத் 31:1-18.**

தேவன் ஒருவரை தம் ஆவியால் நிரப்பினதாக வேதாகமம் இங்குதான் முதன்முறையாகச் சொல்கிறது. அதன் அர்த்தம் என்ன? ஆசரிப்புக்கூடார வேலைகளை கலைநயத்துடன் செய்வதற்கு தேவையான திறமையை பெசலெயேலுக்குக் கொடுத்தார். புதிய திறன்கள், புத்தி, அந்தக் கைவேலையைச் செய்வதற்கான அறிவு ஆகியவற்றால் அவரை நிரப்பினார், அதாவது பெலப்படுத்தினார். மேலும், அவருக்கு உதவிசெய்வதற்கு அகோலியாபுக்கும் இன்னும் பல வேலையாட்களுக்கும் அதே ஆவியை அருளினார்.

இவ்வாறு கலைநய வேலைகள்பற்றிப் பேசப்படும் போதுதான், தேவன் பரிசுத்தமாக்கின ஓய்வுநாளானது தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையே ஓர் அடையாளமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதாவது, நான்காம் கற்பனையைக் கைக்கொள்வது பரிசுத்தமாக்கப்படுதலுடன் சம்பந்தப்பட்டது. பின்னர் வந்த எசேக்கியேல் இவ்வாறு சொன்னார்: 'நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்.' எசே 20:12.

ஆண்டவர் நம் சிருஷ்டிகர் (ஆதி 2:2,3), மீட்பர், தேவன் (உபா 5:15; மாற்கு 2:27,28) மட்டுமல்ல, அவர் பரிசுத்தரும்கூட என்று ஓய்வுநாள் ஞாபகப்படுத்துகிறது. அவர் தம் பிரசன்னத்தால் மக்களைப் பரிசுத்தப்படுத்துகிறார்; அவரது ஆவியாலும் வார்த்தையாலும் அன்பும் இரக்கமும் சுயநலமின்மையும் மன்னிக்கிற குணமும் உள்ள குணத்தைப் பிரதிபலிக்கிறவர்களாக வளர்கிறார்கள். மோசேக்கு தேவன் கொடுத்த உச்சக்கட்ட ஈவு பத்துக்கற்பனை. யாத் 31:18. அந்த இரண்டு கற்பலகைகளிலும் தேவன்தாமே பத்துக்கற்பனைகளை எழுதிக் கொடுத்தார். யாத் 31:18; உபா 9:9-11. அந்தக் கற்பலகைகளை மகா பரிசுத்த ஸ்தலத்தில் கிருபாசனத்திற்குக்கீழிருந்த உடன்படிக்கை பெட்டிக்குள் வைத்தார்கள். யாத் 25:21.

---

**'கிருபாசனம்' என்பதற்கான எபிரெய வார்த்தை 'நிவிர்த்திசெய்ய' என்பதற்கான வார்த்தையிலிருந்து வந்ததாகும். அப்படியானால் இந்தக் 'கிருபாசனம்' ஏன் தேவபிரமாணத்திற்கு மேலாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்? இந்த உண்மையிலிருந்து நாம் என்ன நம்பிக்கையைப் பெறலாம்?**

# மேலும் படிக்க:

தேவமக்கள் அறிக்கையிட்ட பாவங்கள் நிவிர்த்தியாகிற விசேஷித்த இடமாக ஆசரிப்புக்கூடாரம் இருந்தது. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருந்தபோது, அந்த இடத்தில்தான் இரட்சிப்பின் திட்டம் ஓரளவுக்கு விளக்கமாக அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், நியாயத்தீர்ப்பு போன்றவைபற்றி அங்கே போதிக்கப்பட்டன. ஒவ்வொரு மிருகப்பலியும் இயேசுவின் மரணத்தையும், பாவமன்னிப்பையும், இறுதியாக பாவம் முற்றிலும் அகற்றப்படுவதையும் சுட்டிக்காட்டின. மேலும், பலிகள் இடப்பட்ட அந்த இடத்தில்தான் தேவனுடைய நீதியின் தரமான அவரது பிரமாணமும் இருந்தது.

உடன்படிக்கை பெட்டிக்குள்ளாக இருந்த தேவபிரமாணம்தான் நீதி, நியாயத்தீர்ப்பு குறித்த மகத்தான சட்டமாக இருந்தது. மீறுதலின் தண்டனை மரணம் என்று அந்தப் பிரமாணம் போதித்தது; ஆனால் அந்தப் பிரமாணத்திற்கு மேலாக கிருபாசனம் இருந்தது, அதின்மேலே தேவபிரசன்னம் வெளிப்பட்டது, அதிலிருந்துதான் பாவநிவாரணத்தின் பலனாக மனந்திரும்புகிற பாவிக்கு மன்னிப்பு அருளப்பட்டது. இவ்வாறு நம் மீட்புக்காக கிறிஸ்து செய்த கிரியையில், ஆசரிப்புக்கூடார ஆராதனை அடையாளமாகக் காட்டினபடி 'கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.' சங் 85:10.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *'தேவன் சொன்னபடியெல்லாம் செய்வேன்' என்று எத்தனைமுறை சொல்லியிருப்பீர்கள்? உங்கள் முயற்சிகளில் எவ்வளவு தூரம் வெற்றிபெற முடிந்தது?*

2. *சீனாய்மலையில் தேவனோடு 40 நாட்கள் தங்கியிருந்தபிறகு, இஸ்ரவேலர் தம்முடைய ஓய்வுநாளைக் கைக்கொள்ளவேண்டும் என்றும், தாமே அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிற தேவன் என்பதை அவர்கள் அறியும்படிக்கு அது அவர்களுக்கும் தமக்கும் ஓர் அடையாளமாக இருக்கிறது என்றும் சொன்னார். ஓய்வுநாளைக் கைக்கொள்வதில் பரிசுத்தமும் பரிசுத்தமாக்கப்படுதலும் என்ன பங்காற்றுகின்றன?*

3. *'அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண' எனக்கு ஒரு ஆசரிப்புக்கூடாரம் கட்டவேண்டும் என்று தேவன் சொன்னார். இஸ்ரவேலருக்கு அது இரட்சிப்பைச் சுட்டிக்காட்டுகிற இடமாக இருந்தது. தேவன் வாசம்பண்ணின அந்தக் கூடாரத்தில்தான் இரட்சிப்பின் திட்டமானது அடையாளங்களாலும் நிழல்களாலும் வெளிப்படுத்தப்பட்டது. இரட்சிப்புக்காக நாம் முற்றிலும் தேவனையே சார்ந்திருப்பதுபற்றி இது என்ன சொல்கிறது?*

3. *அவர்களுடைய பாவங்கள் அனைத்தும் இரத்தத்தின்மூலம் தேவனுடைய வீடாகிய ஆசரிப்புக்கூடாரத்திற்குள் கொண்டுவரப்பட்டன என்பதின் அர்த்தம் என்ன? சிலுவையில் இயேசு நமக்காகச் செய்ததையும், பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் தற்போது நமக்காக அவர் செய்துவருவதையும் இந்த ஆச்சரியமான உண்மை எவ்வாறு சிறிதளவாவது பிரதிபலிக்கிறது?*



# விசுவாசத்துரோகமும் பரிந்துபேசுதலும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 32:1–6; சங் 115:4–8; ஏசா 44:9, 10; ரோமர் 1:22–27; யாத் 32:7–32; ஏசா 53:4.

**மனன வசனம்:** அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான். யாத் 32:31, 32.

மோசே இஸ்ரவேலரின் பாளயத்தைவிட்டுப் போய், 40 நாட்கள்தாம் ஆகியிருந்தன. ஆனால் நடந்தது என்ன? தேவமக்கள் அவரைவிட்டு விலகி, மனிதர்கள்செய்த விக்கிரகமாகிய ஒரு பொன்கன்றுக்குட்டியைத்தொழுதார்கள். மகத்துவமிக்க பல அடையாளங்களையும் அனுபவங்களையும் அற்புதங்களையும் பெற்றிருந்த நிலையில், அவர்களால் எவ்வாறு இப்படிச் செய்யமுடிந்தது?

பல பதில்களைச் சொல்லலாம், சில பதில்களில் உணமையும் இருக்கும். தேவன் யார் என்பதை மக்கள் புரியாதவர்களாக இருந்தார்களா? அல்லது, அவர்மூலமாகப் பெற்ற வல்லமையான அனுபவங்களுக்கும் மேலாக பாவ ஆசைகள் அவர்களை ஆட்கொண்டிருந்தனவா? தேவன் தங்களுக்காகச் செய்திருந்ததை நன்றியோடு நினைவுகூராமல், தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டார்களா? அனுதின கவலைகளாலும் பாவ எண்ணங்களாலும் அவர்களது அறிவு மங்கி, செயலிழந்துபோனதா? தேவன் தங்களுக்காகச் செய்த கிருபையான செயல்களுக்கு நன்றியில்லாமல் போனார்களா? தேவனுடைய மகத்துவமான செயல்களை சீக்கிரமே மறந்துவிட்டார்களா? சங் 106:13,21-23. அல்லது ஆரோனின் மோசமான தலைமைத்தான் அதற்கு காரணமா? 'ஆரோன்மேலும் கர்த்தர் மிகவும் கோபங்கொண்டு, அவனை அழிக்கவேண்டும் என்றிருந்தார்.' உபா 9:20.

இந்த மோசமான விசுவாசத் துரோகத்திற்கான காரணம் என்னவாக இருந்தாலும், மனிதர்களின் பாவநிலையிலும் அவர்கள்மீது தேவன் கிருபையாக அன்புகூருவதுபற்றியும் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?

*2025 செப்டம்பர் 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தலைமைத்துவத் தோல்வி

மோசேயுடன் நேரம் செலவிடுவதற்காக அவரை தேவன் அழைத்தார். நாற்பது நாள் இரவும் பகலும் மோசேக்கு கொஞ்ச நேரமாகத்தான் இருந்திருக்க வேண்டும், ஆனால் இஸ்ரவேலருக்கு அது மிகமிக நீண்டகாலமாகத் தோன்றியது. தாங்கள் கண்ட தலைவர் இல்லை. ஒழுக்கமிழந்தார்கள்; பொறுமையிழந்தார்கள்; பயந்தார்கள்; பாதுகாப்பற்றவர்களாக உணர்ந்தார்கள். அதனால் தங்களை வழி நடத்தும்படி தாங்கள் காணக்கூடிய ஒரு கடவுள் வேண்டுமென விரும்பினார்கள். விக்கிரகாராதனை நிறைந்த எகிப்தில் தங்கள் வாழ்நாள்முழுதும் கண்டிருந்த 'தெய்வங்கள்' வேண்டுமென ஆசைப்பட்டார்கள்.

**ஆரோனின் தலைமைத்துவம் இவ்வளவுக்கு மோசமாவது எப்படிச் சாத்திய மானது? யாத் 32:1-6.**

அவசியமான நேரத்தில், சரியானதைச் செய்யவேண்டிய நேரத்தில் ஆரோன் தனக்குக் கிடைத்த வாய்ப்பைத் தவறவிட்டார். தேவனை நம்புவதற்குப் பதிலாக தீமைசெய்ய திரளானபேரைப் பின்பற்றிவிட்டார். யோசித்துப்பார்க்க முடியாத ஒரு கோரிக்கையை மக்கள் வைத்தார்கள்: 'நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்' என்றார்கள். அதற்குச் சம்மதித் தார். யாத் 32:1. சிலைசெய்வதற்கு மக்கள் மனமுவந்து பொன் கொடுத்தார்கள், தடுத்திருக்க வேண்டிய ஆரோன், அவர்களிடம் கொடுக்கும்படி சொன்னார். பிறகு அந்தப் பொய்த்தெய்வத்தை வார்ப்பிக்கிற வேலையில் பங்கேற்றார். அதன்பிறகு மக்கள், 'இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே' என்று சொன்னார்கள். யாத் 32:4. அவ் வளவுக்கு பாவமும், துன்மார்க்கமும் காணப்பட்டன. விக்கிரகத்தை வார்ப்பித்து, அதுதான் தங்களை விடுவித்தது என்றார்கள். பாவகரமான ஆசைகள் நம் சிந்தை யையும் செயல்களையும் எவ்வளவு தூரம் புரட்டிவிடும் என்பது புரிகிறதா? மக்கள் தங்களுடைய சொந்தப்படைப்புகளை கொண்டாடி மகிழ்ந்தார்கள், அந்தச் செயல் முறையில் அவர்களது மனிததன்மையும், ஒழுக்கத்தன்மையும் சீர்கெட்டது.

அப்படிப்பட்ட ஒரு நெருக்கடியில் உறுதியும், தீர்மானமும், தளராத தைரிய மும் உடைய ஒரு நபராக ஆரோன் இருந்திருக்கவேண்டும்; மற்றவர்களுக்குப் பிடித்த விஷயத்திற்கும், தனிப்பட்ட பாதுகாப்பிற்கும், உயிருக்கும்மேலாக தேவ னுடையகனத்தை மதிப்பவராகஇருந்திருக்கவேண்டும். ஆனால்இஸ்ரவேலருக்கு அப்போது தலைவராக இருந்தவர் அப்படிப்பட்ட குணமுடையவராக இல்லை. ஆரோன் மக்களிடம் இருமனதோடு வாதம்செய்தார், அவரது பெலவீனமும் தடு மாற்றமும் மக்களை அதில் அதிக தீர்மானமடையச் செய்தது. அமளி அதிகரித்தது. மக்களை குருட்டாட்டமான மனநிலை ஆட்கொண்டது. தேவனோடு செய்த உடன் படிக்கைக்கு உண்மையாக இருந்த சிலரும் அங்கிருந்தார்கள். ஆனால் மக்களில் பெரும்பாலானவர்கள் அந்த விசுவாசத் துரோகத்தில் பங்கேற்றார்கள். ஆரோன் தன் சொந்த பாதுகாப்பை நினைத்துப் பயந்தார்; தேவனுடைய கனத்திற்காக நேர்மையுடன் நிற்பதற்கு பதிலாக, பெருந்திரளானவர்களுடைய கோரிக்கை களுக்கு இணங்கினார்.

---

**ஒரு தலைவரான ஆரோனால் எவ்வாறு இவ்வளவு பெலவீனமாக மாறமுடிந்தது? தன் மோசமான செயல்களுக்கு ஆரோன் தன் இருதயத்தில் என்ன சாக்குப்போக்குகளைச் சொல்லியிருக்கவேண்டும்?**

# விக்கிரகாராதனையும் தீமையும்

**விக்கிரகாராதனை உடனடியாக எதற்குள் அவர்களை வழிநடத்தினது? யாத் 32:6; சங் 115:4-8; 135:15-18; ஏசா 44:9, 10.**

---

ஏபிஸ் எனப்படும் எகிப்திய காளை தெய்வம் அல்லது ஹதோர் எனப்படும் பசுத்தெய்வதிற்கு ஒத்ததாக பொன் கன்றுகுட்டி இருந்தது. இது முதலாம், இரண்டாம் கற்பனைகளைத் துணிகரமாக மீறுவதாக இருந்தது. யாத் 20:3-6. இந்த மீறுதல் ஜீவனுள்ள தேவனோடுள்ள அவர்களது உறவை முறித்ததால், தண்டனைக்குரியதாக இருந்தது. இஸ்ரவேலர் தங்கள் சிருஷ்டிப்பு தேவனைத் தொழுவதற்கு பதிலாக பார்க்கவும் கேட்கவும், முகரவும், அக்கறைகாட்டவும், அன்புகூரவும், வழிநடத்தவும் முடியாத தங்கள் சொந்தப் படைப்பைத் தொழுதார்கள்.

சிருஷ்டிப்பு ஒழுங்கை நேரெதிராக மாற்றினார்கள். அதாவது, தாங்கள் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டதைப் புரிந்திருப்பதற்கு பதிலாக, தாங்களாக ஒரு கடவுளை உருவாக்கினார்கள், ஒருவேளை தங்களுடைய சாயலில் உருவாக்கியிருந்தால், அது இன்னமும் மோசமாக இருந்திருக்கும், ஆனால் ஒரு மிருகத்தின் சாயலில் உருவாக்கினார்கள். இந்தக்கடவுளையா தொழுதுகொள்ள விரும்பினார்கள்? இவ்வாறு தேவனுக்கு எதிராக மிகப்பெரிய பாவம் செய்தார்கள். ஏசா 31:7; 42:17.

**பொன் கன்றுக்குட்டி விசுவாசத்துரோகமானது எந்தெந்த வழிகளில் ரோமர் 1:22-27ஐப் பிரதிபலிக்கிறது?**

'தேவன்மட்டுமே தேவன், மனிதன் மனிதன்தான்' என்கிற இறையியல் கருத்தை விக்கிரகாராதனை மறுக்கிறது. விக்கிரகவழிபாடானது தேவனுக்கும் மனிதனுக்கும் வித்தியாசமே இல்லாததுபோலச் செய்கிறது. விக்கிரகாராதனை துணிகரமாமானது; வெளிப்படையாக அல்லது இருதயத்தில் மறைவானதாக என எப்படி வெளிப்பட்டாலும், அது தேவனோடு நமக்குள்ள உறவை உடனடியாக உடைத்து, ஒழுக்கரீதியாக நம்மைக் கீழ்நோக்கிச்செல்ல வைக்கிறது. அதனால்தான் அதற்கு அடுத்த நாளில் அவர்கள் என்ன செய்தார்களென வேதாகமம் சொல்வதில் ஆச்சரியமில்லை: அந்த விக்கிரகத்திற்கு பலிசெலுத்திய பிறகு, அவர்கள் கொண்டாடத் துவங்கினார்கள்; அதாவது, 'எகிப்தின் விக்கிரகாராதனை பண்டிகைகளில் செய்வதுபோல' கொண்டாடினதாக எலன் ஒய்ட் சொல்கிறார்.

மனிதர்கள் தங்கள் சொந்த விக்கிரகங்களைச் செய்வதில் மேதைகள். தங்கள் சொந்த கடவுள்களை உருவாக்குகிறார்கள், அதுவே மோசமானது, அந்நிலையில் அந்தத் தெய்வங்களைத் தொழுதும்கொள்கிறார்கள். சிருஷ்டிகரின் இடத்தில் வேறே பொருட்களை வைப்பதால், அது சீக்கிரமே ஒழுக்கச் சீர்கேட்டிற்கு வழி நடத்துகிறது.

---

**மனிதர்கள் இன்று எவ்வாறெல்லாம் சிருஷ்டிகருக்கு பதிலாக சிருஷ்டியைத் தொழுதுகொள்கிறார்கள்?**

# தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்

**தேவன் எதற்காக மோசேயை மீண்டும் இஸ்ரவேலரின் பாளயத்திற்கு அனுப்பி வைத்தார்? யாத் 32:7,8.**

இஸ்ரவேலர்கள் விக்கிரகத்தைத் தொழுததின்நிமித்தம், எகிப்திலிருந்து தங் களை விடுவித்த மெய்யான தேவனிடமிருந்து உறவை முறித்தார்கள். அதி னிமித்தம் ஆண்டவர் அவர்களைக் குற்றஞ்சாட்டுகிறார்; அந்த விக்கிரகம் தங் களை எகிப்திலிருந்து விடுவித்ததாகச் சொன்னதால், அவர்கள் 'தங்களைக் கெடுத் துக்கொண்டார்கள்.' யாத் 32:7. தேவன் சொன்னதிற்கு எவ்வளவு தூரம் நேர் மாறாகச் செயல்பட்டார்கள் பாருங்கள்! யாத் 20:2! தேவனுடைய பிரசன்னத்தை யும் மகத்தான செயல்களையும் மறுத்தது மிகப்பெரிய குற்றம். அவர்களது எண் ணங்களும் உணர்வுகளும் சிதைந்து, முற்றிலும் சீர்கெட்டன.

விக்கிரகாராதனையே தேவமக்களின் சகலவித இக்கட்டிற்கும் அடிப் படைகாரணம் என்றும், அதுவே சகல பாவங்களுக்கும் பிறப்பிடம் என்றும் எசேக் கியேல் தீர்க்கதரிசி சொல்கிறார். எசே 8:1-18; 20:1-44; 22:1-12. மனிதர்கள் செய்த விக்கிரகங்களை வணங்குமளவிற்கு முற்கால விசுவாசிகள் எப்படி அறி வில்லாமல், திருந்தாத ஜனங்களாக இருந்தார்கள் என்று நாம் யோசிக்கலாம். நாமெல்லாம் அப்படிச் செய்ய வாய்ப்பில்லை என்றுகூட நினைக்கலாம். ஆனால் நம்மிடம் விக்கிரகங்கள் இல்லையா? இன்று நாம் பல விதங்களில், பல வடிவங் களில் விக்கிரகங்களை வைத்திருக்கலாம், எல்லாம் ஒன்றுதான்.

தேவனுடைய இடத்தில் எதை வைத்தாலும் அது விக்கிரகம், நாம் செய்வது சரியா, தவறா என்று தெரியாமல்கூட அவற்றைத் தொழுகிறோம்; மீண்டும்மீண் டும் தொழுகிறோம். அது தேவனைவிட அதிகமாக நம் சிந்தை, பற்று, நேரம், மனது ஆகியவற்றை ஆக்கிரமிக்கிறது. நாம் எதைப் பார்க்கிறோமோ அப் படியே மாறுகிறோம், நாம் தொழுகிற 'கடவுள்' எதுவோ அந்த அளவுக்குத்தான் நம் நிலை இருக்கும்.

தேவன் உங்கள் வாழ்க்கையின் மையமாக இல்லாவிட்டால், பிற தெய்வங் கள் அவரது இடத்தைப் பிடித்துக்கொள்ளும். தேவனுடைய ஜீவனுள்ள பிரசன் னத்தை நாம் அனுபவித்து, பேணிப்போற்றாவிட்டால், வேறு யாராவது அல்லது ஏதாவது ஒன்றின்மீது பிரியம் வைப்போம், அர்ப்பணிப்பைக் காட்டுவோம். கிறிஸ்துவின் இடத்தை நாம் பல விஷயங்களுக்குக் கொடுக்கலாம்: உதாரணமாக அகந்தை, சுயநலநாட்டம், பணம், அதிகாரம், பாலுறவு, உணவு, தொலைக் காட்சி, போதைமருந்துகள், மதுபானம், தீய எண்ணங்கள், ஆபாசப்படங்கள், இன்பங்கள், வேலை, விளையாட்டுகள், குடும்பம், காணொளி விளையாட்டு கள், திரைப்படங்கள், பொருள் நுகர்வு, கருத்துகள், அரசியல், இசை, பதவி, பட்டங்கள், படிப்புகள் போன்றவை. இந்தப் பட்டியலுக்கு முடிவே கிடையாது.

இந்த விஷயத்தில் நம் ஆக்கத்திறனுக்கும் கண்டுபிடிப்புத் திறனுக்கும் எல்லையே இல்லை. நல்ல, அழகான, அர்த்தமிக்க எந்த விஷயத்தையும் நாம் ஒரு விக்கிரகமாக மாற்றமுடியும். விக்கிரகாராதனை மிகமிக ஆபத்தானது, ஏனென்றால் அது நம் ஆளுமையையும், பற்றுகளையும் சமுதாய வாழ்க்கையை யும் மாற்றுகிறது. அது நம் அடையாளத்தை மாற்றி, உண்மையான தனிப்பட்ட உறவுகளுக்கு பதிலாக அர்த்தமற்ற உறவுகளுக்கு இடமளிக்கச் செய்கிறது, அவற்றால் இறுதியில் நம்மைக் காப்பாற்றமுடியாது.

# தேவனுடைய நீதியான கோபம்

**இஸ்ரவேலை அழிக்கப்போவதாக தேவன் மிரட்டியதும் மோசேயின் எதிர்வினை என்ன? யாத் 32:9-29.**

மோசே இன்னும் சீனாய் மலைமேல் இருக்கையில், கலகம் செய்தவர்களை தாம் அழித்து, மோசேயின் சந்ததியை ஒரு பெரிய தேசமாக்க விரும்புவதாக தேவன் சொன்னார். ஆனால் மோசே அதை விரும்பவில்லை. மாறாக, இஸ்ரவேலர் மோசேயின் மக்கள் அல்லவென்றும், தேவனுடைய மக்கள் என்றும் சுட்டிக்காட்டினார். அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவந்ததும் மோசே அல்ல, மாறாக தேவன் தமது மகத்துவ கிரியைகள்மூலம் அதைச் செய்தார். அதனால், தேவன் முற்பிதாக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைச் சொல்லி, தேவனிடம் மோசே மன்றாடினார். அங்கே தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையே மத்தியஸ்தராக மோசே செயல்பட்டார்.

'கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்ட' பிறகு, மோசே அவர்களிடத்திற்குத் திரும்பிச் சென்றார். யாத் 32:14. தேவனுடைய பிரசன்னத்திலிருந்து வந்ததால், அவரது முகம் பிரகாசித்ததாக எந்தக் குறிப்பும் இல்லை. ஆனால் யாத் 34:29,30இல், அவர் முகம் பிரகாசித்தது. இங்கே அவரது முகத்தில் கோபம் தெரிந்திருக்கலாம்.

'அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டான்.' யாத் 32:19. பத்துக் கற்பனைகள் அடங்கிய கற்பலகைகளை உடைப்பது, அவற்றில் எழுதப்பட்டிருந்தவற்றை மீறினதைச் சுட்டிக்காட்டுகிற அடையாளமாக இருந்தது. அதற்காக மோசேயை தேவன் கடிந்துகொண்டார்; பிறகு அவர் 'உடைத்துப்போட்ட முந்தின பலகைகளுக்கு' ஒத்த பலகைகளை வெட்டும்படி சொன்னார். உபா 10:2. தேவன்தாமே அந்தக் கட்டளைகளை மீண்டும் எழுதவிருந்தார்.

மக்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்கினதற்காக ஆரோனை மோசே வன்மையாகக் கண்டித்தார். 'நீ இந்த ஜனங்கள்மேல் இந்தப் பெரும்பாதகத்தைச் சுமத்துகிறதற்கு, இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள்?'. யாத் 32:21. ஆரோன் தன் மீறுதலுக்கு எவ்வாறு சாக்குப்போக்குச் சொன்னார்: 1) மற்றவர்கள்மீது பழிபோடுதல், 2) மாயாஜாலம்: 'அதை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது.' யாத் 32:24. ஆரோன் தேவனிடத்தில் கனம்பெற்றிருந்தவர்; பல சிலாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருந்தது; மோசே மற்றும் 70 மூப்பர்களுடன் மலைமேல் சென்றதும் அதில் ஒன்று. யாத் 24:1. எவ்வளவு பெரிய முரண்பாடு! அற்புதம் நிகழ்ந்ததாகச் சொல்லி, தன் சகோதரனை ஏமாற்ற ஆரோன் முயற்சிக்கிறார். ஒரு பாவம் இன்னொரு பாவத்திற்கு வழிநடத்துகிறது, இங்கே விக்கிரகவழிபாடு பொய்சொல்ல வைக்கிறது. ஆனால் மக்கள் நடந்துகொண்ட விதமே உண்மையைச் சொல்லிற்று. அது மிகமோசமான விளைவுகளை உண்டாக்கும் என்பதால், அந்தக் கலகத்தை மோசே உடனடியாக நிறுத்தவேண்டியிருந்தது.

---

**பரிந்துபேசுதலின் ஜெபத்தின் வல்லமைபற்றி இந்தச் சம்பவம் என்ன போதிக்கிறது? தற்சமயம் நீங்கள் யாருக்காக இவ்வாறு ஜெபிக்க வேண்டியுள்ளது?**

# பரிந்துபேசுதல்

**பாவிகளுக்காக மோசே எவ்வளவு தூரம் பரிந்துபேசி ஜெபிக்கிறார்? யாத் 32:30-32.**

இஸ்ரவேலரின் கலகத்தின்நிமித்தம் அவர்களது பாளயத்தில் பயங்கரமான சம்பவங்கள் நிகழ்ந்தன, பலர் மரிக்கவும் நேரிட்டது. யாத் 32:28. அடுத்த நாள், மக்களிடம் மோசே, 'நீங்கள் மகா பெரிய பாவஞ்செய்தீர்கள்; உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப்போகிறேன்' என்று சொன்னார். யாத் 32:30.

'அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்.' யாத் 32:31,32.

கிறிஸ்துவின் மாதிரியாக மோசே இருப்பதாகச் சொல்வதில் ஆச்சரியமில்லை! பாவிகளுக்காகப் பரிந்துபேசி ஜெபித்தார், அவர்களுக்காக தன் உயிரையும் கொடுக்க சித்தமாயிருந்தார்; எனவே, கிறிஸ்து நம் அனைவருக்காகவும் செய்ய விரும்பியதைக் காட்டுகிற ஒரு மாதிரியாக மோசே இருக்கிறார். அக்கிரமக்காரர்மீது எவ்வளவு தூரம் மனதுருகவேண்டும் என்பதற்கு எத்தகைய ஒரு எடுத்துக்காட்டு! தேவன்மீது முழு அர்ப்பணிப்பும், மக்கள்மீது தற்தியாக அன்பும் உடையவராகக் காணப்பட்டார். இந்தக் குறிப்பிட்ட நேரத்தில், மோசே எத்தனை நாள் தேவனோடு அந்த மலையில் தங்கியிருந்தார் என்று யாத்திராகமம் சொல்லவில்லை. ஆனால் அந்தச் சமயத்தில் அவர் 40 நாட்கள் சீனாய் மலையில் இருந்ததாக உபாகமம் கூறுகிறது. உபா 9:18.

யாத் 32:32இல், 'மன்னித்தருளும்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை, 'தாங்கு' அல்லது 'சும' எனும் அர்த்தமுடைய ஒரு வினைச்சொல்லிலிருந்து வந்ததாகும். ஏசாயா 53:4 இயேசுவைப்பற்றி, 'மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டார்' என்று சொல்கிறது. யாத் 32:32இல் வருகிற 'மன்னித்தருளும்' என்கிற அதே வார்த்தைதான் ஏசா 53:4இல் 'சுமந்தார்' என்று வருகிறது. இரட்சிப்புக்கும் மன்னிப்புக்கும் தேவன் நம்மைக் காப்பாற்றுவதற்கும் எவ்வளவு பெரிய விலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இது காட்டுகிறது. மோசே தேவனிடம் மக்களுடைய பாவத்தை 'சுமக்கும்படி' கேட்கிறார்; உண்மையில், ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு பின்னர் அதைத்தான் ஆண்டவர் செய்யவிருந்தார். யாத் 32:32இல் பாவநிவாரண பலிகுறித்த கருத்து மட்டுமல்ல, யார் தம்மைப் பலியாக்கினார் என்பதும் சொல்லப்படுகிறது: அது தேவன்தாம். எவ்வாறு பாவமன்னிப்பு வருகிறதென இந்த வசனம் காட்டுகிறது. தேவன் கிறிஸ்துவுக்குள் நம்முடைய பாவங்களைச் சுமந்தார், அதுவே அவர்கள் மன்னிக்கப்படுவதற்கான ஒரே வழியாக இருந்தது. நம்மை இரட்சிப்பதற்கு தேவன் செலுத்தவேண்டியிருந்த விலையை இது எவ்வளவு வல்லமையாக எடுத்துக்காட்டுகிறது!

---

**தேவனே மக்களுடைய பாவங்களைச் சுமக்கும்படி மோசே கேட்கிறார். இறுதியில், இயேசுவில் அதையே தேவன் செய்கிறார். இந்த அற்புதமான சத்தியத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? விழுந்துபோன மனிதர்கள்மீது தேவன் வைத்திருக்கிற அன்புபற்றி இது என்ன சொல்கிறது?**

# மேலும் படிக்க:

விசுவாசிகளுக்குள் தேவன் கிரியைசெய்வதுபற்றி இந்த வாரப்பாடம் பேசுகிறது. 'நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்' தேவன் நமக்குள்ளாகக் கிரியை செய்யமுடியும். எபே **3:20.** நம் கவனம் நம்மீதே இருக்கக்கூடாது, நம் தனிப்பட்ட ஆசைகளை நிறைவேற்ற நாடக்கூடாது, ஏனென்றால் இது சிலைவழிபாட்டிற்கு வழிநடத்துகிறது. மாறாக, தேவன்மீதும் அவரது வல்லமையின்மீதும் நம் கவனம் இருக்கவேண்டும். அவர் பெலத்தைக் கொடுக்கிறார். அது ஒரு புதிய, வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழிநடத்துகிறது. பிலி **4:13;** யூதா **1:24,25.**

இந்தப் பாவம் தண்டிக்கப்படவேண்டும் என்பது நியாயத்தின் கோரிக்கை மட்டுமல்ல, அன்பின் கோரிக்கையாகவும் இருந்தது. தேவன்தாம் தம் மக்களின் பாதுகாவலராகவும் அரசராகவும் இருக்கிறார். அவர்கள் மற்றவர்களையும் அழிவுக்குள் நடத்தாதபடிக்கு கலகம் செய்கிறவர்களை அழிப்பதில் தீர்மானமாக இருக்கிறார். காயீனைக் கொல்லாமல் தப்பவிட்டு, பாவத்தைத் தண்டிக்காமல் விட்டால் என்ன விளைவு உண்டாகும் என்பதை பிரபஞ்சத்திற்கு தேவன் எடுத்துக்காட்டியிருந்தார். அவன் தன் வாழ்க்கையாலும் செல்வாக்காலும் தன் சந்ததியார்மீது ஏற்படுத்தியிருந்த தாக்கமானது, உலகம் முழுவதையும் வெள்ளத்தால் அழிக்கிற அளவுக்குக் கொண்டுபோனது. மனிதர்கள் எவ்வளவு நீண்டகாலம் வாழ்ந்தார்களோ, அவ்வளவுக்கு சீர்கேடானவர்களாக மாறினார்கள். சீனாயின் விசுவாசத்துரோகத்திலும் இதுதான் உண்மையாக இருந்தது. மீறுதலுக்கு உடனடியாக தண்டனை கொடுக்காவிட்டால், அதே விளைவுகளைத்தான் மீண்டும் பார்க்கவேண்டியதிருக்கும்.'[1]

[1] Ellen G. White, Patriarchs and Prophets, p. 325

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *திங்கள்கிழமை ஆராய்ச்சியின் கடைசிக்கேள்விபற்றி அதிகமாகத் தியானியுங்கள். நாம் எந்தெந்த வழிகளில் சிருஷ்டிகரைத் தொழாமல், சிருஷ்டியைத் தொழ வாய்ப்புள்ளது? உதாரணமாக, நாம் பூமியைத் தொழாமல் அல்லது அதை ஒரு விக்கிரகமாக மாற்றாமல், பூமியின் நல்ல உக்கிராணக்காரர்களாகவும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பவர்களாகவும் எவ்வாறு திகழலாம்?*

2. *ஒரு செயலின் விளைவுகளையும் முடிவுகளையும் வைத்தும், அல்லது அந்த நிகழ்வுக்கான எதிர்வினையின் தீவிரத்தை வைத்தும் அந்தச் சூழ்நிலை எவ்வளவு தீவிரமானது என்பதை அறியலாம். மனந்திரும்பாமல் அடம்பிடித்து, தேவனுக்கும் அவரது போதனைக்கும் எதிராகக் கலகம்செய்தவர்களைக் கொல்லும்படிக்கு மோசே ஏன் கட்டளையிட்டார்?*

3. *ஒருவருக்காக இன்னொருவர் மரிப்பதுமட்டுமே எவ்வாறு சரியான பாவநிவாரண பலி? சுவிசேஷம் வலியுறுத்துகிற பதிலாள் மரணக்கருத்தை மறுக்கிற அல்லது குறைத்துக்காட்டுகிற எந்தக் கோட்பாடும் ஏன் தவறான இறையியல் கருத்தாக இருக்கிறது? இயேசுவே நமக்குப் பதிலாக மரித்தார் என்பதை 1பேதுரு 2:24 எவ்வாறு வல்லமையாக எடுத்துக் காட்டுகிறது?*



# உம் மகிமையை எனக்குக் காண்பித்தருளும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 33:7–34:35; உபா 18:15,18; யோவான் 17:3; ரோமர் 2:4; யோவான் 3:16; 2கொரி 3:18.

**மனன வசனம்:** கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார். யாத் 34:6,7.

தேவனோடுள்ள உறவில் அனைவரும் வளரவேண்டியது அவசியம். 'நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்' என்று பேதுரு அப்போஸ்தலன் கூறுகிறார். 2பேதுரு 3:18. வளரவேண்டும் என்கிற ஆசை நமக்கு வேண்டும். நாம் அனுதினமும் தேவனுடைய பல்கலைக்கழகத்தில் பயில்கிறோம், அங்கே பட்டமளிப்பு விழாவெல்லாம் கிடையாது, ஆனால் கற்றுக்கொள்கிற செயல்முறை நடந்துகொண்டே இருக்கும். வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களை எப்படிபட்ட நபராக இருக்க அழைத்திருக்கிறாரோ அவ்வாறு வனைவதற்கு அவரை அனுமதித்தால் பூரணர்களாக மாறமுடியும்.

பள்ளிக்கூடத்தை எடுத்துக்கொள்வோம். முதலாம் வகுப்பில், வாசிக்கவும், 100 வரை எண்ணவும் கற்றால் போதும் தேர்ச்சி பெறலாம்; ஏனென்றால், அந்த வயதில், அவர்களுக்கு இருக்கிற வளர்ச்சிக்கு அது போதுமானது. ஆனாலும் மேல்நிலை வகுப்புக்குச் சென்றபிறகும் அதே அளவு அறிவே இருந்தால், அவர் தேர்ச்சிப்பெறுவதற்கு தகுதியற்றவராக எண்ணப்படுவார். தேவனைக் குறித்த அறிவு மற்றும் கிருபையில் நம் வளர்ச்சிக்கும் இது பொருந்தும். நம் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், கிறிஸ்துவைப்போல நாமும் நம் வாழ்க்கையில் பூரண வளர்ச்சியுடன் காணப்படலாம்.

தேவனுடைய வழிகாட்டல்களை அறிந்து, பின்பற்றியதன்மூலம் மோசே தேவனோடு தன் உறவில் வளர்ச்சியடைந்ததை என்று இந்த வாரம் பார்ப்போம்.

*2025 செப்டம்பர் 20 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# சந்திப்புக் கூடாரம்

**கூடாரத்தைக் கட்டும்படிக்கு மோசேயிடம் தேவன் சொன்னது ஏன்? யாத் 33:7-11.**

இஸ்ரவேலரின் பாளயத்திற்கு புறம்பே பெயர்க்கப்பட்ட 'கூடாரத்தையும்', பின்னாட்களில் பாளயத்திற்கு நடுவே அமைக்கப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்தையும் நாம் குழப்பிக்கொள்ளக் கூடாது. தேவனிடம் ஆலோசனை கேட்பதற்காக எவ்வளவு தூரம் மோசே கூடாரத்தில் நேரம் செலவிட்டார் என்பது நமக்குத் தெரியாது. ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது: அதாவது, தேவனை அடிக்கடி சந்தித்து வந்ததின்நிமித்தம் அவர்களுக்கு இடையே ஒரு நெருக்கமான உறவு உண்டானது. 'ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார்.' யாத் 33:11. ஒரு நண்பர் என்றால் அவரிடம் கலந்தாலோசிக்கலாம், பேசுகிற விஷயங்களை யாரிடமும் சொல்லமாட்டாரென நம்பி, எல்லா விஷயங்களையும் மனந்திறந்து பேசலாம். அருமையான ஒரு நபர் யாரென்றால் அது நண்பர்தான்.

யாத் 19-34இன் பதிவுகளில், தேவன் நம் வாழ்க்கையை மாற்றுகிற விதம் பற்றிய படிப்பினைகளை மோசேயின் அனுபவத்தில் காணமுடிகிறது. இந்த அற்புதமான தலைவருடன் தேவன் எவ்வாறு உறவை ஏற்படுத்தினார்? தேவனுடைய வல்லமைபற்றிய அறிவிலும், அன்பிலும், குணத்திலும் மோசே வளர்ந்த விதத்தை அவரது வாழ்க்கை சம்பவத்தில் காணலாம். இது தேவனோடு உறவு வைப்பதால் காணப்படுகிற ஒரு முக்கிய அம்சம்.

சீனாய் மலைக்கு வருவதற்குமுன் மோசேயை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார்; ஒரு விசேஷித்த தலைமைத்துவப் பணிக்கு அவரை ஆயத்தப்படுத்தினார். மீதியான் தேசத்தில், ஆடுகளை மேய்த்து வந்தபோது, இரண்டு புத்தகங்களை எழுதும்படி ஏவினார்: அவை ஆதியாகமம் மற்றும் யோபு புத்தகங்கள். பிறகு, எரிகிற முட்செடியின் பரபரப்பான அனுபவத்தைக் கொடுத்து, இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வழிநடத்தி வருவதற்கு அழைத்தார். மோசே சிவந்த சமுத்திரத்தில் எகிப்திய தெய்வங்களும், பெலமிக்க எகிப்திய படைகளும் தோற்கடிக்கப்பட்டதைக் கண்டார். எகிப்திலிருந்து சீனாய்மட்டும் தேவன் வழிநடத்தின விதங்களை பல வாரங்களாகக் கண்டிருந்தார். முகம் பிரகாசிக்கிற அனுபவத்தைப் பெற்றதிலிருந்து, அடுத்த 39 வருடங்கள், வாக்குத்தத்த தேசத்தின் அருகே செல்கிற வரையிலும் இஸ்ரவேலரை வழிநடத்தினார். மோசே தேவனுடைய உண்மையான ஊழியர். உபா 34:5; யோசுவா 1:1. இருளில் ஒப்பற்ற வெளிச்சம். மற்ற தீர்க்கதரிசிகளுக்கு அளவுகோலாக இருந்த தீர்க்கதரிசி. உபா 18:15,18. மக்கள் பல சமயங்களில் அவருடைய வழிகாட்டல்களையும் வார்த்தைகளையும் பின்பற்றாவிட்டாலும், மாற்றத்திற்கான ஓர் ஏதுகரமாக இருந்தார். பின்பற்றினபோது, செழிப்படைந்தார்கள்.

---

**தேவன் நம்மை மாற்றுவதற்கு நாம் அனுமதித்தால், அவரால் என்ன செய்யமுடியும் என்பதை மோசேயின் வாழ்க்கையிலிருந்து அறியலாம். தேவனோடு நீங்கள் பெற்ற அனுபவத்தில், அவர்கள் உங்கள் வாழ்க்கையில் வல்லமையாகச் செயல்பட்டதாக நீங்கள் உணர்ந்த சில திருப்புமுனையான சம்பவங்கள் என்ன?**

# நான் உம்மை அறிவதற்கு

**தனக்கு எதைப் போதிக்குமாறு தேவனிடம் மோசே கேட்டார்? யாத் 33:12-17. தேவபிரசன்னம் தங்களை வழிநடத்தவேண்டுமென அவர் கேட்டது ஏன்?**

தேவனுக்குள் ஒரு நிலையான வளர்ச்சியை மோசே பெற்றிருந்தார். தேவனோடு நெருக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது, தேவசாயலில் தான் மாறுவதற்கு ஆசைப்பட்டார். ஒருநாள் கூடாரத்தில் தேவனோடு பேசிக்கொண்டிருந்த போது, தேவனை தான் அறியவில்லை என்பதை திடீரென உணர்ந்தவராக, ஒரு விசேஷித்த ஜெபத்தை ஏறெடுக்கிறார்: 'நான் உம்மை அறிவதற்கு உம்முடைய வழியை எனக்கு அறிவியும்.' யாத் 33:13. இதுவரை தான் அறிந்திருந்ததைவிட ஆழமாக தேவனை அறிந்துகொள்ள வேண்டுமென உணர்ந்தார். தேவனை அதிகமாக அறிய அறிய, அவரைப்பற்றி அறியாதவை அதிகம் இருப்பது புரிந்தது. அவரை அறியவேண்டிய அவசியத்தை உணர்ந்தார், அவரை மேலும் சிறப்பாக அறிந்துகொள்ள முழு இருதயத்தோடு ஆசைப்பட்டார். மோசே கேட்டதை தேவன் மனமுவந்து கொடுத்தார். இதுவரை நாம் ஆராய்ந்த மோசேயின் அனுபவங்களிலிருந்து, மோசே ஆண்டவரோடு ஒரு நெருக்கமான, ஆழமான உறவுக்குள்ளாகச் சென்றவிதமும், ஆவிக்குரியரீதியாக வளர்ந்தவிதமும் தெரிகிறது.

முதலில், மோசே மலைமேல் 'தேவனிடத்திற்கு ஏறிப்போனான்.' யாத் 19:3. பிறகு, 'மலையின் கொடுமுடிக்கு' சென்றார். யாத் 19:20. அதன்பிறகு, தேவன் வாசம்பண்ணின 'கார்மேகத்துக்குச்' சமீபமாய்ச் சேர்ந்தார். யாத் 20:21.

மற்றொரு சமயத்தில் தேவன் இருந்த 'மேகத்தின் நடுவிலே' மோசே பிரவேசித்து, இரவும் பகலும் நாற்பதுநாள் அங்கே தங்கியிருந்தார். யாத் 24:18. அந்த 40 நாட்களில் இரண்டு விலையேறப்பெற்ற ஈவுகளை மோசேக்கு தேவன் கொடுத்தார்: 1) தேவனே வெட்டின இரண்டு கற்பலகைகளில், அவரே தம் கையால் எழுதின பத்துக்கற்பனைகளைக் கொடுத்தார். யாத் 24:12. 2) ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டி, பணிதீர்த்து முடிப்பதற்கான வழிமுறைகளைச் சொன்னார். யாத் 25-31. பிறகு, இரவும் பகலும் நாற்பது நாட்கள் ஆண்டவரோடு செலவிட்டு, பாவிகளுக்காகப் பரிந்துபேசினார். யாத் 32:30-32; உபா 9:18.

இவற்றிற்கு மத்தியிலும், தேவனுடைய குணத்தை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ள மோசே ஆசைப்பட்டார்; தேவனும் தாம் யாரென்பதை அவர் அறிவதற்கான விசேஷித்த புரிதல்களைக் கொடுத்தார். மோசே பெறவிரும்பின இந்த அறிவு தேவனைப்பற்றின வெறும் தகவலறிவு அல்ல, மாறாக அவரை அனுபவித்துப் பெறவிரும்பின அறிவு.

அதனால் பல நூற்றாண்டுகளுக்கு பிறகு இயேசு இவ்வாறு சொன்னார்: 'ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.' யோவான் 17:3. மனிதர்களுக்கு தம்மைத் தெரியப்படுத்துவதற்கு தேவன் ஒரு மனிதனாக மாறுவதைவிட சிறந்த வழி ஏதாவது இருக்கமுடியுமா?

---

**உங்களுக்கு உண்மையிலேயே தேவனைத் தெரியுமா? அல்லது வெறும் தகவல்தான் தெரியுமா? இரண்டுக்கும் இடையே உள்ள முக்கிய வித்தியாசம் என்ன?**

# உம் மகிமையை எனக்குக் காண்பித்தருளும்

பொன்கன்றுக்குட்டியைச் செய்த விசுவாசத்துரோகச் செயலுக்கு பிறகு, தேவமக்களுக்காக மோசே பரிந்துபேசினார், தேவன் தங்களை தொடர்ந்து வாக்குத்தத்த தேசத்திற்கு வழிநடத்திச் செல்வாரா என்கிற நிச்சயத்தைப் பெற விரும்பினார். தன் உள்மனதில், தேவனை இன்னும் சிறப்பாக அறியவேண்டும் என்கிற ஆசையும் இருந்தது.

**தேவனுடைய மகிமையைக் காணவேண்டும் என்று மோசே கேட்டதற்கு தேவன் சொன்ன பதில் என்ன? யாத் 33:18-23.**

'உமது மாட்சியை எனக்குக் காட்டும்படி வேண்டுகிறேன்' என்று மோசே கேட்டார். (பொது மொழிபெயர்ப்பு). தேவன் தம் இரக்கத்தால், மோசேக்கு தம் மகிமையை வெளிப்படுத்தினார். மோசேயின் வேண்டுகோளுக்கு தம்முடைய 'தயவை' காட்டுவதாகச் சொன்னார். எனவே தேவனுடைய தயவுதான், அதாவது அவரது குணம்தான் அவரது மகிமை என்பது தெரிகிறது.

தேவன் தம் நற்குணத்தை அவரது பிள்ளைகளுக்குக் கொடுப்பதுதான் தேவனுடைய மகிமை. ஆண்களும் பெண்களும் அந்த உயர்ந்த தரத்தை அடைய வேண்டும் என்பதே அவரது ஆசை. பாவிகளையும் அரவணைத்து, அவர்களை மாற்றுவதற்கு தேவையான அனைத்தையும் செய்வதே அவரது மகிமை. அதே நேரத்தில், அவரது குணத்தை நமது வாழ்க்கையில் வெளிப்படுத்துவதும், அதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதுமே நமக்கு 'மகிமை'.

தேவனுடைய குணமாகிய அவரது தயவு, இரக்கம், கனிவான அன்பு ஆகியவை நம் செயல்களில் பிரதிபலிக்கவேண்டும். அவ்வாறு செய்வதால், உலகத்திற்கு ஆசீர்வாதமாக இருப்பதற்கு மட்டுமல்ல, பார்த்துக்கொண்டிருக்கிற பிரபஞ்சத்திற்கு பிரகாசிக்கிற ஒளியாக விளங்கவும் வாய்ப்புள்ளது. 'எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.' 1கொரி 4:9. பிரபஞ்ச அளவிலான இந்த அம்சம்தான் நம் வாழ்க்கைக்கும் சேவைக்கும் அர்த்தத்தையும், நான் நினைத்துக்கூட பார்க்கமுடியாத நோக்கத்தையும் கொடுக்கிறது.

'தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது.' ரோமர் 2:4. அதாவது, தேவனுடைய தயவையும் குணத்தையும் பரிசுத்த ஆவியானவர் உணர்த்தும்போது, மக்கள் தங்கள் பாவநிலையையும், இரட்சிக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும்குறித்த உணர்வடைகிறார்கள். உண்மையில், நாம் சிலுவையை நோக்கிப்பார்த்து, அங்கே இருந்தவரையும் (நம் ஆண்டவர்தாம்), அதற்கான காரணத்தையும் (நம்மீதுள்ள அன்பால் மரித்தார், அதுவே நாம் இரட்சிக்கப்பட ஒரே வழியாக இருந்தது) யோசிக்கும்போதுதான், அவரது தயவு, குணம்பற்றிய மிகப்பெரிய வெளிப்பாட்டைப் பெறுகிறோம்.

---

**சிலுவையைப்பற்றித் தியானிக்க எவ்வளவு நேரம் செலவிடுகிறீர்கள், தேவனுடைய குணம்பற்றி அது என்ன சொல்கிறது?**

# தேவனுடைய சுய வெளிப்பாடு

**தேவன் எவ்வாறு தம் மகிமையை மோசேக்கு வெளிப்படுத்தினார்? யாத் 34:1-28.**

---

---

மோசே தான் உடைத்துப்போட்ட முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளைக் கொண்டுசென்றார். யாத் 32:19. சீனாய் மலையில் ஏழாவது முறையாக தேவனைச் சந்திக்கும்படி சென்றார். இதற்குமுன் அவர் ஏறிச்சென்ற சம்பவங்கள் பின்வருமாறு: (1) யாத் 19:3,7; (2) யாத் 19:8,14; (3) யாத் 19:20,25; (4) யாத் 20:21; 24:3; (5) யாத் 24:9,12-18; 32:15; (6) யாத் 32:30,31.

தேவகுணத்தின் மகிமையை இன்னும் ஆழமாக அறிந்துகொள்ள மோசே இப்போது ஆயத்தமாகியிருந்தார். தேவனுடைய இந்த அற்புதமான வெளிப் பாட்டில்தான் அவரது குணத்தின் அழகு மிகச்சிறப்பாக எடுத்துக்காட்டப்படு கிறது. அதுவே தேவன் யாரென்பதற்கு மிகச்சிறந்த விளக்கமாக இருக்கிறது; அதுவே வேதாகமம் முழுவதிலும் பொன் இழைபோல நெய்யப்பட்டுள்ளது. எண் 14:18; நெகே 9:17; சங் 103:8; யோவேல் 2:13; யோனா 4:2. இங்கே தேவன் சொல்வதை பழைய ஏற்பாட்டின் யோவான் 3:16 என்று கூறலாம். இங்கே தேவன் தம்மைப் பற்றிச் சொல்வதையே வேதாகமத்தின் முக்கியமான பகுதிகளில் வேதாகம ஆசிரியர்கள் எழுதுகிறார்கள், விளக்குகிறார்கள். ஏனென்றால், தேவ னுடைய குணத்தை சரியாகப் புரிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

தேவனுடைய நாமம்பற்றி இதற்குமுன் சொல்லப்பட்டிராத, ஈடுஇணை யற்ற, ஒப்பற்ற இந்த விளக்கத்தைப் பெற்றதும், மோசே தலைபணிந்து, கர்த்தரைத் தொழுதார். தேவனுடைய அன்பு, கிருபை, இரக்கம், மனதுருக்கம், தயவு, உண்மை தன்மை, மன்னிக்கிறதன்மை, பரிசுத்தம், நியாயம்பற்றிப் புரிகிறபோதுதான், நாம் அவரிடமாக ஈர்க்கப்படுவோம். அவரது ஈடுஇணையற்ற தன்மைகளைக் கண்டு, வியக்கும்போதுதான் அவரை நேசிக்க ஆரம்பிப்போம், அந்த அன்பு அவரைச் சேவிக்கவும், அவரில் அன்புகூரவும் வழிநடத்தும். அவர் நம்மீது அன்புகூர்ந்ததால், நாம் அவரில் அன்புகூருகிறோம். 1யோவான் 4:19.

தேவன் தம்மை வெளிப்படுத்திய சமயத்தில்தான், தம் மக்களுக்காக மகத் தான காரியங்களைச் செய்வதாகவும், வாக்குத்தத்த தேசத்திற்குள் அவர்களை வழிநடத்துவதாகவும் மோசேயிடம் உறுதியாகச் சொன்னார். மற்ற தேசத்தாரும் தம்முடைய மகத்துவத்தையும் ஆச்சரியமான கிரியைகளையும் காண்பார்கள் என்று சொல்லி, இஸ்ரவேலருடன் தம்முடைய உடன்படிக்கையைப் புதுப்பித் தார். 'இதோ, நான் ஒரு உடன்படிக்கைபண்ணுகிறேன்; பூமியெங்கும் எந்த ஜாதி களிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்; உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த் தருடைய செய்கையைக் காண்பார்கள்; உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்.' யாத் 34:10.

ஆனாலும் இஸ்ரவேலர் செழித்து உறுதியாவதற்கு, அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவர் கொடுத்திருந்த பத்துக் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டி யிருந்தது. பிறகு, மோசே ஏற்கனவே உடைத்திருந்த உடன்படிக்கையிலிருந்த கட்டளைகளை மீண்டும் எழுதும்படி தேவன் சொன்னார். யாத் 34:27,28.

# மோசேயின் பிரகாசித்த முகம்

**மோசேயின் முகம் பிரகாசித்ததற்கான காரணம் என்ன? யாத் 34:29-35.**

---

தேவன் தமது குணம் அன்பு என்று மோசேக்கு வெளிப்படுத்தினபிறகு, இஸ்ரவேலரின் பாளயத்திற்கு மோசே திரும்பிவருகிறார். அப்போது அவரது முகம் பிரகாசித்தது. தனது முகம் பிரகாசித்ததை மோசே முதலில் அறிந்திருந் தாரா? இல்லை. ஒருவர் எவ்வளவு தூரம் தேவனிடம் நெருக்கமாக இருக்கி றாரோ, அவ்வளவுக்கு தேவனுடைய பரிசுத்த தன்மையுடன் ஒப்பிடுவார்; அப் போது தன்னிடம் ஏராளமான குறைகள் இருப்பதை அதிகம் உணருவார்.

மோசேயின் முகம் ஜொலிக்கிற அளவுக்கு அவரில் மாற்றம் ஏற்பட்டதற் கான காரணம் என்ன? அவர் தேவ பிரசன்னத்தில் இருந்ததுமட்டுமே காரண மல்ல, ஏனென்றால் இதற்குமுன் பலசமயங்களில் தேவனோடு இருந்திருக்கிறார், அப்போதெல்லாம் அவரது முகம் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அவர் தேவ னுடைய பிரசன்னத்தில் இல்லாமல் இருந்திருந்தால், அவரது முகம் பிரகாசித்திருக் கவே வாய்ப்பில்லை. அவர் தேவனுடைய தயவையும் இரக்கத்தையும் புரிந்து கொண்டபோதுதான், அவரது குணத்தின் அருமையை உணர்ந்து தன்னை முற்றிலு மாக தேவனிடம் மறைக்காமல் ஒப்புக்கொடுத்தார், அதனால் மாற்றமடைந்தார். அவரது முகம் பிரகாசித்தது. நாம் நம்மை தேவனிடம் அர்ப்பணித்து, அவரே நம் வாழ்க்கையின் தேவனாகவும் ராஜாவாகவும் இருக்க அனுமதிக்கும்போது, நம் இருதயங்களும் சிந்தைகளும் மாற்றமடைகின்றன.

**இயேசு எவ்வாறு உங்களை படிப்படியாக அவரது சாயலுக்கு மாற்றமுடியும்? 2கொரி 3:18.**

---

மோசேயின் பிரகாசமான முகத்தை இயேசு கிறிஸ்துவுடன் ஒப்பிடுகிறார் பவுல்; மேலும், தேவ பிரமாணத்தையும் கிருபையையும் தமக்குள் பெற்றிருந்த கிறிஸ்துவின் மகிமை, கட்டளைகளைப் பெற்ற மோசேயின் மகிமையைவிட ஈடுஇணையற்றதாக இருந்தது. நாம் எப்போதும் இயேசுவை நோக்கிப் பார்ப்ப தாலும் (எபி 3:1; 12:2), தேவ ஆவியானவருடைய வல்லமையினாலும்மட்டுமே (2கொரி 3:12-18) கிறிஸ்துவும் அவரது பிரமாணமும் நமது குணங்களில் கலக்கமுடியும்.

மோசே நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறார், நம் குணங்களை மாற்ற வும், அவரது தெய்வீக சாயலுக்கு ஒத்தவர்களாக வனையவும் தேவனை நாம் அனுமதித்தால், அவரால் என்ன செய்யமுடியும் என்பதை எடுத்துக்காட்டுகிறார். இதைத்தான் 'புதிதான ஜீவனுள்ளவர்களாய்' நடந்துகொள்ளுதல் என்று பவுல் கூறுகிறார். ரோமர் 6:4.

---

**உங்கள் குணத்தின் எந்தெந்த அம்சங்களில் தேவ குணம் இன்னும் சிறப்பாகப் பிரதிபலிக்கவேண் டும்? எல்லா அம்சங்களிலும் இல்லையா? சிலுவையையும் அதன் அர்த்தத்தையும் தியானிப்பது, எவ்வாறு உங்களுக்கு ஊக்கத்தையும் இரட்சிப்பின் நிச்சயத்தையும் கொடுக்கமுடியும்?**

# மேலும் படிக்க:

ஒரு நாள் ஒரு அப்பாவும் மகனும் ஒரு தேவாலயத்திற்குச் சென்றார்கள். சுற்றிலும் இருந்த கண்ணாடிகளில், பல வேதாகம கதாபாத்திரங்களின் காட்சிகள் இடம்பெற்றிருந்தன, அப்போது அந்தக் கண்ணாடிகளில் சூரிய ஒளி பட்டது; உடனே கண்ணாடிகளில் இருந்த கதாபாத்திரங்களின் படங்கள் பிரகாசமாகத் தெரிய ஆரம்பித்தன. அந்தச் சிறுவன் அப்பா விடம், "அப்பா, இவர்கள் எல்லாம் யார்?" என்று கேட்டான். அப்பாவுக்கு கிறிஸ்தவம்பற்றியும் கிறிஸ்துபற்றியும் அவரது சீடர்கள்பற்றியும் அதிகம் தெரியாது, அதனால் அவர், "இவர்கள் கிறிஸ்தவர்கள்ப' என்று சொன்னார். இந்தக் காட்சி மகனின் மனதிலிருந்து நீங்காமலேயே இருந்தது. ஒருநாள் அந்ச் சிறுவனின் ஆசிரியர் வகுப்பில் வைத்து, "மாணவர்களே, கிறிஸ் தவர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். உடனே அந்தச் சிறுவனுக்கு தேவாலயத்தில் பார்த்த அந்தப் பிரகாசமான காட்சி ஞாபகத்திற்கு வரவே "எனக்குத் தெரியும்; கிறிஸ்தவர்கள் பிரகாசிக்கிறவர்கள்" என்று சொன்னான். இதே கருத்தில்தான் இயேசு தம்மைப் பின்பற்றினவர்களிடம் "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோ கத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன் பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று சொன்னார். மத் 5:16. பிரகாசிக்கிறவர்கள்மட்டுமே மாற்றத்தின் ஏதுகரங்களாக இருக்கமுடியும்.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *'நாம் தேவனுக்குமுன்பாக நம்மைத் தாழ்த்தி, இரக்கமும் மனிதாபிமானமும் கனி வான இருதயமும் பரிவும் உள்ளவர்களாக இருந்திருந்தால், சத்தியத்தைக் கேட்டு இப்போது ஒருவர் மனமாறுகிற இடத்தில் நூறுபேர் மனமாறியிருப்பார்கள்.' நம் குணங்களும் செயல்களும் மனநிலைகளும் நம் சாட்சியில் தாக்கத்தை ஏற்படுத்து வதுபற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது?*

2. *யாத் 34:6,7 வசனங்கள் பழைய ஏற்பாட்டின் யோவான் 3:16 என்று அழைக்கப்படு வதற்கான காரணம் என்ன?*

3. *தேவன் யார் என்று கேட்பவர்களுக்கு, யாத் 34:6,7 இல் தேவன் தம்மைப்பற்றி வெளிப் படுத்தியிருப்பதை வைத்து, அவரது குணத்தின் அழகை நீங்கள் எவ்வாறு விளக்க முடியும்?*

4. *கிறிஸ்தவர்களின் குணமும் செயல்களும் தங்களது வாழ்க்கையில் என்னென்ன தாக்கங்களை ஏற்படுத்தின என்று வகுப்பில் கலந்தாலோசியுங்கள். அதாவது இரக்கமும், கிருபையும், தாழ்மையும், மன்னிக்கிற தன்மையும் உடைய நபர்கள், உங்களது அனுபவத்தில் எப்படிப்பட்ட செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறார்கள்? அதே நேரம் இரக்கமின்மையும், மன்னிப்பின்மையும், அரக்ககுணமும் உடைய 'கிறிஸ்தவர்கள்', ஆண்டவரோடு உங்களுக்குள்ள உறவில் என்ன தாக்கத்தை ஏற் படுத்தியிருக்கிறார்கள்?*



# ஆசரிப்புக்கூடாரம்

ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 35:1–36:7; ஆதி 1:1; யாத் 36:8–39:31; எபி 7:25; யாத் 40:1–38; யோவான் 1:14.

**மனன வசனம்:** அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாப் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது. யாத் 40:34, 38.

பழைய ஏற்பாட்டில் தேவமக்களின் முதன்மையான கடமை தேவனோடு நெருக்கமான வாழ்வதும், அவரைத் தொழுது சேவிப்பதும், அவரைப்பற்றின சரியான காட்சியை மற்றவர்களுக்குக் காட்டுவதுமாகும். உபா 4:5-8. இதுவே இன்றும் நம் கடமையாக இருக்கிறது.

ஏதேன் தோட்டத்தில், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததால், தேவனிடமிருந்து ஒளிந்துகொண்டார்கள்; அவர்களது பாவம்தான் தேவன்மீது பயத்தை ஏற்படுத்தியது. பாவத்தன்மையானது இயல்பாகவே தேவன்மீது மனிதர்களுக்கு பயத்தைக் கொடுக்கிறது, இந்தப் பயம் அவரது குணத்தை நமக்குத் திரித்துக் காட்டுகிறது. ஆனால் இந்தச் சிக்கலைச் சரிசெய்வதற்கு தேவனே முதலடி எடுத்து வைத்தார்; அவரே முயற்சி எடுத்து இந்த இடைவெளியைச் செப்பனிட்டு, உடைந்து போன உறவைச் சரிசெய்கிறார். பாவியை மீண்டும் தம்மிடமாக அழைக்கிறார்: 'நீ எங்கே இருக்கிறாய்?' ஆதி 3:9. எனவே, நமது முதன்மையான ஊழியம், நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கு தேவனுடைய அன்பும் நீதியுமான செயல்களையும், அவரது குணத்தையும் சரியான வெளிச்சத்தில் காட்டுவதாகும். மக்கள் தேவனிடம் ஈர்க்கப்பட்டு, தங்கள்மீது அவர் சுயநலமற்ற அன்புகாட்டுகிறார் என்று நம்பும்போது, தங்கள் வாழ்க்கையை அவரிடம் அர்ப்பணிப்பார்கள். அவர் சொல்வது தங்களுடைய நல்லதுக்குத்தான் என்பதை அறிந்து அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவார்கள்.

மனிதர்களுடன் தேவன் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார் என்பதை ஆசரிப்புக்கூடாரம் எடுத்துக்காட்டியது; விசுவாசத்தோடு தம்மிடம் வருகிறவர்களை அவர் இரட்சிப்பதைச் சுட்டிக்காட்டின மகத்தான சத்தியங்களை வெளிப்படுத்தியது.

*2025 செப்டம்பர் 27 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கர்த்தருடைய ஓய்வுநாள்

ஏழாம் நாள் ஓய்வுநாளுக்கு எதிராக வாதிடுகிறவர்கள் அது யூதர்களுக்குரியது என்று சொல்வது தவறு; ஏனென்றால் ஏழாம் நாளானது ஏதேனில் பிரித்தெடுக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டது. ஆதி 2:1-3. சீனாயில்தான் முதன்முதலாக அது யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்று வாதிடுவதும் தவறு. ஏனென்றால், சீனாய்க்கு முன்னரே யூதர்கள் அதைக் கைக்கொண்டு வந்தார்கள். யாத் 16:22-29. ஆனால் ஆதிமுதலே அது எபிரெய மக்களுடைய வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு பகுதியாக இருந்தது என்பதில் எந்தக் கேள்வியும் இல்லை.

**ஆசரிப்புக்கூடாரக் கட்டுமானப் பின்னணியில், யாத் 35:1-3இல் மக்களிடம் வலியுறுத்தப்பட்ட சத்தியம் என்ன?**

ஓய்வுநாளும் அது சொல்கிற செய்தியும் என்ன? தேவன் யார், அவரது மகத்தான செயல்கள் என்ன என்பதாகும்; அதுதான் அப்போதும் இப்போதும் எப்போதும் உண்மை. ஓய்வுநாள் தேவனுடைய சிருஷ்டிப்பின் செயல்களையும் இரட்சிப்பின் செயல்களையும் நமக்கு நினைவூட்டுகிறது, தம் மக்களுடன் வாசம் பண்ண விரும்புகிற தேவனைநோக்கி நம் கவனத்தைத் திருப்புகிறது. இந்த வகையில், ஓய்வுநாள், ஆசரிப்புக்கூடாரம் இரண்டுக்கும் நோக்கம் ஒன்றுதான், அதாவது நம் வாழ்க்கையில் தேவபிரசன்னம் காணப்படுவதைக் காட்டுவதாகும்.

பழைய ஏற்பாட்டுச் சபை கைக்கொண்ட ஓய்வுநாளிலிருந்து பல செய்திகளைக் கண்டறியலாம். அதை ஐந்து முக்கியக் கருத்துகளாகச் சுருக்கலாம்:

1. தேவனே சிருஷ்டிகர்; அடிப்படையான இந்த அறிவிப்புடன்தான் வேதாகமமே துவங்குகிறது. ஆதி 1:1. தேவனுடைய சிருஷ்டிப்பின் நினைவுச் சின்னம் ஓய்வுநாள். ஆதி 2:2,3; யாத் 20:8-11. தேவனே நம் சிருஷ்டிகர் என்கிற இந்தச் சத்தியத்திலிருந்துதான், வேதாகமத்தின் மற்ற அனைத்து சத்தியங்களும் உருவாகின்றன.
2. மேசியா வருவார்; சர்ப்பத்தை (சாத்தான்) மிதித்து, தீமையை வெல்லப் போகிற வித்துகுறித்த தேவனுடைய வாக்குறுதிதான் இந்த நம்பிக்கைக்கு மையமாக இருக்கிறது.
3. தேவன் தம் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்; அதற்கான ஒரு முன்னனுபவமே ஓய்வுநாள்.
4. இரட்சிப்பு தேவனிடமிருந்து வருகிறது; தேவனே தங்கள் இரட்சகர், மீட்பர், அவரது கிருபையாலும் கிருபையால்மட்டுமே இரட்சிப்பு கிடைக்கிறது என்பதை தேவ மக்கள் ஓய்வுநாளை ஆசரித்துச் சாட்சியிடுகிறார்கள்.
5. மனிதர்கள் அனைவரையும் இறுதியாக நியாயந்தீர்க்கப்போகிறவர் தேவன். அவரை எதிர்த்து, தொடர்ந்து மறுப்பவர்களுக்கு எதிர்காலமே இல்லை. ஆனால் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு நித்திய வாழ்வை இலவசமாகக் கொடுக்கிறார்.

---

**இஸ்ரவேலர் ஓய்வுநாளைக் கைக்கொண்டதைவிட, ஓய்வுநாள்தான் இஸ்ரவேலரைக் காப்பாற்றியது என்று யூதர்களிடையே ஒரு பழமொழி உண்டு. அட்வென்டிஸ்டுகள் பெரும்பாலும் அவ்வாறு சொல்வதில்லை என்றாலும், நம் சபைக் குடும்பத்தின் வாழ்வில், ஓய்வுநாள் என்ன முக்கியப் பங்காற்றுகிறது?**

# காணிக்கையும் ஆவியும்

**யாத் 35:4-36:7இல் இன்று நமக்குள்ள முக்கியப் பாடங்கள் என்ன?**

ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்கு விலையுயர்ந்த பொருட்கள் பல தேவைப்பட்டன, தேவமக்களின் தாராளமான நன்கொடைகளால் அது சாத்திய மாகியது, தங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து, விருப்பத்தோடும் மகிழ்ச்சியோ டும் கொடுத்தார்கள். பொன், வெள்ளி, வெண்கலம், மெல்லிய நூல், விலையு யர்ந்த கற்கள், பிரத்தியேக துணிகள், சித்தீம் மரம், ஒலிவ எண்ணெய், தூபவர்க் கங்கள் என தேவையான பல பொருட்களைக் கொடுத்தார்கள். மேலும் கூடார வேலைகளையும் மரவேலைகளையும் கலைநயத்தோடும் கருத்தோடும் செய்ய வேண்டியிருந்ததால், மக்கள் தங்கள் உழைப்பையும் கொடுத்தார்கள். தையற் காரர்கள் ஆசரிப்புக்கூடாரத்தில் பணியாற்றுகிற ஆசாரியர்களுடைய வஸ்திரங் களைத் தைத்தார்கள்; பிரதான ஆசாரியனின் வஸ்திரத்தில் மார்க்கவசம், பாகை உட்பட பல நுணுக்கமான வேலைகள் இருந்தன,

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டபோது எகிப்தியர் அவர்களுக்கு பரிசுகளைக் கொடுத்தார்கள், அவ்வாறு இஸ்ரவேலரை தேவன் ஆசீர்வதித்திருந் தார். தேவனுடைய இரக்கத்திற்கும் வல்லமையான வழிநடத்துதலுக்கும் நன்றி யறிதலோடு காணிக்கை கொடுக்க இப்போது ஏற்ற தருணமாக இருந்தது; இந்தப் பணியை தேவ மகிமைக்காகச் செய்துமுடிக்க அவர்களது இருதயங்கள் அசைக் கப்பட்டன. மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக, பரிபூரணமாகக் கொடுத்தார்கள் என்றால், 'அதிகமான பொருள்களை ஜனங்கள் கொண்டுவருகிறார்கள்' என்று தேவனே மோசேயிடம் சொன்னார். யாத் 36:5. எனவே நன்கொடைகள் போது மென மோசே சொல்லவேண்டியதாயிற்று; ஏனென்றால், ஆசரிப்புக்கூடார கட்டு மானத்தில் 'செய்யவேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததுமல்லாமல் அதிகமாயும் இருந்தது.' யாத் 36:7.

மக்கள் மிகச்சரியாக ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்கு பரிசுத்த ஆவி யானவருடைய வழிநடத்துதலின்மூலமாக தேவன் திறனையும் ஞானத்தையும் கொடுத்தார். பெசலெயேல், அகோலியாப் போன்றவர்கள் 'தேவ ஆவியினாலே' நிரப்பப்பட்டார்கள். யாத் 35:33. அதாவது, எல்லா வேலைகளையும் குறைவின்றி செய்வதற்கு அவர்களுக்கு திறமைகளையும் ஞானத்தையும் கலைநய அறிவை யும் கொடுத்தார். அது ஒரு மிகப்பெரிய கட்டுமானப் பணி, மோசேக்கு தேவன் காட்டியிருந்த மாதிரியின்படியே அதைக் கட்ட வேண்டியிருந்தது.

ஆவியானவர் வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு திறமைகளையும் வேலைத்திறன்களையும் ஈவாகக் கொடுத்தார், அவற்றைப் பயன்படுத்தி ஆச ரிப்புக்கூடாரத்தைக் கட்டவேண்டியிருந்தது. ஆவியால் நிரப்பப்படுவது மாயா ஜால செயல்முறையல்ல, மனிதர்களுக்கு விசேஷித்த ஆவிக்குரிய வல்லமை கள் புகுவதால் உண்டாவதல்ல. தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றவும், தமது ஊழியத்தைச் செய்துமுடிக்கவும் தேவனே தமது பிள்ளைகளுக்குப் பெலனளித்து, அவற்றைச் சரியாகச் செய்யவைக்கிறார்.

---

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டதும் நீங்கள் பெற்றுக்கொண்ட விசேஷித்த ஈவுகள் என்ன? உங்கள் வாழ்க்கையில் ஆவியின் கனிகளை பேணி வளர்க்கும்போதுதான் ஆவிக்குரிய வரங்கள் செழித்து வளரும் என்பதை மறக்கவேண்டாம். கலா 5:22.23.**

# ஆசரிப்புக்கூடாரம் கட்டப்பட்டது

**யாத் 36:8-39:1 வரை வேகமாக வாசியுங்கள். இவ்வளவு தெளிவாக வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டது ஏன்? சிறுசிறு விஷயங்களில்கூட தேவன் அக்கறைகாட்டுவதுபற்றி இது போதிப்பது என்ன?**

மோசே மிகக்கவனமாக ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டினார்; சீனாய் மலையில் பெற்றிருந்த வழிகாட்டல்களின்படியே கருத்தோடு ஒவ்வொன்றையும் செய்தார். என்னென்ன செய்யப்பட்டன என்று வேதாகமம் பட்டியலிடுகிறது: 1) ஆசரிப்புக்கூடாரமும் அதன் வெவ்வேறு துணிகளும், திரைகளும், ஒவ்வொரு பகுதிகளும் (யாத் 36:8-38); 2) உடன்படிக்கை பெட்டி (யாத் 37:1-9); 3) சமுகத்தப்ப மேசை (யாத் 37:10-16); 4) குத்துவிளக்கு (யாத் 37:17-24); 5) தூபபீடம் (யாத் 37:25-29); 6) தகன பலிபீடம் (யாத் 38:1-7); 7) கழுவுவதற்கான தொட்டி (யாத் 38:8); 8) பிராகாரம் (யாத் 38:9-20); 9) ஆசரிப்புக்கூடாரத்திற்கான பொருட்கள் (யாத் 38:21-31). ஏபோத், மார்ப்பதக்கம் மற்றும் ஆசாரிய உடைகள் சம்பந்தப்பட்ட பகுதிகள்குறித்த விளக்கங்கள் யாத் 39இல் தொடர்கின்றன.

ஆசரிப்புக்கூடார ஆராதனைகள் அனைத்தும் சுவிசேஷம்குறித்து கண்களால்காண்கிற விளக்கப்பாடங்களாக இருந்தன; தேவனுடைய மீட்பின் திட்டம் முழுவதையும் எடுத்துக்காட்டின. அங்கு நடைபெற்ற வெவ்வேறு சடங்குகளின் மூலமாக 1) தேவன் பாவத்தை அருவருப்பதும், அதைக் கையாளுகிற விதமும், 2) மனந்திரும்புகிறவர்களை அவர் இரட்சிக்கிற விதம், 3) துன்மார்க்கரின் இறுதி முடிவு, 4) தீமையே இல்லாத மகிமையான ஒரு எதிர்காலத்தைக் கொண்டுவரப் போகிற விதம். இவை எடுத்துக்காட்டப்பட்டன.

ஒரு வருடத்தில் ஆசரிப்புக்கூடாரத்தில் அனுதின ஆராதனைகளும், வருடாந்தர ஆராதனை ஒன்றும் நடைபெறும். இரண்டும் வெவ்வேறு ஆராதனைகள். ஆனால் நெருங்கிய தொடர்புடையவை. இந்த இரண்டுக்கட்ட ஊழியமானது, தேவன் எவ்வாறு பாவத்தைக் கையாளுகிறார், எவ்வாறு பாவிகளை இரட்சிக்கிறார் என்பதை எடுத்துக்காட்டியது. அனுதின ஆராதனைகளின்மூலமாக, மனந்திரும்புகிறவர்களின் பாவங்களை தாம் மன்னிப்பதையும், அவர்களுக்கு கிருபையாக இரட்சிப்பை அருளுவதையும் தேவன் எடுத்துக் காட்டினார். இரட்சிப்பின் இந்த ஈவைப் பெறுவதற்கு, பலியிடவேண்டும், அந்தப் பலிகள் மேசியாவின் மரணத்தைச் சுட்டிக்காட்டின, அவரது இரத்தம் ‘சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கிறது’. 1யோவான் 1:7. இந்த ஈவைப் பெறுவதற்கு, பாவத்தை அறிக்கையிடுவதும், கிறிஸ்துவின் நீதி என்கிற வஸ்திரத்தைப் பெற்றுக்கொள்வதும் முக்கியம். சங் 32:1,2. இவ்வாறு, மனந்திரும்புகிற பாவிக்கு மன்னிப்பின் நிச்சயம் வழங்கப்படுகிறது, தேவன் எவ்வாறு பாவத்தை முற்றிலும் அழிக்கிறார், பாவப்பிரச்சினையைத் தீர்க்கிறார், பாவமற்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்குகிறார் என்பதை பாவநிவாரண நாளில் நடைபெற்ற வருடாந்தர ஆராதனை காட்டியது. லேவி 16; யோவான் 1:29. தற்சமயம், பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்து இந்த இரண்டு கட்ட ஊழியத்தைச் செய்துவருவது, நமக்காக தேவன் செய்துவருகிற பணியின் மற்றொரு வெளிப்பாடு. எபி 7:25. இவ்வாறு அவர் தீமை எனும் பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் கொண்டுவரப் போகிறார். தானி 7:13,14,22,27; தானி 8:14; வெளி 21:4. ஆசரிப்புக்கூடாரமானது தேவனைத் தொழுது, அவருக்கு நன்றிசெலுத்துகிற ஓர் இடமாக இருந்தது. தேவனோடுள்ள உறவைப் பேணுவதும், விசுவாசிகளை அந்த ஐக்கியத்திற்குள்ளாக அழைப்பதுமே தொழுகை.

# ஆசரிப்புக்கூடாரத்தில் தேவ பிரசன்னம்

**எதை வைத்து தேவ பிரசன்னத்தை இஸ்ரவேலரால் கண்டுகொள்ள முடிந்தது? யாத் 40:1-38.**

ஆசரிப்புக்கூடார பிரதிஷ்டையையும், பத்துக்கற்பனை எனும் ஈவையும் பற்றி யாத்திராகமத்தின் இறுதி அதிகாரம் (யாத் 40) விளக்குகிறது. சீனாயில் இஸ்ரவேலர் மத்தியில் நிகழ்ந்த உச்சக்கட்ட நிகழ்வாக ஆசரிப்புக்கூடார பிரதிஷ்டை இருந்தது. தேவனுடைய மகிமை என்பது அவரது பரிசுத்தமும், அவரது குணமும், அவரது தயவுமிக்க அன்பின் பிரசன்னமும் ஆகும். யாத் 3:5; 33:18,19. அவரது பிரசன்னம் ஆசரிப்புக்கூடாரத்தை நிரப்பியது, ஷெக்கைனா மகிமையானது மேகமாகத் தெரிந்தது. பகலில் கர்த்தருடைய மேகம், இரவில் அக்கினி என தேவபிரசன்னம் வழிநடத்தியதாகச் சொல்லி யாத்திராகமப் புத்தகம் நிறைவடைகிறது. தேவன் இருக்கிறார் என்பதை மட்டுமல்ல, அவரது வழிநடத்துதல்மூலம் எப்போதும் தங்களுடன் இருந்த அவரது பிரசன்னத்தையும் எபிரெய மக்கள் அனுபவிக்கவிருந்தார்கள்.

இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் ஆசரிப்புக்கூடாரத்தை மோசே கட்டி முடித்தார். யாத் 40:2, 17. மோசே அனைத்தையும் அபிஷேக எண்ணெயால் பரிசுத்தப்படுத்தினார். ஆரோனையும் அவரது குமாரர்களையும்கூட ஆசாரியத்துவத்திற்குப் பரிசுத்தப்படுத்தினார். யாத் 40:9,13-15. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும், பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும், பிராகாரத்திற்குள்ளும் நடந்து சென்று சகலத்தையும் கர்த்தருக்கென்று பிரதிஷ்டைபண்ணினார். இந்தச் செயல்முறைமூலமாக, ஆசரிப்புக்கூடார ஆராதனைகளைத் தொடங்கிவைத்தார். எண் 7:1. ஆசரிப்புக்கூடாரத்தைப் பிரதிஷ்டைபண்ணின நாளில் மட்டுமே மோசேயால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லமுடிந்தது; அதன்பிறகு, பிரதான ஆசாரியன் மட்டுமே ஒவ்வொரு வருடத்திலும் பாவநிவாரண நாளில் அங்கு செல்லமுடியும். லேவி 16:2,17. வேலை முடிந்ததாக மூன்று தருணங்களில் மட்டுமே வேதாகமத்தில் சொல்லப்படுகிறது: 1) சிருஷ்டிப்பு வாரத்தின் இறுதியில், தேவன் தம் சிருஷ்டிப்பு கிரியைகளை நிறைவேற்றி முடித்தார். ஆதி 2:1-3; 2) ஆசரிப்புக்கூடாரம் கட்டிமுடிக்கப்பட்டபோது, 'மோசே வேலையை முடித்தான்' என்று வேதாகமம் சொல்கிறது. யாத் 40:33; 3) சாலொமோன் தேவாலயக் கட்டுமானத்தை முடித்ததும் அவ்வாறு சொல்லப்படுகிறது. 1இராஜா 7:51.

சிருஷ்டிப்புக்கும் இஸ்ரவேலின் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் இடையேயிருந்த தொடர்பு அனைத்துலக அம்சம் சம்பந்தப்பட்டது; அதாவது, புதிய பூமியில் புதிய எருசலேமில் மீட்கப்பட்டவர்களுடன் தேவன் வாசம்பண்ணப்போகிற ஒரு காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது, புதிய எருசலேம் 'தேவனுடைய வாசஸ்தலமாகும்'. வெளி 21:2,3; வெளி 22:1-4. மோசேயின் பிறப்பில் ஆரம்பித்து, 10 வாதைகள்மூலம் எகிப்திய கடவுள்கள் தோற்கடிக்கப்பட்டன, இஸ்ரவேலர் எகிப்திலிருந்து தப்பித்தது, எகிப்திய சேனை அழிக்கப்பட்டது, இறுதியாக சீனாய் மலையில் தேவன் தம்மை வெளிப்படுத்தியது போன்ற நிகழ்வுகளின் மகுடமாக ஆசரிப்புக்கூடாரத்தை தேவபிரசன்னம் நிறைத்த நிகழ்வு இருந்தது. யாத் 40:34.

**இன்றைக்கும்கூட எந்தெந்த வழிகளில் தேவ பிரசன்னத்தை நீங்கள் அனுபவிக்கலாம்? அவ்வாறு அனுபவிக்கவேண்டியது ஏன் முக்கியம்?**

# மனிதர்களுக்குள்ளே கூடாரமிட்டார்

**கிறிஸ்து மனிதனாக வந்ததற்கும், ஆசரிப்புக்கூடாரத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமை என்ன? யோவான் 1:14.**

---

இயேசு மனிதனாக வந்தது ஒரு மறைபொருள். அது மீட்கப்பட்டவர்கள் நித்தியக்காலம் முழுவதும் ஆராயப்போகிற ஒரு அறிவியல். கிறிஸ்து நம்முடைய சரீரத்தைத் தரித்துக் கொண்டதன்மூலம் நாம் காணக்கூடிய வகையில் தம்மை வெளிப்படுத்தினார் என்று யோவான் அப்போஸ்தலன் சொல்கிறார். இங்கே இயேசு எவ்வாறு மனிதமாம்சத்தின்மூலமாக வாசம்பண்ணினாரோ, அவ்வாறு தான் பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேலர் வாக்குத்தத்த தேசத்தை நோக்கிச் சென்றபோது சீனாயிலும் வனாந்தரத்திலும் ஆசரிப்புக்கூடாரத்தில் அவர்களுடன் வாசம்பண்ணினார்.

இயேசு மனிதனாக வந்தபோது, மனிதர்களுடன் வாசம்பண்ணினார். இது நம் கற்பனைக்கும் எட்டாத ஒரு சிலாக்கியம்! நித்திய தேவன் தம்மைப்பற்றி 'இம்மானுவேல், தேவன் நம்மோடிருக்கிறார்' என்பதை வலியுறுத்துவதற்காக நம்மிடத்திற்கு வந்தார்; நம்மில் ஒருவராக வந்தார்.

இரண்டு, மூன்றுபேர் தம்முடைய நாமத்தில் எங்கே கூடுகிறார்களோ அங்கே தாம்இருப்பதாகமத்18:20இல்இயேசுசொன்னார். பரிசுத்தஆவியானவர்மூலமாக கிறிஸ்து தம் மக்களோடு இருக்கிறார். தம்மைப் பின்பற்றுகிறவர்கள் தம்மோடு நெருக்கமான உறவில் இருக்கும்படி கிறிஸ்து அழைக்கிறார். 'இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.' வெளி 3:20.

**வெளி 21:1-3 என்ன சொல்கிறது?**

---

புதிய எருசலேம் வானத்திலிருந்து பூமிக்கு இறங்கி வரும்; யோவான் சொல்கிறார்: 'இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.' வெளி 21:3. புதிய எருசலேமில் தேவாலயம் இல்லை. வெளி 21:22. ஏனென்றால் அந்த நகரமே ஆலயம், தேவன் வாசம்பண்ணுகிற இடம். அந்த நகரத்தின் நீளமும் அகலமும் உயரமும் சம அளவாக இருக்கிறது. வெளி 21:16. ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலமும்கூட சமஅளவு பக்கங்களுடன் கனசதுர வடிவில் இருந்தது. பாவமும் மரணமும் உபத்திரவமும் இல்லாத ஒரு உலகத்தில், நம் தேவனுடைய பிரசன்னத்திற்கு மிகமிக அருகில், நித்தியகாலமும் வாழ்வோம்.

---

**இயேசுவுக்குள் நமக்குள் வாக்குரைக்கப்பட்டிருப்பதை எண்ணிப்பார்த்தால், எவ்வாறு நாம் இறுதிவரை நிலைத்திருக்க முடியும்?**

# மேலும் படிக்க:

‘அந்த ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்குமுன் மீட்பின் சம்பவம் ஒன்று நிகழ்ந்திருந்தது, அதாவது, எகிப்தின் அடிமைத்தனப்பிடியிலிருந்து இஸ்ரவேலர் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். இதைத் தொடர்ந்து, தம் மக்களுடன் ஒரு நிரந்தர உடன்படிக்கை உறவை ஏற்படுத்த தேவன் விரும்பினார். தாம் அவர்கள் தேவனாயிருக்கவும், அவர்கள் தம் மக்களாக இருக்கவும் ஆசைப்பட்டார். யாத் 6:7. எப்படிப்பட்ட உறவை தேவனோடும் பிறமனிதர்களோடும் பேணவேண்டும் என்பதை உடன்படிக்கை பிரமாணம் விளக்கியது. ஆசரிப்புக்கூடாரம் என்பது கூடுகையின் இடம், அங்கே தேவனும் மனிதர்களும் சந்தித்துக் கொண்டார்கள். மீட்படைந்து, உடன்படிக்கைமூலம் தேவனோடு நிரந்தமாக இணைவதற்கான வழி ஏற்படுத்தப்பட்ட பிறகே, மக்கள் தேவனுடைய வாசஸ்தலத்திற்குள் அவரிடம் செல்ல வழியுண்டானது.’[1]

அதேசமயம், ஆசரிப்புக்கூடார ஆராதனைகளின் நோக்கத்தை எலன் ஒய்ட் விவரிக்கிறார்: ‘இவ்வாறு ஆசரிப்புக்கூடாரத்திலும், பின்னர் அதற்குப் பதிலாகக் கட்டப்பட்ட தேவாலயத்திலும், கிறிஸ்துவின் மரணம் சம்பந்தப்பட்ட மாபெரும் சத்தியங்கள் அனுதினமும் மக்களுக்குப் போதிக்கப்பட்டன, மேலும் வருடத்திற்கு ஒருமுறை கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடைபெறுகிற மாபெரும் போராட்டத்தின் இறுதி நிகழ்வுகளுக்கு நேராக மக்களுடைய சிந்தைகள் திருப்பப்பட்டன; அது பிரபஞ்சம் பாவமும் பாவிகளும் இல்லாமல் இறுதியாகச் சுத்திகரிக்கப்படவிருந்த நாளைச் சுட்டிக்காட்டியது.’[2]

1 Andrews Bible Commentary: Old Testament, “Exodus” (Berrien Springs, MI: Andrews University Press, 2020), p. 226.

2 Patriarchs and Prophets, p. 358.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

**1** *ஆசரிப்புக்கூடார ஆராதனைகளின் மையமாக இரத்தம்சிந்துதல் இருந்தது. பல வகை மிருகங்கள் பலியிடப்பட்டன. கிட்டத்தட்ட அனைத்து தேவாலயச் சடங்குகளிலும் அவற்றின் இரத்தம் பயன்டுத்தப்பட்டது. அந்த இரத்தம் எதைச் சுட்டிக்காட்டியது? அந்தப் பலிகள் அனைத்தும் இறுதியாக எதைச் சுட்டிக்காட்டின?*

**2** *‘பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்த தேவன் ஆசரிப்புக்கூடாரத்தில் தம் மக்கள்மத்தியில் வாசம் பண்ணினார் என்பதே ஆச்சரியம்தான், அவர் நம்மில் ஒருவராக வாசம் பண்ணுவதற்கு ஒரு மனிதராக வந்தார் என்பது அதைவிட எவ்வளவு பெரிய ஆச்சரியமாக இருக்கவேண்டும்? அது உண்மையிலேயே அன்பின் அற்புதமான வெளிப்பாடு. பிறகு, பாவத்திற்கு பலியாக, அதாவது நமக்குப் பதிலாக மரிப்பதற்காக அவர் தம்மையே கொடுத்தார் என்பதும் அன்பின் வெளிப்பாடுதானே? தேவனுடைய குணம்பற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது? மேலும், தம் நித்திய ராஜ்யத்திற்குள் நம்மைச் சேர்க்க தேவன் எவ்வளவு தூரம் விரும்புகிறார் என்பதுபற்றி இரு என்ன போதிக்கிறது?*

**3** *பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் இயேசு இப்போது நமக்காகச் செய்துகொண்டிருக்கிற ஊழியத்தை பூலோக ஆசரிப்புக்கூடாரம் பிரதிபலித்ததுபற்றி எபி 8:1-6 என்ன சொல்கிறது?*